தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் : 251.

# அரவான் களப்பலி

## இசை நாடகம்

19181



தஞ்சை சரசுவதி மகால் நூலக சங்கம்
தஞ்சாவூர்.

1986] விலை ரூ. 15-00

தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு எண் : 251

# அரவான் களப்பலி

## இசை நாட்டிய நாடகம்

இயற்றியவர்

கவிஞர் வையாபுரிச் சித்தர்

சிறப்புக் கேண்மை பதிப்பாசிரியர்,

**கோ. சேதுராமன், M.A. B.Ed.,**

அம்மாப்பேட்டை - தஞ்சாவூர்.



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூல் நிலைய சங்கம்

தஞ்சாவூர்.

1986. விலை ரூ. 15-00

முதற்பதிப்பு - 1986.

வெளியீடு:- தஞ்சை சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

பதிப்பகம் :- ராம் பிரிண்டர்ஸ்,
மகர்நோம்புச்சாவடி,
தஞ்சாவூர்.

# முகவுரை

கரையேறி மீன்விளையாடும் காவிரி நாட்டு வயல் - வெளிக்கெல்லாம் 'இடைவேளை' என்பதுவே கோடைப் பருவமாகத்தான் இருந்தது. காலப்போக்கில் காவிரி தன்னைச் சுருக்கிக் கொண்டதால், 'இடைவேளை' சற்றே தன்னை நீட்டிக் கொண்டது. மீண்டும் கோடை இடைவேளை மெலிய வேண்டும் - குதூகலித்துக் காவிரி யணை கரைபுரண்டு ஓடிவந்து காவிகளுக்கு வளம் கூட்ட வேண்டும்; எம் மக்கள் வாழ்வுதனில் நலம் கூட்ட வேண்டும்.

வான்பொய்ப்பினும் தான் பொய்யா காவிரி அமைந்த அந்நாள் முதல் இந்நாள் வரை தஞ்சை தரணியில் இசை, நாட்டியம், நாடகம் ஆகிய மென்கலைகளின் வளர் நிலமாக அமைந்திருக்கும் தஞ்சை மாவட்டத்து சிற்றூர் பகுதிகளில் பல நூற்றாண்டுகளாக பலவகையான நாடகங்கள் ஆண்டுதோறும் நடத்தப் பெற்று வரு கின்றன. பாட்டும் கூத்தும் கிராமிய வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து மணம் பரப்பும் மருதநலங்களாக அரிச்சந்திரா, ஸ்ரீவள்ளி போன்ற நாடகங்கள் இன்ற ளவும் இம்மாவட்டத்தில் பரவலாக நடத்தப்பெற்று வருகின்றன.

அரவான் களப்பலி என்ற நாடகம் இவ்வாறாக தஞ்சை மாவட்டத்திலுள்ள மெலட்டூர் பகுதிகளில் 200 ஆண்டுகளுக்கு மேலாக நடத்தப் பெற்று வந்ததென இந் நூல்வழி அறிகின்றோம். அர்ஜுனனுக்கும் நாகக் கன்னிக்கும் மகனாக பிறந்து அங்கலக் கணங்கள் அனைத்தும் ஒருசேர அமையப்பெற்று படர்ந்த தலைய னாய் பால்வடியும் முகத்தினனாய் வளர்ந்து வந்த அந்த அரவான், பாரத யுத்தத்தில் பாண்டவர் வெற்றிக்கென பலியிடப்பட உகந்தவன் என கருதப் பெற்றதனால் கார் மேக வண்ணன் கண்ணனவன் பாண்டவரிடம் அரவானை களப்பலியிட கோரியமாட்டில்.

“ பாராளவேண்டி யாரும் பாலனை பலி வைப்பாரோ
மாநிலம் ஆளவேண்டி பூதலத்தில் உள்ளோர் ஏச
பிள்ளையைக் கொல்லமாட்டோம்.”

என பாண்டவர் பாசத்தினால் பரிதவிக்க பாஞ்சாலி துடி துடிக்க கிருஷ்ண பெருமான் தமது வார்த்தை லாவகத் தால் அவர்தம் துயரம் களைந்து அரவானைக் களப்பலி யிட சம்மதம் பெறுகிறார். அரவான் களப்பலிக்கு தன்னை ஆட்படுத்திக் கொள்வதற்கு முன், பாரதப் போரின் முடிவுவரைதான் உயிருடன் இருந்து காண வரம் கொடுத்ததாக கூறும் அமைப்பினை கொண்டதாக இந் நாடகம் அமைந்துள்ளது.

200 ஆண்டுகட்கு முன்பு கவிஞர் வையாபுரி அவர்கள் இயற்றிய இந்நாடகம் இன்றளவும் தஞ்சை மாவட்டத்து சிற்றூர்களில் நடைபெற்று வருவது போற்றுதலுக்குக் குரியதாகும். எளிய தமிழ் நடையில் எழுத்து நலம் கல்லாதாரும். ஏடுபல கற்றாரும் ஒருசேர உணர்ந்து மகிழத்தக்க வகைதனில் நாடகம் அமைக்கப் பெற்றுள்ளது. இயல், இசை, நாடக பாங்குகளை உள்ளடக்கி காண்போரின் கண்ணுக்கும் கருத்துக்கும் வள மூட்டும் வகையில் நாடக முத்திரைகள் பாத்திரங்களின் வாயிலாக பரிணமிப்பதைப் பார்க்கிறோம். ஐம்புலன் களுக்கும் விருந்தாகும் இந்நாடகம் ஆராய்விற்கு இன்னும் வாய்ப்பளிக்கும் வகையில் சிற்சில இடங்களில் முரண்பாடுகளையும் தன்னகத்தே கொண்டதாக அமைந் திருப்பது, நாடகத்தின் பலவீனம் அல்ல, அதுதான் நாடகத்தின் பலம் எனக் கொள்வதே நலம்.

பதிப்பாசிரியர் திரு. கோ. சேதுராமன் அவர்கள் அரவான் களப்பலி நாடகத்தை நேரில் கண்டும், சான்றோர் பலரோடு கலந்துரையாடி அரவான் களப்பலி குறித்த சில முரண்பாடுகளுக்கு விளக்கம் கொடுத்தும் கிடைத்துள்ள நூல் ஆதாரங்களின் அடிப்படையில் சில இடங்களில் தெளிவுரை வழங்கி இந்நூலினை அழகுற

வடித்துள்ளார். ஆசிரியரின் பெருமுயற்சிதனை நாடக உலகம் பாராட்டும் என்பது திண்ணம். அவர்தம் முயற்சி வெற்றியடைந்துள்ளமைக்காக என் மனம் நிறைந்த பாராட்டுக்களை உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

நூல் வெளியிடப் பெற நிதியுதவி வழங்கிய மத்திய அரசிற்கு எனது மனம் நிறைந்த நன்றியறிதலை உரித்தாக்குகின்றேன். இலக்கியப் பணி போற்றி எங்கள் சரஸ்வதி மகால் வளர்ச்சியை கண்ணெனக் காத்துவரும் தமிழக அரசிற்கு எங்களது இதயபூர்வ நன்றிதனை என்றென்றும் உரித்தாக்குகிறேன்.

**மா. இராமு, இ. ஆ. ப.,**
மாவட்டாட்சியர் மற்றும் இயக்குனர்
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்.
17—7—87

# பதிப்பாசிரியர் உரை

மகாபாரதப் பெருங்கதையில், அர்ச்சுனனின் மகனாகக் காட்டப் பெறும் அரவான் எனும் ஒரு சிறு பாத்திரத்தை மையமாகக் கொண்டது இந்த இசை நாட்டிய நாடக நூல்.

கண்ணனுக்கு நிகரான உருவ அமைப்பும் கன்னனுக்கும் மேலான கொடைத் திறமும் இணை எவரும் கூற இயலாத வீரமும் கொண்டவன் இவ்வரவான்.

சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் மேலாக, தஞ்சை மாவட்டத்தின் மெலட்டூர் மற்றும் அதனை அடுத்துள்ள கரம்பை, கோடுகிழி, ஏர்வாடி ஆகிய கிராமங்களில் இன்றளவும் ஆண்டுதோறும் நடத்தப் பெற்றுவரும் ''அரவான் களப்பலி'' எனும் இவ்விசை நாட்டிய நாடகத்தை இயற்றியவர் கவிஞர் வையாபுரிச் சித்தர் என்பராவார்.

வில்லி புத்தூரரின் பாரதக் கதையில் அரவானைக் களப்பலியிட்ட செய்தி உள்ளது. இதுபற்றிய விரிவான விவரங்கள் இந்நூல் உள்ளன.

அரவானின் வழிபாடாக தற்போது நிலவிவரும் நிகழ்ச்சி பற்றியும், திரௌபதியம்மன் கோயில் தொடர்பான பல விழாக்கள் பற்றிய செய்திகளும் இங்கு தொகுத்தளிக்கப் பெற்றுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில், நூறு ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து ஆண்டுதோறும் நடத்தப்பெற்று வரும் நாடகங்கள் பல உள்ளன. இவை தமிழ்பேசும் மாநிலத்தின் தனித்தன்மையை வெளிக்காட்டுவன வாகும். தமிழரின் உயர்ந்த பண்பாடுகளை வெளிப்படுத்து வதோடு, தமிழ் மக்களிடையே இசை, மற்றும் நாட்டியக் கலையின் வளர்ச்சி எவ்வாறு இருந்தன என்பதற்கு

சான்றுகளாகவும் விளங்குவனவாகும். இவைகளை இயற்றிய ஆசிரியர்களும் இயக்கிய நாடகக் கலை வல்லுனர்களும், உலக அளவிலான நாடக அரங்குகளின் முழுப் பரிணாம வளர்ச்சிக்கு அடிப்படை அமைத்தவர்கள் எனின் அது மிகையாகாது.

நாடகக் கதைக்கும், நாடகமேடைக்கும் நடிகனுக்கும் மட்டும் அல்லாது நாடகத்தைக் காணவரும் இரசிகனுக்கும் கூட இலக்கணம் வகுத்தது நம் பாரதநாடு ஒன்றே! இதனை உணர்ந்த நம் தமிழ் நாடகயியல் முன்னோர்கள் ரசிகனையும் நாடகத்தோடு இணைத்தே இயங்கும்படி நமது சென்ற இருநூற்றாண்டு கால நாடகங்களை இயற்றி இயக்கியுள்ளனர் என்பதை இந்த இருபதாம் நூற்றாண்டில் நாடக இயலில் புதுமை என்ற பெயரில் புது இலக்கணம் வகுக்கும் நாடகத்துறை வல்லுனர்கள் சிந்தனையில் கொள்ளவேண்டும்.

பத்து மணி நேரம் தொடர்ந்து நாடகம் நடத்தினாலும் சோர்வடையாத ரசிகர்களைக் கொண்ட நாடகங்களைப் படைத்த தமிழகம் இது. இதற்கான சான்றுகளில் ஒன்றாக அமைவதே இந்நூல்.

இந்நூல் வரலாற்றுப் புகழ்பெற்ற சரசுவதி மகால் நூலக வெளியீடாக அமைவதில் நான் பெரும் பெருமை கொள்கிறேன்.

இந்நூலைப் பதிப்பிப்பதற்கான ஆணையிட்ட முன்னாள் மாவட்ட ஆட்சியரும் சரசுவதி மகால் நூலக இயக்குநருமான உயர்திரு **T. R. இராமசாமி,** இ.ஆ.ப. அவர்களுக்கும் இந்நூலோடு முகவுரை தந்துதவிய தற்போதய மாவட்ட ஆட்சித்தலைவரும் நூலக இயக்குனருமான உயர்திரு. **[illegible]. இராஜு,** இ. ஆ. ப. அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பதிப்பிற்கு ஊக்கமும்

ஆக்கமும் அளித்துதவிய நூலக நிர்வாகப் பொறுப்பிலிருக்கும் திரு. **அ. பஞ்சநாதன்**, எம். ஏ. பி. லிப்சி அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நாடகத்தின் மூலச்சுவடி கிடைக்கப்பெற பெரிதும் உதவிய கரம்பை திரு. **அர்ச்சுனன்** ஆசிரியர் அவர்களுக்கும் இந்நூலை சிறந்த முறையில் அச்சிட்டளித்த **தஞ்சை ராம் பிரிண்டர்ஸ்** அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதில் காணும் குறைகளைச் சுட்டின் நன்றியுடையவனாவேன்.

இங்ஙனம்,

**கோ. சேதுராமன்,**

சிறப்புக் கேண்மை பதிப்பாசிரியர்,

அம்மாபேட்டை - தஞ்சாவூர்.

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்கு முன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, ''நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்'' என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

தஞ்சாவூர்,
18-12-86.

மா. இராசு, I.A.S.,
மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

# பொருளடக்கம்


1. முன்னுரை I
2. வையாபுரிச் சித்தர் I
3. நாடகக் கதை III
4. வியாசர் கூறுவது V
5. வில்லிபாரதம் VI
    1. பால பாரதம்
    2. நல்லாப் பிள்ளை
    3. பாரத வெண்பா
    4. மகாபாரத வசன காவியம்
6. வில்லிபாரதத்தில் நாடகக் கதை VII
7. யாமளம் VIII
8. பிற செய்திகள் X
9. சில முரண்பாடுகளும் விளக்கங்களும் XI
10. அரவானின் சிறப்பு XII
11. நாடக வகை XIV
12. நூலின் சுவை XVI

13. சுவடிப் படி 1 - 132
14. பாத்திரப் படைப்பு 133
15. கோணங்கி 134
16. மெலட்டூர் 136
17. இராகங்களும் தாள ஜதிகளும் 137
18. கோயிலும் விழாக்களும் 139
19. அரவானும் அலிகளும் 155

20. சொல்லடைவு 158
21. பயன் பெற்ற நூல்களின் பட்டியல் 169

# முன்னுரை

உலகெலாம் பரந்து வாழும் உயிர்கட்கெல்லாம் அன்னையும் தந்தையுமாகி அருட்செய்யும் தனிப்பெருங் கருணையாளனை ஒரு காலகட்டத்தில் சிவன் எனவும் திருமால் எனவும் பாகுபடுத்திக் கொண்டனர். இவ் வாறு வேறுபட்ட எண்ணங்களினால் திருமாலை முதல் வனாகக் கொண்டு பலநூல்களும், சிவனையே தலைவ னாகக் கோண்டு அநேக நூல்களும் படைக்கப் பெற்றன என்ற வகையில் மொழிக்கும் கலைக்கும் பெரும்பயன் கிட்டியது எனலாம்.

இருபெரும் இதிகாசங்களான இராமாயணமும் மகா பாரதமும் தம்முள் ஆயிரக்கணக்கிலான துணைக் கதை களைக் கொண்டுள்ளன. இவைகளின் மூலம் கிடைக்கப் பெறும் செய்திகளில், மனிதச் செயலுக்கு அப்பார்பட்ட செய்திகளை மட்டும் நீக்கிவிட்டு காலத்திற்கேற்ப, அக் கதைகளில் அமைந்துள்ளதும் மறைந்துள்ளதுமான உயர்ந்த நீதிகளை தேர்ந்து ஏற்பதே சிறப்பாகும்.

## 2. ஆசிரியர் வையாபுரிச் சித்தர்

மகாபாரதத்தின் ஒரு பகுதியாகவும் வில்லிப்புத்தூ ராரின் பாரதக் கதைப் படைப்பில் மட்டுமே உள்ளது மான 'அரவான் களப்பலி' என்னும் ஒருசிறிய நிகழ்ச்சி யானது இந்நூலில் ஒரு இசை நாடகமாக அளிக்கப் பெறுகிறது.

இதனை இயற்றியவர் வையாபுரி என்பவராவார். இவர் தம்மைக் கவிஞர் எனவும் சித்தர் எனவும் குறிப் பிட்டுக் கொள்கிறார். எனவே இவரைக் "கவிஞர் வையாபுரிச் சித்தர்" என்போம்.

இவர் வாழ்ந்த காலத்தை நிர்ணயித்துக் கூற இயல வில்லை. வழித்தோன்றல்கள் எவரும் தற்போது இல்லை.

இவர் வாழ்ந்த இடம் தஞ்சை டாவட்டத்து 'மெலட்டூர்' எனும் சிற்றூர் ஆகும். இம் மெலட்டூரை அடுத்த கோடு கிழி, ஏர்வாடி, கரம்பை ஆகிய கிராமங்களில் இன்ற ளவும் இவரது இவ் வரவான் களப்பலி இசைநாடகம் ஆண்டுதோறும் திரௌபதி அம்மன் கோவிலின் தீமிதி உற்சவத்தை ஒட்டிய நிகழ்ச்சிகளில் ஒரு அங்கமாக நடத்தப்பெற்று வருகிறது.

இவர் தமது இசைநாடகப் படைப்பில் பல இடங் களில் சிவனையே சிறப்பித்துக் கூறுவதை நுணுகி நோக்கி அறியலாம்.

இவரது மாணாக்கர்களின் வழிவந்த ஒருவரான அ. குப்புசாமி வன்னியர் என்பாரின் சமாதி மேடை ஒன்று மெலட்டூர் திரௌபதியம்மன் கோவிலின் தென் புறத்திடலில் அமைந்துள்ளது. இவர் காலமாகி சுமார் ஐம்பது ஆண்டுகளாகின்றன. மேலும் பல ஆண்டுகளுக்கு முன் இவ்வையாபுரி என்பார் வாழ்ந்திருத்தல் கூடும் என்ற வகையில் நோக்கின் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் இவர் வாழ்ந்திருக்க கூடும் என அறிய முடிகிறது.

மேலே கூறப்பட்ட திரு. குப்புசாமி வன்னியர் என் பாரின் வழிவந்த மாணாக்கர்களே தற்போது மெலட்டூர், கோடுகிழி, கரம்பை, ஏர்வாடி ஆகிய கிராமங்களில் ஆசிரியர்களாக இருந்து நாடகத்தை நடத்தி வருகின் றனர்.

இவ்வாசிரியரின் காலத்தை 18; 19ஆம் நூற்றாண் டின் இடைப்பட்ட பகுதியாகக் கொண்டால் இவர் காலத்தில் இசை நாடகங்கள் பலவற்றை இயற்றி யோர்கள் பலரும் அந்நாளில் தஞ்சையை ஆண்ட மன்னரை வாழ்த்தி தமது படைப்பில் குறிப்பிட்டிருப்பர்.

அல்லது வேறு யாரேனும் பெருஞ்செல்வர் வேண்டிக் கொண்டதன் பேரில் தாம் இயற்றியதாக குறிப்பிட்டிருப்பர். ஆனால் இவ்வாறான குறிப்புக்கள் ஏதும் இவரது படைப்பில் கிடைக்கப் பெறவில்லை. எனவே தாமே தமது சொந்தப் பொறுப்பில் இந்நாடகத்தை இவர் இயற்றியுள்ளார் எனலாம்.

இந்நாடகத்தை இயற்றிய ஆசிரியர் திரு வையாபுரி அவர்கள் தமது படைப்பில் தாம் இன்ன நூலினின்றும் மூலக் கதையைப் பெற்று நாடகமாக்கினேன் எனத் தெளிவாக ஏதும் குறிப்பிடவில்லை. எனினும் இந்த அரவான் களப்பலி எனும் கதை வில்லி பாரதத்தில் மட்டுமே உள்ளது. வியாசர் அரவானைப் போருக்கான முதற்பலியாக இடப்பெற்றதான செய்தி ஏதும் கூற வில்லை. ஆகவே நாடகம் எழுதத் துவங்கியபோது இவ்வாசிரியர் தமிழ்மொழியின் பேரில் பெருமதிப்பும், நம்பிக்கையும் கொண்டு வில்லி பாரதத்தை மட்டுமே துணையாகக் கொண்டு நாடகத்தை இயற்றியுள்ளார் என்பதனை நோக்கும் போது இவரின் தமிழ்ப்பற்று பாராட்டிற்குரியதாகிறது.

இனி இந்நூலின் கண் அமைந்துள்ள நாடகக்கதை சார்ந்த விவரங்களை அறிய முயல்வோம்.

### 3. நாடகக்கதை :

இந்நூலில் படைக்கப் பெற்றிருக்கும் இசை நாடகத்தில் பாண்டவர்கள் சூதில் தோற்று, துரியோதனன் விதித்தபடி பதின்மூன்று ஆண்டுகள் காடுரைந்து பின் நாடு திரும்பி ஸ்ரீ கிருஷ்ணனை தூதாக விடுத்து பாதிப் பகுதி நாட்டை தன்னிடம் திருப்பிக் கேட்டபோது அவன் ஈ ஒட்ட இடமும் ''தர இயலாது'' அவனாலே ஆனால் அவன் சீமை, என்னாலே ஆனால் என் சீமை''

என்பதாகக் கூறிவிட்டான் எனவே போர் என்பது உறுதியாகி விட்டது. இனிப் போரைத் துவக்குவதற்கு முன்பதாக போர்க்கள தேவதையாகிய ரணபத்ரக் காளிக்கு ஒரு சிறந்த ஆண் மகனை யாமள நூல் முறைப்படி பலியிடுவது வழக்கம்: அவ்வாறு பலியிட ஏற்றவர்கள் இருவரே அவர்களில் ஒருவன் கண்ணன், மற்றொருவன் அர்ச்சுனனுக்கு நாக கன்னிகை மூலம் பிறந்த அரவான் என்பவன். இவ்விவரங்கள் யாவும் நாடகத் துவக்கத்தில் பின்னனியாய் இருக்க, கண்ணன், தருமர், பீமன், அர்ச்சுனன் நகுலன், சகாதேவன், பாஞ்சலி ஆகிய அறுவரையும் தனித்தனியே சந்தித்து அரவானைப் பலியிடுவது பற்றிக் கேட்கும் பகுதியில் நாடகம துவங்குகிறது. இவ்வறுவரும் அரவானைப் பலியிட்டு நாடாள வேண்டும் என்பது வேண்டாம் நாங்கள் மறுபடி கானகத்திற்கே சென்று விடுகிறோம் என்று கூறுகின்றனர். பின்னர் கிருஷ்ணன் சூதாகப் பேசி அவ்வவர் தம் வெஞ்சினம் முடிப்பதெப்படி எனக் கேட்டு அவர்கள் கொண்ட துயரம் நீக்கி அரவானை பலியிடச் சம்மதம் பெற்றுப் பின்னர் அரவானிடம் சென்று பலிக்குவரும்படி கிருஷ்ணன் அழைக்க அவனும் தமது ஐந்து தந்தைகளிடத்தும் சொல்லிக் கொண்டு தயாரிடத்தும் உத்தரவு பெற்றுக்கொண்டு முழுமனச் சம்மதத்துடன் கூட பலியாக வந்து கண்ணனிடம், தான் முதல்நாளே பலியாகிவிட்டாலும் பதினெட்டு நாட்கள் நடைபெற உள்ளபோரையும்தான் காணும்படி வரம் தரும்படிக் கேட்கிறான். அவ்வாறே வரமும் கொடுத்து பின்னர் அவனைக் காளிதேவிக்கு யாமள முறைப்படி பலியிடுகிறான். இதுவே நாடகக் கதை. இனி இக்கதைப்பகுதி வில்லிபாரதத்திலும் மற்ற நூல்களிலும் எவ்வாறு குறிப்பிடப் பெற்றுள்ளதென்பதைக் கவனிப்போம்.

## 4. வியாசர் கூறுவது:

வடமொழியில் அமைந்த வியாசரின் பாரதம் 18 பருவங்களை உடையது. அரவான் பற்றிய விவரங்களை மட்டும் இங்கு காண்போம்:

திரௌபதியும் தருமரும் இருக்கக்கூடிய மாளிகையில், போகக் கூடாத சமயத்தில் நுழைந்துவிட்ட காரணத்தால் அர்ச்சுனன் ஓர் ஆண்டுகாலம் தீர்த்த யாத்திரை போகவேண்டியதாயிற்று. அவ்வாறு தீர்த்த யாத்திரை சென்றபோது பாகீரதி நதியில் நீராடச் சென்றான் அப்போது ஐராவதக் குடும்பத்தைச் சேர்ந்த கௌரவ்யன் எனும் நாகராசனின் மகளான உலூபி என்பாளைக் கண்டு காதல்கொண்டு கடிமணம் புரிந்து அவளுடன் சில நாட்கள் தங்கி இருந்தான். இவ்வுலூபிக்குப் பிறந்தவனே அரவான் என்பவன். பின்னர் அந்நாகக் கன்னி அர்ச்சுனனுக்கு இரண்டு வரங்கள் கொடுத்தாள் முதல் வரத்தின்படி நீர்வாழ் பிராணிகள் அனைத்தும் அர்ச்சுனனின் கட்டளைக்குக் கீழ்ப்படியும் எனவும் இரண்டாம் வரத்தின்படி நீரில் மூழ்கினாலும் பார்வை நன்கு தெரியும் எனவும் ஆயிற்று. இவ்வளவில் இச் செய்திகள் இருக்க. அத் - 45 வரி 69 71ன்படி முதல் நாள் போரில் 'ஸ்ருத்யு' என்பவனுடன் நேருக்கு நேர் ஒன்றியாகப் போர் செய்தான் எனவும், பீஷ்ம பருவம் அத் - 83 - 18 - 22ன்படி விந்தா - அனுவிந்தா என்பவர்களைத் தோற்கடித்தான் எனவும், அத் - 90; 27-46ன் படி. சகுனியின் ஐந்து சகோதரர்களையும் அரவான் கொன்றான் எனவும் வரி 76ன் மூலம் அலம்புஷன் என்பவனுடன் போர்செய்து அவனால் கொல்லப்பட்டான் எனவும் செய்திகள் கிடைக்கின்றன. ஆனால் களப் பலியாக அரவானையிட்ட செய்தி ஏதும் கூறப் பெறவில்லை. இனி வில்லிப்புத்தூராரும் பெருந்தேவனார் போன்றோரும் கூறியுள்ள செய்திகளை காண்போம்.

## 5. வில்லிபாரதம்

வியாசரின் பாரதம். 1. ஆதிபருவம் 2. சபாபருவம் 3. ஆரண்யபருவம் 4. விராட பருவம் 5. உத்தியோக பருவம் 6. பீஷ்ம பருவம் 7. துரோண பருவம் 8. கர்ண பருவம் 9. சல்லிய பருவம் 10. ஸௌப்திக பருவம் 11. ஸ்திரீ பருவம் 12. சாந்தி பருவம் 13. அனுசாஸன பருவம் 14. அஸ்வமேத பருவம் 15. ஆச்ரம பருவம் 16. மௌசல பருவம் 17. மகாப்ரஸ்தான பருவம் 18. ஸ்வர்கா ரோஹணப் பருவம் எனும் பதினெட்டுப் பருவங்களை உடையது. இவற்றில் முதற் பத்து பருவங்களிலின்றும் சாரமான பகுதிகளை மட்டும் எடுத்துக் கொண்டு வில்லிப்புத்தூரார் தமிழில் அளித்தார் என்பர். எஞ்சிய எட்டுப் பருவங்களை வில்லிப்புத்தூராரின் மைந்தர் 'வரந்தருவார்' என்பவர் பாடி முடித்தார் என்பர். இவ்வெட்டுப் பருவங்களை அரங்கநாத கவிராயர் என்பார் இரண்டச்யிரத்தைநூறு செய்யுட்களாகப் பாடியுள்ளார்.

**பால பாரதம்:-**

சுமார் பதின்மூன்றாம் நூற்றாண்டில் வடமொழி அறிஞரான அகஸ்திய கவி என்பவரால் வடமொழியில் ''பத்ய காவியமாக'' பாண்டவர் சரிதம் எழுதப்பெற்றுள்ளது. இது இருபது சருக்கங்களைக் கொண்டது. குலமுதல்வனாகிய சந்திரன் பிறப்பு முதல், யுத்தம் முடிந்து பஞ்சபாண்டவர்கள் சுவர்க்கலோகம் சேர்ந்த வரையிலான முழுமையான சரித்திரத்தைக் கூறுவது இந்நூல். இப்பால பாரதத்திலுள்ள முதல் ஆறு சருக்கங்களை மாற்றம் ஏதுமின்றி வில்லிபுத்தூராழ்வார் மொழி பெயர்த்துள்ளார் என வடமொழியும் தமிழ் மொழியும் நன்கறிந்த அறிஞர்கள் கூறுவர். புதிதாக இந்நூலைக் காண்பவர்க்கு இதுஒரு மொழிபெயர்ப்பு நூல் எனத்

தோன்றாதவாறு தன் சொந்த திறமையுடன், தமது படைப்பை அளித்திருப்பதன் மூலம் வில்லிபுத்தூரின் தமிழ்த்திறம் பாராட்டிற்குரியதாகிறது.

**நல்லாப்பிள்ளை**

வில்லிபுத்தூர் ஆழ்வார் பாடியுள்ள 4351 பாடல்களோடு கூட 10, 377 பாடல்களைப் புதிதாகப் பாடிச் சேர்த்து விரிவாய் மாபாரதக் கதையைப் படைத்தவர் நல்லாப்பிள்ளை என்பவராவார். இவர் சுமார் இரு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவராவார்.

**பாரத வெண்பா :**

பெருந்தேவனார் பாரதம் எனும் பாரத வெண்பா 1925ல் அச்சிட்டு வெளியிடப் பெற்றுள்ளது பாரதக் கதை பகுதிகளை மிக விரிவாக அளிக்கக் கூடிய இதன் கண்ணும் பாடல்கள் 43 முதல் 453 முடிய உள்ள பகுதியில் இவ்வரவான் களப்பலிச் செய்தி உள்ளது.

**மஹாபாரத வசன காவியம் :**

என்னும் ஒரு மூன்று தொகுதிகளைக் கொண்ட நூல் 1885ல் முத்துச்சாமி முதலியார் அவர்களால் அச்சிட்டு வெளியிடப் பெற்றுள்ளது. இந்நூல் அனைத்துப் புராணங்கள், வேதங்கள் மற்றும் அநேக பழமொழிகள் ஆகியவைகளைக் கொண்ட மிக விளக்கமாக பாரதக்கதை கூறுவதாகும்.

**வில்லிபாரதத்தில் நாடகக் கதையின் பகுதி :**

இவ்வரவான் களப்பலி எனும் பகுதி வில்லி பாரதத்தில் உத்தியோக பருவத்தில், படையெழுச்சிச் சருக்கத்திற்குப் பின்னர் முகூர்த்தங் கேள்விச் சருக்கத்

திலும் களப்பலியூட்டுச் சருக்கத்திலும் (5+8) 13 செய்யுட்களில் கூறப்பெற்றுள்ளது.

**யாமளம் :**

இங்கு 'யாமளம்' எனும் ஒரு நூல் குறிப்பிடப் பெறுகிறது. எட்டாம் செய்யுளிலில் " யாமளத்தின்படி பகடாதியாக வேண்டிய பலிகள் ஈந்து" என்ற வரிகள் மூலம் களப்பலி இடப்பெற வேண்டிய முறைகளை **யாமளம்** எனும் நூல் கூறுவதாகத் தெரியவரும். மேலும் விரிவுரையாளர்கள் இந்த யாமளம் என்பது நான்காம் வேதமாகிய அதர்வண வேதத்தின் ஒரு பகுதி எனவும் கூறியுள்ளனர்.

யாமளை என்பவள் காளி என்பர். இக்கொடுந் தெய்வத்திற்கு உயிர்ப்பலிகள் இடுவது மரபு இப்பலி களைப் பற்றியும் இந்த யாமளையை வழிபடும் நெறி யற்றியும் கூறுவதே யாமளம் என்பர்.

வில்லிபாரதத்தின், விராட பருவத்தின் நாடுகரந் துரைச்சருக்கத்தின் ஒன்பதாவது பாடலில் "யாமள மறையால் யாவரும் பணி, வான் எழுவகைத் தாயரில் ஒருத்தி சாமள வடிவோடு அந்நகர் வாழ் வாள், சங்கு தண்டம் கையில் தரிப்பாள், கோமளவல்லி, கொடி நிகர்க் காளி" என்னும் வரிகள் மூலம் மேலும் சில செய்திகளை அறியலாம் மேலும் பதினாறாம் நாள்போர்ச் சருக் கத்தில் "அருகு நடிப்பன, அலகைகள் பாடுவ யாமள வாரணமே" என்ற வரிகள் மூலமும் யாமளம் பற்றிய செய்திகளை அறிய முடிகிறது.

(முத்துச்சாமி முதலியாரின் வசன பாரதத்தில் மிக விரிவாக இதன் விரவம் அளிக்கப்பெற்றுள்ளது.)

## நாடகக் கதைப் பகுதி

கண்ணன் தூதிற்குப்பின் போர் முடிவாகிறது தருமனும், துரியோதனனும் தத்தமக்குரிய பகை முடித்தற் பொருட்டு சேனை திரட்டுகின்றனர் (படையெழுச்சிச் சருக்கம்) போர் துவக்குவதற்குமுன் தாம் வெற்றியடைய வேண்டி போர்க்குரிய தெய்வமாகிய ரணபத்திரக்காளிக்கு பலியிடுவது மரபு - அதுவும் இங்கு ஆணிற்சிறந்த் தவறேதும் செய்யாத ஒருவனை இடவேண்டும்.

துரியோதனன் தனக்கு வெற்றியுண்டாகும் பொருட்டு களப்பலியிட ஏற்ற ஆண்மகனையும் நேரத்தையும் அறியும் பொருட்டு வீடுமனைக் கேட்க. வீடுமன் - நல்ல நேரத்தினைக் குறித்துக் கூற வல்லவன் சகாதேவன் எனவும் - விரோதியானாலும் சோதிடநூலுக்குப் புறம் பாக கூறமாட்டான். ஆகவே கடிதில் சென்று சகா தேவனிடம் நாளும் பொழுதும் கேட்டறிந்து வரும்படி கூறுகிறார். உடனே துரியோதனன் - விஸ்வகர்மா வினால் செய்யப்பெற்ற அன்னப்பறவை வடிவுடைய யந்திர விமானமேறி சகாதேவன் இருப்பிடம் சென்ற டைந்தான். சுற்றத்தாரைப் பேதமாகக் கொள்ளாத வனாகிய அச்சகா தேவனும் துரியோதனனை அன்புடன் வரவேற்று வந்த காரியத்தை விசாரித்து ''தநுர்மாத மாகிய மார்கழி மாதத்தில் சூரியனைச் சந்திரன் கூடிய நாளாகிய அமாவாசைத்தின இரவில் போர்க்களத்திற் குரிய பலியைக் கொடுத்தால் அல்லாது வெற்றி பெற இயலாது என்ற உண்மையை உரை செய்தான்.

இவ்வாறு விஷயத்தைத் தெரிந்துகொண்ட துரியோ தனன் பாண்டவர்களுள் நடுவனான அர்ச்சுனனின் குமாரனாகிய படம் பொருந்திய தலையை உடைய இரவானிடத்திற்குப் போய் ''இவ்வளவும் யார் பாலும்

சென்று இரந்தறியேன் செவ்வி வரந் தருவாய்'' (பாரத வெண்பா) என வேண்டினான். அதற்கு அரவானும் மறுப்பு ஏதும் கூறாது துரியோதனை வணங்கி ''என்னை நீ பலியூட்டுக'' என்றான். இதனால் மகிழ்ச்சி அடைந்த துரியோதனன் வீடுதிரும்பினான்.

அமாவாசை அன்றய தினத்தில் தான் பலியாக வருவதாக துரியோதனனிடம் அரவான் வாக்குக் கொடுத்திருந்தான். ஆனால் கண்ணன் செய்த சூழ்ச்சியால், (சூரியனும் சந்திரனும் ஒருவரை ஒருவர் சந்திக்கும்படி செய்த செயல்) அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசி அன்றய தினமே அமாவாசை என்றாகும்படிச் செய்து அரவானையும் சமாதானம் கூறி அழைத்து வந்து பாண்டவர்க்காக வேண்டி களப்பலியிட்டான்.

பலியாவதற்குமுன் கண்ணனிடம் அரவான், ''காய் அமர் சில நாள் கண்டு, முடிய நேரலர் வெம்போரின் முடிவெனக் கருளும்'' என்பதாக ஒருவரம் கேட்டான் அவ்வாறே கண்ணனும் வரம் கொடுத்தான். இவ்வாறு நூல் வழிக் கதை உள்ளது.

**பிற செய்திகள்:**

வடமொழியில் பாரதக் கதையைப் பாடிய வியாசர் அரவானைக் களப்பலியாக இட்டதாக கூறாதிருந்தும் வில்லிபுத்தூரார் தாம் செய்த வழிநூலில் இப்புதிய செய்தியைக் காலமரபுக்கேற்றவாறு செய்துள்ளார். மேலும் இவ்வரவான் கதையைப் பொறுத்த வரை வில்லி புத்தூராரிலேயே சில கூறப்படாத பகுதிகள் உள்ளன.

1. நாக கன்னிக்கு அர்ச்சுனன் மூலம் அரவான் பிறந்ததாகக் கூறப்பெற்றுள்ளதேயன்றி அவன் யாரிடம் என்ன வகையான போர்க்கலையைக் கற்றான் என்பதற்கான விவரம் ஏதும் இல்லை.

2. போர் துவங்குவதற்கு முதல் நாளே பலியிடப் பெற்றவன் எட்டாம் நாள் போரில் கலந்து கொள்வதாக வருவது - மேலும்.

(3) போரின் முடிவுவரை உயிருடன் இருக்க வேண்டுமென்ற வரம் கேட்டுப் பெற்றவன் எட்டாம் நாட் போரிலேயே மாண்டதாக கூறப் பெறுவது. ஆகிய சில விளக்கமற்ற செய்திகள் உள்ளன. மேலும் இது போன்றே, துரியோதனனுக்கு திருமணம் ஆனசெய்தி, கர்ணனுக்குத் திருமணம் ஆனசெய்தி, ராஜ்மண்டபத்தில் சூளுரைத்த பாஞ்சாலி தன் உரையின்படி விரித்த கூந்தலை எப்போது முடித்தாள் என்பதற்கான விவரங் கள் கூட வில்லியில் கிடையாது.

வியாசர் பாடாத கதையை இவர் பாடியது போன்று கம்பரும் வால்மீகி கூறாத இரணியன் கதை, மாயாசன கன்படலம் ஆகியவற்றைத் தன் படைப்பில் புதிதாக இணைத்துள்ளார் என்ற செய்தின் மூலம் அந்நாளில் வடமொழி மூலநூலை அவ்வவர் தத்தம் திறமைக் கேற்ப புதுமை செய்து படைத்தனர் என்பதை அறியலாம்

**சில முரண்பாடுகளும் - விளக்கங்களும்**

இந்த அரவான் களப்பலிக் கதையில் உள்ள முரண் பாடுகளைத் தீர்க்க நூல்வழி ஆதாரங்கள் ஏதுமில்லை. எனவே பாரதக்கதை நன்கு அறிந்துதேர்ந்த அறிஞர்கள் மூலம் சில செய்திகள் திரட்ட வேண்டியுள்ளது.

அரவான் முதல் நாள் போருக்கு முன்னரே பலியிடப் பெற்ற முறையை கவனிப்போம். பலி என்பது கழுத்தைத்

தனியே வெட்டியிடப்பெற்றதல்ல. அரவானே மனமுவந்து தன் உடல் உறுப்பினின்றும் முப்பத்திரண்டு பகுதிகளில் சிறுசிறு அளவு தசைகளை அறுத்துக் காளிக்கு அளித்தான். இவ்வாறு அளித்த பின் உடல் வலுவிழந்து மயக்க நிலையில் தரையில் வீழ்ந்தான். பின்னர் திரௌபதியாகிய பாஞ்சாலி காளியிடம் கேட்டுக் கொண்ட வரத்தின்படி அரவான் உடல் வலிமைப் பெற்றான். பின்னர் எட்டாம் நாட்போரில் ஆயுதமேந்தியும், மாயா ஜாலங்கள் செய்தும் போரிட்டான் அப்போரில் அலம்புசன் என்பவனால் கொல்லப்பட்டான் என்றாலும் முற்றிலும் உயிர் நீங்காது கண்ணில் உயிர்நிலை நிற்குமாறிருந்து கண்ணனிடம் பெற்ற வரத்தின்படி பதினெட்டு நாள் போரின் நிகழ்ச்சிகளையும் கண்டு பின் உயிர் நீத்து விண்ணடைந்தான் என்பர்.

## 10. அரவானின் சிறப்பு

அர்ச்சுனனுக்கும் நாககன்னிகைக்கும் பிறந்தவனாகிய அரவான் உருவத்தில் முப்பத்திரண்டு அங்க இலட்சணங்களும் பொருந்தியவன் - உடலில் உரோமங்கள் எதிர்த்து வளர்ந்த அமைப்புடையவன். கண்ணனைப் போன்ற நீலமேக வண்ணமுடையவன் படம் பொருந்திய தலையினை உடையவன். இப்படிப்பட்ட உயர்ந்த உருவ அமைப்பு பொருந்தியவனை பலியிட ஏற்றவன் என்று துரியோதனனிடம் நாளும் நேரமும் வைத்துக் கொடுத்தவன் சகாதேவன்.

''ஒன்ற நம் படைகள் எல்லாம் ஒருபகற் பொழுதில் கொல்வான் இன்று அன்னிராவான் என்பான் - நீ அவன் தன்னை வேண்டில், 'கொன்று என்னைப் பலி கொடு' என்று கூறும் - அக் குமரற் கொன்றால் வென்று னக் கரசும் எய்தலாம், விரைவில்'' என்ற இவ்வரிகள் மூலம் இவ் வரவானின் தனித்த வீரம் பேசப்படுகிறது.

இவனது எதிரிப்படைகளை மட்டுமின்றி தன்பக்கமுள்ள படை வீரர்களையும் சேர்த்து ஒரே பகற் பொழுதில் கொன்றுவிட வல்லவன். (ஆகவே இவனை விட்டு வைத்தால் பதினெட்டு நாட்கள் போரை நடத்தி அவ்வவர் தம் வெஞ்சினம் முடிக்க இயலாது - எனவே போர் துவங்கும் முன்னரே இவனைப் பலியிட்டுவிடச் செய்ய வேண்டும் என கண்ணன் செய்த சூதே ஈதெனக் கதை சொல்வர்). - நீ அவனை வேண்டில் - என்னைப் பலி கொடு எனக் கூறுவான் - என்ற வரிகள் மூலம் தன்னிடம் வந்து தன் உயிரையே கேட்கும்போதுகூட தயங்காமல் அளிக்க வல்லவன் இவன் என்பதை சகா தேவன் வாய்மொழியாக அறியச் செய்கிறார் வில்லிப் புத்தூரார் - கொடையிற் சிறந்த கன்னனிடம் கூட இவ்வளவு நம்பிக்கை கவிக்கு இல்லாதிருப்பதை நூலை ஆய்ந்தால் அறியலாம்.

துரியோதனன், அரவானை நாடிச் சென்று, ''இன்றளவும், இவ்வளவும், யார்பாலும் சென்று இரந்தறியேன் செவ்வி வரந்தருவாய்'' என்று வேண்டு கிறான்; அதற்கு எவ்வித மறுப்பும் கூறாது அரவான்'' என்னை பலி யூட்டுக'' என்கிறான்.

---

வில்லிபாரம் - முகூர்த்தம் கேள் விச்சருக்கம் - செய்யுள் -3)
பாரதவெண்பா - களப்பலி

இவவரவானுக்குச் சமமாக கூற வல்லவன் கண்ணனையன்றீ வேறொருவரும் இல்லை என்பதனைः ஆயபின் தருமர்க்கு...
செங்கண் மாயவன் என்னை வல்லே வன் பலி யூட்டுக வென்றான்'
என்ற வரிகளும்
''அப்பொழுது அரவமைந்தனரவு யர்த்த வர்க்கு நேர்ந்தேன்
இப்பொழுது உமக்கு நேர்ந்தேன் எனைப் பலியிடுமினென்ன
மைப் புயல் வண்ணன் நின்னை யல்லது மண்ணில் என்னை
ஒப்புவர் இல்லை நம்மில் ஒருவரே வேண்டும் என்றான்''
என்ற வில்லிப்புத்தூராரின் வரிகளும் தெளிவாகக் கூறுகின்றன.

இவ்வாறு தன்னுயிரைக் கேட்டவன் தன் தந்தையின் எதிரி - அத் தந்தையைக் கொல்ல வேண்டியும் வெற்றிபெற வேண்டியும் வந்து தன்னையே பலியாக வேண்டுகிறான் என்ற நிலையிலும்கூட மனமுவந்து பலியாக வரச் சம்மதித்த இவனது உளப்பாங்கு போற்றற்குரிய தொன்றாகும்.

## 11. நாடக வகை

கதை தழுவி வரும் கூத்தையே நாடகம் என்று கூறுகிறோம். அதுவல்லாது தனிப்பாடல்களைப் பொருள் விளங்கும்படி ஆடிக்காட்டப் பெறின் அதனை நடனம் எனக்கூறுவர். இன்று இந்நடனத்திலும் கதையைத் தொடர்ந்து வரும் நிகழ்ச்சிகளையமைத்து நாட்டிய நாடகம் எனும் புதுமையையும் செய்து வருகின்றனர்.

இயற்றமிழுக்கும் இசைத்தமிழுக்கும் இலக்கணமாக அமைந்து எஞ்சி இருக்கும் நூல்களின் அளவுக்கு நாடக இயல் பற்றிக் கூறும் நூல்கள் கிடைக்கவில்லை. ஆயினும் நாடகம் முற்காலத்தே இருக்கவில்லை எனக் கூறுவதற் கில்லை. புலவர் என்போர் இயற்றமிழ் வல்லவர்கள் பாணர் என்போர் இசைத்தமிழ் வல்லவர்கள் அது போலவே நாடகத் தமிழ் வல்லோரைக் கூத்தர் எனக் கூறும்வழக்கமும் இருந்து வந்துள்ள தென்பதை அறிவோம்.

புலவராற்றுப்படை, பாணராற்றுப்படை, விறலி யாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப் படை ஆகிய பழந்தமிழ் நூல்களின் மூலம், கூத்தர் முதலி யோர், கலைநயந்தேர்ந்து பரிசளிக்கும் வள்ளல்களை நாடிச் சென்றனர் என்றும் அவர்கள் அளித்த பரிசுப் பொருட்களைப் பெற்று வாழ்ந்தனர் என்றும் அறிய முடிகிறது.

இக்கலைஞர்கள் எப்போதும் ஊர் ஊராகப் போய்க் கொண்டே இருந்தனர் எங்கெங்கே உபகாரிகள் உண்டோ அங்கெல்லாம் செல்லும் இவர்களுக்கு எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் சொல்லக்கூடிய உரிமை இருந்தது என்பதையும் அறியலாம். பார்த்து மகிழ்வது கூத்தின் பயன் படித்து மகிழ்வது இயல் தமிழ். நாடகங்களில் சில படிக்கவும் சில நடிக்கவுமாக இயற்றப் பெற்றவைகள் உள்ளன. மேலும் அறிஞர் பெருமக்களே கூடியுள்ள அரசவையில் நடிப்பதற் கேற்றவையெனவும், வயல் களில் வேலை செய்வோர், மற்றும் கல்வியறிவில்லாத எளியமக்களிடையே ஆடுவதற்கு ஏற்றதெனவும் அந் நாளில் இருவகையிலும் நாடகங்கள் இயற்றப் பெற்றுள் ளன என்பதை, அரிய பல பழமையான நாடகங்களைக் காண்பதன் மூலம் அறியலாம்.

காலத்தால் ஒரே அமைப்பில் எழுதப்பெற்ற நாடகங் களில் சில வடமொழி மற்றும் பிறமொழிக் கலப்புடன் கூட உயர்வான இலக்கண இலக்கிய நயஅமைப்பு களுடனும் வேறுசில பெரும்பிழைகளுடன் மட்டுமில்லாது கொச்சையான சில சொற்களோடும் கூட படைக்கப் பெற்றதான சில பல நாடகங்களை இன்றும் காணலாம்.

தமிழ் நாடகங்களில் மட்டுமின்றி பிறமொழி நாடகங் களிலும் இவ்வாறான வேறுபட்ட இலக்கியத்தரமுடைய நாடகங்கள உள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் சுமார் இருநூறு ஆண்டு களுக்கு முன் எழுதப் பெற்றதான நாடகங்கள் சிலவற்றில் அக்காலகட்டத்தில் தஞ்சையை ஆண்ட மன்னர்களை வாழ்த்தியோ, அவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் எழுதப்பெற்றது என்ற குறிப்புடனோ அமைந்திருப் பதையும் நாம் காண இயலும் தேப்பெருமாநல்லூரில்

ஆண்டு தோறும் நடத்தப் பெற்று வரும் பாகவத மேளா எனும் இசை நாட்டிய நாடகமாகிய பிரகலாத சரித்திரம் எனும் நாடகத்தில் சிவாஜியை வாழ்த்தும் வரிகள் உள்ளன. இது தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய வைகள் மொழியால் கலப்புடன் அமைக்கப் பெற்ற நாடகமாகும்.

அருணாசலக் கவி என்பவரால் இயற்றப் பெற்ற ''மதன சுந்தரப் பிரசாத சந்தான விலாசம்'' என்ற நாடகமும், நாராயண கவி என்பவரால் இயற்றப்பெற்ற ''பாண்டிய கேளீ விலாஸம்'' என்ற நாடகமும் தஞ்சையில் சென்ற நூற்றாண்டில் அரசாண்ட மகாராஷ்ட்டிர மன்னராகிய சிவாஜியின் விருப்பப்படி இயற்றப் பெற்றவையாகும்.

ஆனால் கவிஞர் வையாபுரி என்பாரால் இயற்றப் பெற்றதான இந்த அரவான் களப்பலி நாடகத்தில் மன்னர் எவரும் வாழ்த்தப்பெறவில்லை. மேலும் பெருஞ் செல்வர் எவருமோ, அறிஞர் எவருமோ கேட்டுக் கொண்டதன் பேரில் இயற்றப்பெற்ற தெனவும் கூறப் பெறவில்லை. ஆகவே இந்நாடகம் நாடக ஆசிரியரான திரு வையாபுரி என்பவரின் தனித்திறமையின் காரண மாகவும் அவர் பால் அமைந்த நாடகத்திறனின் காரண மாகவும் இயற்றப் பெற்ற ஒரு நாடகம் எனவும், அறியலாம். தமிழ் மொழியின் பேரில் பெருமதிப்பும் நம்பிக்கை யும் உடையவர் இக்கவிஞர் என்பதற்குச் சான்றாக வில்லிபாரதத்தின் துணையோடு மட்டும் இவர்தம் நாடகக் கதையை ஒட்டி அமைத்திருக்கிறார்.

## 12. நூலின் சுவை

இந்நாடக நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் கவிஞர் வையாபுரி என்பதாகும். இதனை நூற்று

வக்கத்தில் அமைந்த ஆசிரியர் விருத்தத்திலும் நூல் முடிவிலும் கூறுகின்றார் - சித்தர் எனவும் தம்மைக் கூறிக்கொள்கிறார்.

இவ்வாசிரியர் பற்றி வேறு குறிப்புக்கள் ஏதும் நூல் வழி கிடைக்கப் பெற இயலவில்லை. வைணவ சம்பந்த மான நாடகத்தை இயற்றியவரே ஆயினும் இவர் சைவ சமயத்தவராய் இருக்கக்கூடும் எனக்கூற இயலும்.

நூற்றுவக்கத்தில் மீனாட்சி அம்மையைப் பாடுவ தால் மட்டுமின்றி விதியின் வலியை நிர்ணயிப்பதும், எல்லாவற்றினும் உயர்வாய் நிற்பதும் தெய்வங்களுக் கெல்லாம் தலைமையாய் விளங்குவதும் சிவனே என இவ்வாசிரியர் குறிப்பிடுவதனைக் கொண்டு இவ்வாறு கூற இயலுகிறதே அன்றி ஆசிரியர் பற்றிய செவி வழிச் செய்தியாகக்கூட வேறு ஏதும் கூறக் கிடைக்கவில்லை.

இறைவன் செயலாக புராணச் செய்திகள் பல வற்றை இவ்வாசிரியர் நூல் முழுதுமாகப் பலவிடங் களில் ஏராளமான செய்திகளைத் தருகின்றார்.

இவற்றில் இராமாயணம் சார்ந்த நிகழ்ச்சிகளில் 1. சிலையை வளைத்து மணம் செய்தது 2. சீதையால் இராவணனை செயித்தது, 3. வாலியை வதைத்தது. 4. தசரதன் மைந்தனாகப் பிறந்தது. 5. கைகேசியின் சொல்லுக்காக வனம் போனது. 6. விசுவாமித்திரர் சொல்லைத் தட்டாமல் தாடகையை வதம் செய்தது. 7..கல்லரய் இருந்த அகலிகை என்பாளை மீண்டும் பெண்ணாக்கியது. 8. அகங்கொண்ட வாலி தன்னை வதைத்தது. 9. சானகியால் மாரீசனை வதைத்தது ஆகிய திருமாலின் செயல்களை ஆங்காங்கே ஒன்றுக்குமேற் பட்ட முறையில் கூறுகிறார்.

பாரதம் சார்ந்த நிகழ்ச்சிகளில் கிருஷ்ணாவதாரனாக, ஆயர்பாடியில் (கோபியர்களுக்காக) குன்றைக் குடையாய்ப் பிடித்தது - காளிங்க மடுவில் பாம்பின்மேல் நடமாடியது. - இடைச்சியர் எனும் ஆயர் பெண்டிரால் உரலில் கட்டப்பெற்று அடிபட்டது ஆகிய செய்திகளையும், திருமாலின் பத்து அவதாரங்களின் திருநாமங்களையும் அகிலமெல்லாம் புந்திக்குள் அடக்கிட்டதையும் - தாயார் தயிர் கடைய உண்டியிட்டதையும் - உறியில் தயிர் திருடித் தின்றதையும் - வாமனனாக வந்து பூவுலகத்தை ஓரடியாக அளந்திட்டதையும், நரசிம்மனாக வந்து இரணியனைக் கிழித்திட்டதையும், அலைகடலில் பாம்பணையின் மேல் பள்ளி கொண்டதையும் இலட்சுமியை மார்பில் வைத்ததையும் - சிவனார்க்கு அன்பனாயும், வாகனமாயும் ஆனதையும் - கல்கி அவதாரமானதையும் காஞ்சியில் வரதராசனாக நின்றதையும் கஜேந்திரன் எனும் யானையை முதலை பிடித்தபோது அதனைக் கருடன் மீது ஏறி விரைந்து வந்து காத்ததையும் பரசுராம அவதாரத்தில் தகப்பன் சொல்லைத் தட்டாமல் தாயின் தலையை வெட்டிய செய்தியையும் பஸ்மா சூரனை மோகினி ரூபம் கொண்டு அவன் கரத்தை அவன் தலையிலேயே வைக்கச்செய்து அவனை அழித்து சிவனைக் காத்த செய்தியையும் ஆங்காங்கே ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகளில் கூறுகிறார். மேலும் ஆலிலை மேல் மிதந்ததாக பல இடங்களில் திருமாலைப் பற்றிக் கூறுகிறார். யுகப் பிரளய

---

முப்புரங்களை எரிக்க (திரிபுர ஸம்ஹாரம்) புறப்பட்ட சிவனுக்கு தேவர்கள் அனைவரும் ஒவ்வொரு உறுப்பாகி தேர் ஒன்று அமைத்தனர். அத்தேரில் சிவனார் ஏறுவதற்காக கால்வைத்த போது அது அச்சு முறிந்து போயிற்று, அவ்வேளையில் திருமால் காளையாகமாறி சிவனுக்கு வாகனமானார். இதனை அருணகிரியாரும் குறிப்பால் அளித்துள்ளார்.

கந்தவேள் கருணை கிருபானந்தவாரியார் : வானதி பதிப்பகம்.

காலத்தில் கடல்கள் ஏழும் பொங்கி எழுந்த போது 'ஏகோ தக' சமுத்திரத்தில் இருப்பதாகிய ஆலமரத்தில் அதின் தளிர் ஒன்று ஆலமரத்தில் இருந்தபடியே நீரில் மிதந்திருக்க அதில் பால முகுந்தனாய்ப் பள்ளி கொண்டிருப்பதாக புராணங்கள் கூறும் செய்தியைபல (இடங்களில் குறிப்பிடுகிறார். (திருப்பாவை 26 மாலே மணி வண்ணா - ஆலினிலையாய் அருளேலோ ரெம்பாவாய் உத்தமூர் வீரராகவச்சாரியார் உரை) சிவபுராணங்கள் சார்ந்த செய்திகளில், திரிபுரத்தை எரித்தது ஆலகால விஷத்தை உண்டது. பிரமதேவன் தலையை கிள்ளியதும் அதனால் பிரம்மஹத்தி தோஷம் பெற்றதும் பரதேசியாய் ஓடெடுத்துப்பிச்சை எடுத்துண்டதுமான செய்தியையும்-காமனை எரித்ததையும் - பாதி மதி புனல் - அரவம் அணிந்து, ஏக தத்துவ பராபரமாய் இருக்கப் படா நின்றதையும்-மார்க்கண்டேயனுக்காக கூற்றுவனை உதைத்ததான செய்தியையும்-தாருகா வனம் சென்றதையும் - மானும் மழுவும் தரித்ததையும் பல இடங்களில் குறிப்பிடுகின்றார்.

(சேக்கிழாரின் பெரிய புராணத்தினின்றும்) சிறுத்தொண்டநாயனாரின் வரலாற்றில் சீராளனை அறுத்து கரியாக்கி இறைவனுக்கிட்டதனால் அச்சீராளன் இறக்கவில்லை எனவும் இக்கதையின்படி கங்காளரெனும்

---

ஆலிலையில் துயிலும் பால கிருஷ்ணன் தன் கால் கட்டைவிரலை வாயில் வைத்துச் சுவைப்பது போன்ற பழங்கால இரவிவர்மா ஓவியங்களில் காணலாம்.

''யோகிகளும் முனிவர்களும் என் பாதகங்ளில் விழுந்து வணங்கி சுகம் காணுகின்றனரே அப்படி இப்பாதத்தில் என்ன தான் சுவை இருக்கிற தெனச் சுவைத்துப் பார்ப்போம்'' என பால முகுந்தன் தானே தன் கால் கட்டை விரலைச் சுவைத்துப் பார்ப்பதாக கவியின் கற்பனை.

வேடம் பூண்டு வந்து பிச்சைகேட்ட இறைவன் ஆத்தி மரத்தடியில் அமர்ந்து உணவு கிடைக்கும் வரை காத்திருந்தார் என்பதைக் காட்ட ஆத்தியின் ''அடியில் அமர்ந்த ஈசன்'' எனவும் குறிப்பிடுகின்றார் - ஆத்தியின் அடியில் அமர்ந்தது ஏனெனில் - திருமாலும் பிரம தேவனும் ஈசனின் அடிமுடியைக் காண விழைந்த போது சிவன் முடியினின்றும் இழிந்து வீழ்ந்து கொண்டிருந்த தான தாழம் பூ ஒன்று பிர்மாவிற்காக பொய்சாட்சி கூறி சாபம் பெற்றது இத்தாழம்பூவே திருச்செங்காட்டன் குடி எனும் தலத்தில் ஆத்திமரமாய் நின்றிட அதனடியில் ஈசன் அமர்ந்ததால் சாபம் நீங்கிற்றென தலபுராணம் கூறும். அறுபத்து மூவரில் வேறு எவரையும் நூலாசிரியர் குறிப்பிடவில்லை.

உமையவள் மலையத்துவசபாண்டியனுக்குப் பெண்ணாய்ப் பிறந்த செய்தியும் - மாங்கனிக்காக தாய் தந்தையை வலம் வந்த விநாயகர் எனவும் - சூரனைச் சிரம் துணித்துக் கோழியின் கொடிபிடித்த குருபரனுக்கு முன்னானோன் எனவும் விநாயகரைக் குறிப்பிடுகின்றார்- கீசனையும், பகாசூரனையும், இடும்பனையும் கிழித்தெரிந்த மகானுபாவன் என பீமனையும் முப்புரம் எரித்த அண்ணல் மேற்கணை தொடுத்தோன் எனவும் காண்டாவனத்தைப் பெருமையுடன் எரித்தவர் எனவும் அர்ச்சுனனைக் குறிப்பிடுகின்றார். கங்கையருடனே கூடி கனகமுடன் நடனம் செய்த மங்கை எனக் காளியை குறிப்பிடுகின்றார். மேலும் கவிஞர் வையாபுரியவர்கள் தமது படைப்பில் - கிரீடி என அர்ச்சுனனைக் குறிப்பிடுகின்றார். இதன் பொருள் - எக்காலத்தும் பிறர் எவர்க்கும் வணங்காதவனாக கிரீடம் அணிந்தவன் என வடமொழி நூல்கள் கூறுகின்றன. திரௌபதியை சயந்திரி எனவும் சயனந்தரி எனவும் குறிப்பிடுகின்றார். சைரந்திரீ - எனும் வடசொல்லுக்கு வேலைக்காரி என்பது பொருள்.

விராடபுரத்தரண்மனையில் பூத்தொடுக்கும் பணிப் பெண்ணாக இருந்தமையால் இவளுக்கு இப்பெயர் ஆயிற்று என்பர்.

ஸரஸீருஹ - பாஷை பத்திரம், சீமை, ஈ வொட்ட இடம் - தப்பு கொட்டற தாதர் - முஸ்தீபு - புரட்டன் - சல்தி - சமுதாடு - அசல்மாதர் - உச்சிக்குடுமி - ஆகிய வார்த்தைகளையும் - துரை மகனே! என அரவானையும் 'அவனாலே ஆனால் அவன் சீமை என்னாலே ஆனால் என் சீமை' என்பது போன்ற சொல்லடுக்குகளையும் பயன்படுத்தியுள்ளார். மேலும் நாடக மேடையை - களரி எனக் குறுப்பிடுகின்றார். இவரது காலம் சார்ந்த பிற நாடகங்களை நோக்கும்போது இவ்வாசிரியர் வடமொழி யிலும் ஹிந்துஸ்தானி மற்றும் துருக்கிய மொழியிலும் கூட பயிற்சியுடையவர் என அறிய முடிகிறது.

ஹரிகதை (கதா காலட்சேபம்) செய்பவர்கள் கதையைத் துவங்கும்போது தாம் இன்ன கதையைச் சொல்லப் போகிறோம் என்பதைச் சுருக்கமாக ஒரு பாடல் மூலம் தெரிவிப்பர். இந்தக் கதைச் சுருக்கப் பாடலை ''நீரூபணம்'' என்பர் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் "பழன மருங் கணையும்'' எனும் நொண்டிச் சிந்தில் நூலில் அடங்கியுள்ள கதையின்

---

களரி-பழமையான சொல், களரி பயிற்று என்ற சொல்-தரையி லிருந்து உயரே தாவி, ஆயுதங்களின்றிக் கையாலேயே போரிடும் முறை, இது தென்னாடாகிய ராமனாதபுரத்திலும், கேரளத்திலும் பிரபலமானது. கேரளத்தில் பிரசித்தி பெற்ற ஓட்டம், துள்ளல், மற்றும் கதக்களியில் வரும் நாயகன் பிரதிநாயக சம்வாதங்களில் அங்க அமைப்புகள் களரியிலிருந்து தோன்றியவை.

களர் - களம் - என்பது போர்நடக்கும் இடத்தைக் குறிப்பது. போர்க்களத்தைக் குறிக்கும் நாடக மென்பதால் களர் என்று குறித்திருப்பார் களரி என்பது ஓரளவு தவறான பிரயோகம்.

சுருக்கத்தை ஆசிரியர் கோபாலகிருஷ்ண பாரதியார் கூறுகிறார். 'கதாசங் கிரகம்' எனும் இப்பகுதி அகவல் என்ற தலைப்பில் பழய நாடகங்கள் பலவற்றிலும் அமைக்கப் பெற்றுள்ளன. இங்கும் கணபதி காப்பிற்குப் பின் மங்களம் பாடப் பெற்ற பின்னர் அகவல் பகுதி யிடம் பெற்றுள்ளது.

இதில் பாரதம் முடிக்க வந்த கண்ணனே பாண்ட வர்க்கும், துரியோதனன் முதலானோர்க்கும் வஞ்சகம் பண்ணி, பகையையுண்டாக்கினான் எனத் தெரிவிக்கப் பெறுகிறது. தூதாகச் சென்ற கண்ணனிடம் துரியோ னன், பாதி ராஜ்ஜியம் தர இயலாது, ஈ ஓட்ட இடமும் இல்லை எனக் கூறுகிறான், ''அவனாலே ஆனால் அவன் சீமை, என்னாலே ஆனால் என் சீமை'' என, போர் தான் முடிவு என்பதையும் கூறுகிறான்.

அரவானை பலியிடச் சம்மதியாத ஐவரையும் பாஞ்சாலியையும் கிருஷ்ணனே சூதாகப் பேசி சம்மதிக்க செய்தான் என்பதாக அகவலில் விவரங்கள் கொடுக்கப் பெறுகின்றன.

நூல் துவக்கத்தில் 'பச்சை மரகதக் கொடி மீனாட்சி அம்மன்' என மீனாட்சி தேவியை வேண்டி இரண்டு விருத்தங்களும், நூலுக்காக வேண்டி ஒரு விநாயகர் விருத்தமும், காப்புச் செய்யுள் ஒன்றும் அவையடக்கம், ஆசிரிய விருத்தம் ஆகியனவும் தோடயம் எனும் திரு மாலைப் புகழும் பகுதியும் நூல் மங்களச் செய்யுளும் இடம் பெற்றுள்ளன. தவிர வெண்பா ஏழும், ஐந்து கொச்சகச் செய்யுட்களும், கலித்துறை இரண்டும், கட்டளைக் கலிப்பா ஒன்றும் பத்யம் - ஒன்றும் இடம் பெற்றுள்ளன. விருத்தங்கள் சுமார் 116ம் தரு - என்ற பாடல்கள் எழுபத்தைந்தும் இவற்றில் சுமார் ஏழு தர்க்

கத்தருக்களும் உள்ளன. தருவகையில் கூறப்படும் - ஸ்வாகத்தரு - உத்த்ரப் பிரதியுத்தர்ரத்தரு - பிரலாப தரு - ஆகியன அமைந்திருப்பதோடு பாத்திரப் பிரவேச தருக்களும் தனித் தனியாக அமைந்துள்ளன. விருத்தங்க ளில் பாத்திரங்கள் பாடக் கூடியனவையும் 'சூத்திரகாரு' எனப்படும் சபையோர்களாகிய பின்பாட்டுப் பாடுவோர் பாடக் கூடியவையாகவும் தனித்தனியே உள்ளன. தரு வகையிலும் சபைத்தரு - பாத்திரங்கள் பாடும் தருக்கள் என சிறப்பாக அளிக்கப் பெற்றுள்ளன.

''காலம்'' என ஒரு பகுதி உள்ளது - இதில் அம்மனாகிய திரௌபதி தனக்கு நேர்ந்த கொடுமையான காலத்தைப் பற்றிக் கூறுகிறார். இதே போல ஸ்ரீ ரெங்கநாத உபாத்தியாயர் இயற்றிய சிறுத் தொண் டர் நாடகத்திலும் காலம் என்ற ஒரு நீண்ட செய்யுள் வ்டிவப் பகுதி உள்ளது. அவலச் சுவை மிக்கது இப் பகுதி. மேலும் கேள்விக்குப் பதில் சொல்வது போல் அமைக்கப் பெற்ற ஒரு பாடற் பகுதியில் பதினெட்டு நாட்கள் நடந்த போரில் ஒவ்வொரு நாளும் இறந்து பட்ட மன்னர்கள் பற்றிய செய்திகள் கூறப் பெறுகிறது,

களப்பலியாக தன்னை மனப்பூர்வமாகக் கொடுத் துக் கொண்ட அரவான் பதினெட்டு நாள் போர் முடியும் வரையும் தன்னுயிர் கண்களில் இருந்துவர போர்க் காட்சியைக் காண வேண்டும் என வரம் பெறுகிறான். இவ்வரவானைத் தாயாகிய திரௌபதியே பலியிடுவதாக நாடகக்கதை அமைக்கப் பெற்றுள்ளது. ஆயினும் அவ்வரவான் கேட்ட வரத்தின்படியே அவன் உயிர் பதினெட்டு நாளும் இருந்து காண விழைந்த காட்சிகளைக் கண்ட பின்னர் தன்னுயிர் நீத்தான் என்ற விவரம் கூறப் பெறாமல் நாடகம் முடிக்கப் பெற்றுள்ளது.

நாடக வகையில் இசை நாடகமான இது ஆண்டுதோறும் நடத்தப்பெற்று வரக்கூடிய ஒரு உயிருள்ள நாடகம் எனவே படித்து சுவைத்தோர் பார்த்துச் சுவைக்க வேண்டுமெனவும் பார்த்துச் சுவைத்தோர் படித்தும் சுவைக்க வேண்டுமெனவும் விரும்புகிறேன்.



# அரவான் களப்பலி

## இசை நாடகம்

### மீனாட்சி அம்மன் விருத்தம்-1

நீல வார் குழலும் சொர்ண பங்கயமும்
ஏற்றியே வாழ் முகமும் சொரியகிரிகை
கோல வேல் விழியாள் நின் அருள் தாளினைக்
குற்றந்தீர தெரிசனம் தருகுவாய்
கால கால கபால திரிசூலி கங்காளி பைராகி கிருபாகரி
வாலைக் கோமளக் கல்யாணி சுந்தரி
பச்சை மரகதக் கொடி மீனாட்சி அம்மனே!

### விருத்தம் - 2

தானமா மலையத்துவசன் பாண்டியன் வசந்த குமாரி
சர்வ தயாபரி மீனலோசனி நின் திருத் தாளினை
விருப்ப முற்று புகழ்ந் தோர்க்கு அருளு வாயே!
ஞான பூரணி ஆரணி காரணி அண்ட முழுதும்
நிறைந்தவளே!
நித்தம் வாரணம் போற்றும் மதிநுதலாளே பச்சை
மரகதக் கொடி மீனாட்சி அம்மனே!

### விநாயகர் விருத்தம் - 3

அத்திசூழ் உலகோர் போற்றும் அஸ்தினா புரியில்
வாழும்
வித்தகண் தரும ராசன் வேந்தன் தன் நற் சரிதம்
தன்னை
எத் தலங்களில் உள்ளோரும் யாவரும் மகிழ்ந்து கேட்க
மத்தகன் வதன வெள்ளை வாரணன் காப்பதாமே!

---

அத்தி - யானை.

## விருத்தம் - 4 காப்பு

திருவளர் அஸ்தினா புரம் சிறந்திடும் செல்வ மன்னன்
பெருமைசேர் தருமராசன் பெற்றிடும் புத்திரனாம்
தருமனாம் நல்லரவான் தழைக்க நாடகத்தைப் பாட
இரு செவி ஒரு கொம்புள்ளோன் இணையடி காப்பதாமே!
நல்மொழி நல்லரவான் நற்கதையைத் தமிழால் பாட
வில்லடைத் துன்பமற்ற வேறொரு துன்பம் வராமல்
முல்லை யருங் கொன்றை சூடிய முக்கண்ணன் ஈன்ற
பாலன்
வல்லபை இடத்தில் வைத்த மகேஸ்வரி பாலன்
காப்பதாமே!

## விருத்தம் 5 - அவையடக்கம்

நன்னெறி யருள் கோதண்டராமர் தன்
பதம் போற்றி
மன்னவன் நல்லரவான் மகிமை சேர் நர்டகத்தை
உன்னிதன் புறத்தில் உருவு மின்மினியைப் போலே
பன்னும் செந்தமிழால் பகர்கின்றேன் கவிவல்லோர் முன்

## ஆசிரியர் விருத்தம் - 5

திங்க ளொப்பாக வேதான் தான் சிறந்திடும் வதனனான்
துங்கனாம் நல்லரவான் துரந்திரன் சரிதை தன்னை
புங்கவன் அருளினாலே நாடகமாய்ப் புவியோர் காண
இங்கிதக் கவிஞன் வையாபுரி இயம்பி னேனே !

---

உன்னிதன் - சூரியன். சூரியனுக்கருகில் உள்ள ஒரு மின்மினிப் பூச்சியைப் போல - எனப் பொருள் கொள்க. துங்க - விளங்க.

'உன்னியதன் புரத்தில் னுருவு மினியைப்போல்' என சுவடியில் உள்ளது. உன்னிதன் புறத்தில் உருவு மின்மினியைப் போல என இடம் கருதி திருத்தம் செய்யப்பெற்றது.

## தோடயம்

சீதாராம கோவிந்தா தேவ தேவகி நந்தா மாதவா
வைகுந்த வாசனே முகுந்தா :
மச்ச கூர்மாவதாரா வராக அவதாரா அச்சுதா
நரஸிம்ம அவதார ரூபா.
பரசு ராமா பரலசுந்தர செயராமா, வருகிருஷ்ண
பலராமவருக் கருள் செய் பூமா
பார்த்திபன் பணி பாலா பரம ஞான விலாஸா
சித்தர் பணி திருமகள் லோலா வா ;

அருண பீதாம்பர அகளங்க மணிமார்பா,
வருண கோதண்ட வசுதேவ குமாரா
விமல நான் மறை தோத்திரஞ் செய் சுந்தர காத்திரா
கமல ரஞ்சித நேத்திர காரண சற் புத்திரா ;

## தரு : விநாயகர்

ஆதி விநாயகனே ஜெய ஜெய
ஐங்கரனே சரணம்
சோதி சேர் மறை வேதியர் பணிந்திடும்
சோமனாம் இக்கதைக்கு சேர் சுந்தர பாலகா
(ஆதி......)
தந்தி வதனத்தோனே மாங்கனிக்காக அந்நாள்
தரணி வலமாய் வந்தோனே
தொந்தி வயத் தோனே சித்தர் முனிவர்
தொழுதிடும் களபத் தோனே
மந்திர முப்புரிநூல் மார்பில் தரித் தோனே
சிந்தை வைத்து இக்கதைக்கு திருவருள் செய்குவாயே
(ஆதி......)

---

களங்கம் X அகளங்கம் - குற்றமற்ற குறைவற்ற (வடசொல்)

சித்தி விநாயகனே படியளந்திடும் திருமால் மருமகனே!
சக்திக் கணபதியே!
எங்கும் நிறைந்த சர்வ தயா பரனே! எத்தலமும்
புகழும் வித்தகன் தரும ராசன் நற்றமிழ்க் கிரங்கி,
இப்போ சித்தம் வைத்துக் காப் பீரே!

(ஆதி......)

## மங்களம்

மங்களமே செய மங்களம் நல்ல மாது துரோபதா
தேவியர்க்கு மங்களம்:
மங்களம் பாண்டவர் ஐவருக்கும் மாது துரோபதா
தேவியர்க்கு
செங் கருடன் மீதில் வாழும் ஸ்ரீ கிருஷ்ணதேவர்
தங்களுக்கும் மங்களமே!
தேவர் முனிவர் களுக்கும் சித்த வித்தியாதரர் களுக்கும்
பூவுலகந் தன்னில் உள்ள பூசுரர்க்கும் வாசவர்க்கும்

(மங்களமே ,.....)

கிருஷ்ணதேவர் தனக்கு மங்களம் எங்கள்
சீதாபிமானனுக்கு
செயமங்களம் மேதினிக் கதிபன் தருமன் பீமன்
விசயன் நகுலனுக்கு
தாரணி மன்னர் பணிந்திடும் சகாதேவராசனுக்கும்

(மங்களம்)

## அகவல்

அஸ்தினா புரியில் அன்புடன் தருமர் பட்சமாய்க் கிருஷ்ணன் பாரில் பிறந்து துவாபரயுகத்தில் சுவாமி கிருஷ்ணனும் பாரதம் முடிக்க பாங்குடன் தோன்றி துராக் கிருத னான துரியோதனனை வராக அவதாரன் வஞ்சகம் செய்ய ஐவர் தன் பங்கில் அமர்ந்திடும் மூர்த்தி பைய இருவர்க்கும் பகையுமே பண்ணி சொக்கட்டான்

ஆடி தோற்றுமே சீமையை இழக்கப்பட தானும் இருந்துமே காட்டில், இப்படி இருக்கும்போது, பண்ணிரெண்டு வருஷம் பஞ்ச பாண்டவர்களும் ஐவர் தன் தேவி அரிவை துரௌபதியின் அவிழ்ந்த மயிரது அன்புடன் முடிக்க, லாட புரத்தில் நலமுடன் வந்து கீசகன் தன்னைக் கிழித்துமே இரண்டாய் வாசமாய் இருந்து வருகிற நாளையில் சீமை வேண்டு மென்று சீக்கிரம் தருமர் சுவாமியைத் தூது அனுப்ப, சுவாமியும் போனபின் துரியோதனனும் வாருங்களையா வென்று மரியாதை செய்தான், பஞ்ச பாண்டவர்க்கு பாதிதான் சீமைக் கொடுவென்று கோவிந்தன் கேட்க, துரியோதனனும் சிந்தை கலங்கிட சீமை ஏதென்று சிரித்துமே சொல்ல, அப்படியா வென்று, அனந்தகோபாலன், ஒப்புடன் ஐந்து சீமையும் கேட்க துப்புரவாய்க்கிடையா தென்று உரைத்தான், தப்பிதமில்லாமல், சரச கோபாலன், ஐந்து வீடாவது ஆயனும் கேட்க ஈ ஒட்ட இடமும் இல்லை என்று உரைத்தான், அப்போது கிருஷ்ணன் அதிகோபமாகி இப்பொழுது எனக்கு என்ன தான் சொல்கிறாய் என்று இயல்புடன் கேட்க, அவனாலே ஆனால் அவன் சீமை தானிது, என்னாலே ஆனால் என் சீமை தான் இது, இப்படி பாஷை பத்திரங் கூறிட, ஒப்புடன் கிருஷ்ணன் உவந்து சம்மதமாய், பாண்டவர்கள் பக்கம் பரிவுடன் வந்து பைங்கிளி கூந்தல் தனை பரிவுடன் முடிக்கவும் உங்கள் சேதி என்னா உகந்து சொல்லென்றார். அப்போது தருமர் ஆயனைப் பார்த்து இப்போது என்ன சொல்கிறீர் சுவாமி பாரத யுத்தம் பாங்குடன் செய்ய வேணும் என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்ல, அப்படியானால் நல்லது ஆகட்டும் என்று ஒப்புடன் தருமர் உகந்துமே சொல்ல, நல்லது கோபாலன் எல்லோரும் தானும் இயல்புடன் கூடி ரண குருச்க்ஷேத்திரம் எல்லோரும் வந்து காளிகா தேவிக்கு களப்பலி தானும் ஏதுவாய்க் கொடுக்க எண்ணியே

பகவான் வீரனைக் கொல்ல விருதுமே பெற்று எக்கியம் பிறந்த யியல் சுக்கிர தீபம் தன்னைக் களப்பலி தான் வைக்கவென்று, பண்டவர்கள் பக்கம் பரிவுடன் அரவான் *தன்னைக் களப்பலி சுவாமி சம்மதியாய்,* வைக்கவேண்டு மென்று மனது சம்மதியாய் இப்படித் தானும் இருக்கும் போது தருமரை சுவாமி தயவுடன் கேட்க, தருமரும் தானும் சம்மதிக்காமல் மைந்தனைக் கொன்று மண்ணாள வேண்டாம் என்றுமே தருமர் இயல்புடன் சொல்ல, தம்பியர் நான்கு பேரையும் தயவுடன் கேட்க, நான்கு பேரிடமிருந்தும் தாங்கள் சம்மதியோ மென்று நால்வரும் *இயல்புடன் சொல்ல திரௌபதியை சுருக்குடன் கேட்க* திரௌபதி தானும் சிவ சிவா வென்று, மைந்தனைக் கொன்று மண்ணாள வேண்டாம் என்று திரௌபதி *யியல்புடன் சொல்ல,* சுவாமியும் தான் சூதுமே செய்து ஐவர் சம்மதமாகி ஆயனுக் குரைக்க ஆயனும் தானும் அதிக சந்தோஷமாய் காளிகா தேவிக்கு பலிதானும் ஏதுவாய் கொடுக்க எண்ணி ஏக பகவான் நல்லரவானை நலமுடன் கொண்டு போய் எல்லை பலி தான் இன்ப மாய்க் கொடுத்த கதையை நாடகமாய்க் காட்டினார் கவிஞர் சேர்ந்ததோர்க் கதையை சிறப்புடன் உரைக்க *ஆய்ந்தோர் கவிஞர் அருள் பரன் துணையே!*

## விருத்தம்: 6 ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி

அருள்புரியும் சக்தி சிவமாகினாரே
*அகில மெல்லாம் புத்திக்குள் அடக்கிட்டாரே.*
நரஸிம்மமென தூணில் உதிதாரே!
நாகப் படத்தின்மேல் சயனம் நடத்திட்டாரே
கருவில் உறை வைகுந்த ராகவனே

---

பாஷை பத்திரங் கூறல் - வார்த்தைகளைக் கொண்டு திறம் பட பேசுதல். (ஜாலவாக்யம்) சுவடியில் வீமனைக் கொல்ல என உள்ளது.

கபடமென போர் வென்ற கருணையோனே!
திருப்பதியில் வாழ் மருகா வெங்கடேசா
சிந்தை தனில் யான் பணிந்து தெரிசித்தேனே.

## தரு: 2 கோணங்கி

வந்தாரய்யா பெருமாள் வந்தாரய்யா, எங்கள்
வடதிரு வேங்கடேசர் வந்தாரய்யா.
கொண்டல் மலை கோவிந்தமலை எங்கள்
கோணகிரி அப்பனார் வாழும்மலை.
அப்பனாம் திருப்பதிக்குப் பரிசு நடக்கையிலே
அநுமந்த ராய கோணங்கி அப்பா:
சிங்கார ரூபம் தரித்தப் பெருமாளாம்
சீரங்கத்தில் பள்ளி கொண்ட பெருமாளாம்.
தப்பு கொட்டுறத் தாதரிடம் வந்த பெருமாளாம்
தாயார் தயிர் கடைய உண்ட பெருமாளாம்.
நாராயணா ஹரி நாராயணா நாதாந்தப் பொருளே
ஹரி நாராயணா.
மச்ச கூர்ம அவதார மான பெருமாளாம்
மலையைக் குடையாகப் பிடித்த பெருமாளாம்.
உலகெல்லாம் ஓரடி அளந்த பெருமாளாம்
உரியில் தயிர் திருடித் தின்ற பெருமாளாம்.
சிலையை வளைத்து மணம் செய்த பெருமாளாம்
சீதையால் இராவணனை செயித்த பெருமாளாம்
அலைகடல் பள்ளி கொண்ட பெருமாளாம்
அண்டபிண்டமிரண்டையும் அளந்த பெருமாளாம்
நாகத்தின் மேல் பள்ளி கொண்ட பெருமாளாம்
நாகாபரணம் தரித்த பெருமாளாம்:

## விருத்தம் : 7 விநாயகர்

ஆழி சங்கேந்தும் மாயன் அன்பர்கள் துயரற சிந்திக்கும்
சரங்கள் போற்றும்

சூரனைச் சிரம் துணித்த
கோழியின் கொடி பிடித்த குருபரன் முன்னானோன்
வேழ மா முகவன் விக்ன விநாயகர் தோணினாரே!

**விநாயர் விருத்தம் : 8**

அஸ்தினா புரியில் வாழும் அழகு தர்மேந்திரன் வாசல்
வித்தகன் தருமேந்திர ராசன் வேந்தனவ் சபையின் மீது
சத்திய மாம் முகமிலங்க அங்குச பாச மேந்தி
தத்துமி ரென்ன சம்பிரமாமுடனே வந்தார்;

**விநாயகர் தரு : 3**

சித்தி விநாயகர் வந்தார் ஆகூவிலேறி
சித்தி விநாயகர் வந்தார்;
சித்தி விநாயகர் வந்தார் எத்தலத்தோரும் பணியவே
தத்திமி திமி ரெனவே நர்த்தன மிடவே நல்ல
(சித்தி......)
தந்தி வதன மிலங்க தொந்தி குலுங்க காலில்
சலங்கை அலுங்க.
ஐந்து கரமிலங்க அங்குச பாச மிலங்க
கந்தம் கம கமவென சந்தனக் குடை யிலங்க (சித்தி)
அந்தரத் துந்துபி முழங்க தேவர் வணங்க
அருகில் வல்லபை துலங்க;
மந்திர முப்புரி நூல் மார்பில் தரித்தோனே
சிந்தை வைத்து இக்கதைக்கு திருவருள் செய்குவாயே!
(சிந்தி)
வெண் மலர்ப் பூ விரண்டும் இலங்க பணி யலுங்க
வேத கீதமும் முழங்க
மன்னன் தர்மேந்திரன் வாசல் வரிசை சரிதை ஓங்க.

---

சம்பிரமம் - ஆடம்பரம், அங்குசம், பாசம் - விநாயகர் கையில் இருக்கும் ஆயுதங்கள். வல்லபை - விநாயகரின் மனைவி.

அண்ணல் தனை வலமாய் வந்த ஆறுமுகனார்க்கு
முன் பிறந்த
(சித்தி......)

## குருக்கள் — விருத்தம் : 9

குருக் களும் நைவேத்தியத்தை குணமுடன் கையிலேந்தி
சிறக்க வெண்ணீரும்பூசி திலத முப்புரி நூல் சாத்தி
முருக்குடன் வடைகள் தோசை மோதகம் பொரியும்
கொண்டு
சுருக்குடன் பூசை செய்யக் சுந்தரக் குருக்களும்
தோணினாரே!

## குருக்கள் தரு : 4

குருக்கள் வந்தாரே சுந்தரக் குருக்கள்
குருக்கள் வந்தாரே
குருக்கள் வந்தாரே பெருக்க முடனே
சிறக்க பூசைகள் உருக்கமாய்ச் செய்திட
(குருக்......)
புஷ்பக் குடலைக் கையிலும் மார்பில் முப்புரி நூலும்
தரித்துக் கொண்டு
வெற்பினில் ஏறிய கற்பகப் பிள்ளையாருக்கு
அற்புதமாகவே ஒப்புடன் பூசை செய்ய
(குருக்......)
நைவேத்தியமும் எடுத்துக் கையில் நீர்க்குடமும் பிடித்துக்
கொண்டு
சர்வ சித்தி தயாபரியாகிய
சங்கரி பாலன் முன் பூசை செய்யவே
(குருக்......)
உச்சிக் குடுமியை தட்டி முடிந்து
ஓதிய மந்திர வேதம் மொழிந்து

---

குடலை - பூக்களைப் பறித்து வைக்கும் ஓலைப் பெட்டி.

மெச்சிய வேலவர்க்கு முன்னவனாகிய
விநாயகர் பூசையை நேசமாய்ச் செய்திட
(குருக்......)

மந்திரம்: சுக்லாம் பரதரம் விஷ்ணம் சசி வதனம்
சதுர்ப்புஜம் பிரசன்ன வதனம் த்யாயே
சர்வ விக்நோப சாந்த ஹே!

## கட்டியக் காரன் விருத்தம் 10

புகழ்மிகு தருமராசன் பூபதி வாசல் கட்டியம்
திகழும் போர்ப் பணிகள் பூண்டு சித்திரப்பட்டாடை கட்டி
தகதக வென தலைப்பாகை தனை வைத்துக் கொண்டு
கட்டியம் வித்தகன் வருகின்றானே.
மட்டிலா அஸ்தினா புர மா நகர தாளும் நாளும் ஆளும்
திட்டராம் ராசராசன் சிறந்திடப் போற்றும்
துட்டரை செயிக்கும் துரந்திரன் தர்மராசன் வாசல்
கட்டியக் காரன் களரி முன் தோன்றினானே!

## கட்டியக்காரன் தரு 5

கட்டியக் காரனும் வந்தானே தர்மேந்திரன் வாசல்
கட்டியக் காரனும் வந்தானே!
கட்டியக் காரனும் வந்தான் பட்டை தாமமும் இட்டு
கண்ட சரப்பளி முத்துக் கடுக்கன் இலங்கவேதான்
(கட்டி......)
தட்டி சல்லடத்துடன் பெட்டி வயிறு துப்பட்டி கட்டிவல்ல
வேடிட்டு தகதக வென் றிலங்க
(கட்டி......)
கோணத் தலைப்பாகை வைத்து கோலும் கையில் பிடித்து

---

களரி - கூத்துக் களம், கண்ட சரப்பளி - கழுத்தில் அணியும் ஒரு ஆபரணம். வேடிட்டு - வயிற்றுக்கு மேலே பட்டையாக துணியால் கட்டிக் கொள்ளுதல்.

நாணற் பூவைப் போல வெளுத்து நரைத்தக்
கிழவனைப் போல
(கட்டி......)
அங்கி நிஜார் அணிந்து ஆவென்ற
வாவென்ற வாய் திறந்து
தங்கப் பணியணிந்து தத்தோ மென மொழிந்து
(கட்டி......)
தேவர் சபை ரஞ்சித சுதனார் பொற்றடி கொண்டு
மேவிய சரிகைப் பட்டு விளங்கச் சிரசில் பூண்டு
(கட்டி......)
குட்டுத் துறை களிலிட்டு சொகுசு குஞ்சரம் இட்டு
தட்டி சல்லடத்துடன் தக தக வென்றிலங்க (கட்டி......)
மட்டில்லாய் புகழ் படைத்து வாழும் தர்மேந்திரன்
வாசல்
துஷ்டரைச் செயிக்கும் துரந்தரன் ராசன் வாசல்
(கட்டி......)

## கட்டியக்காரன் வசனம்

ராசாதி ராசன் ராச மார்த்தண்டன், ராச கெம்பீரன் ராச உத்தண்ட கோலகல ராகிய பஞ்சபாண்டவராகிய ஐந்துபேரும் கொலுவுக்கு வருகிற விதம் காண்க.

## கொலு விருத்தம்

ஆடக மண்டபத்தில் ஆழிஆசனத்தில் மீதில்
நீடிய தருமராசன் நிறைந்திடும் சமூகந்தன்னில்
வீடணி குழலினார்கள் மிஞ்சிய ஒய்யாற
நாடகசாலைப் பெண்கள் நலமுடன் வருகின்றாரே!

---

கடையம் - தடித்த வளையல் கொந்தளம் - கூந்தல்
ககனம் - வானம் மேதினி - பூமி

## நாடகசாலைப் பெண்கள் தரு: மோகினி

வந்தாள் சிங்காரமாக வஞ்சி மோகினி மாது
செந்தாமரை மலர் போலே திங்கள் ஒளியதாக
விந்தையாய் நடைநடந்து சுந்தர ராசனைத் தேடி
(வந்தார்)
கையில் கடயமும் சொர்ண மோதிரங்களும்
காதில் தோடுமிலங்க கண்ட சரங்கள் மூன்றும் காண
(வந்தார்)
காலில் சிலம்பலுங்க கலீர் கலீர் என
கனக மணி மாலைகள் பள பள வென
கந்தாறத் திந்திமி திமித் தோமென
(வந்தார்
கொந்தள ஓலை மின்ன விந்தை நடனம் செய்து
பந்து ஸ்தனங்கள் குலுங்க பார்த்திபன் தனை நாடி
(வந்தார்)

## விருத்தம் : 12

ககன மும் மேதினியும் இரண்டு காலினால் அளந்த
சோதி நகை புகழ் நளினம் போலே
நவமணி அதனால் செய்த மகர குண்டலந்துலங்க
மணி மகுடங்கள் மின்ன இகழ்வோர்க்கும் அருளும்
ராச ராசனாம் கிருஷ்ணரும் தோன்றினாரே !

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம் - 13

செகமெலாம் ஓரடியாய் அளந்த மாயன்
திரிபுரத்தை எரித்தவர்க் கன்பனான மாயன்
அகங்கொண்ட வாலிதன்னை வதைத்த மாயன்
ஆலிலை மேல் துயின்ற அரிமுகுந்த மாயன்
நகங் கொண்டு இரணியனைக் கிழித்த மாயன்
இலட்சுமியை மார்பில் தரித்த மாயன்

சூகங்கொண்ட துரியோதனன் இடும்பை அழிக்க
சூட்சாவதார கிருஷ்ணரும் தோன்றினாரே!

## ஸ்ரீ கிருஷ்ணர் வருகிற விருத்தம் - 14

அண்டர்கள் முனிவர்களுக் கெல்லாம் அரும் பொருளான
மாயன்
தென்டிசை இராவணனை சிரமது துணித்த மாயன்
வண்டனாம் துரியோதனன் வாழ்வது குலைக்க வேண்டி
மண்டலம் முழுதும் அளந்த மாயவன் தோன்றினாரே!

## ஸ்ரீ கிருஷ்ணர் தரு - 7

ராச கோபாலர் வந்தார்
கெருடன் ஏறி ராசகோபாலர் வந்தார்
ரம்பைகள் நடனஞ்செய்து தேச மன்னர்கள் புகழும்
தசரதன் மைந்தன் எனும் (ராசகோ......)
அன்னங்கள் நின்றாடி வர அமிர்த பட்சி வெண் கவரி
வீசிவர
வண்ணக் குயிலினங்கள் வாய் மொழிந்து ராகம் பாட
சொர்ணப் பணியணிந்த விண்ணவர் குடை நெகிழ
(ராசகோ......)
செங்கையில் புல்லாங்குழல் ஏந்தி தேவர்கள்
இங்கிதமாக நடந்து பொங்கரவம் மேற் றுயிலும்
செங்கமல வேதநாதர் மங்கலக் கல்யாணத்துடன்
மாதவன் முகுந்தன் எனும் (ராசகோ......)
கோ கனக மாலை பூண்டு மேனிதனில் கோலப்
பச்சை வடமிலங்க
நாகரீக மாகவே நளின ஒய்யாரமுடன் வேகமாக
கெருடனேறி வேந்தன் ராமச்சந்திர பூபன்
(அரிராசகோ......)

---

அன்னங்கள், அமிர்தப்பட்சி, வண்ணக் குயிலினங்கள், இவைகள் இவை போன்ற பெண்களுக்கு ஆகிநின்றன.

## ஸ்ரீ கிருஷ்ணர் தரு II 8

வந்தார் அரிகேசவர் விந்தையுடனே
வந்தார் அரிகேசவர்
வானவர் கட்டியம் கூற செந்தாமரைப் பொற்பாத
சிலம்பு கலகலவென
(வந்தார்......)
மாமறையோர்கள் சூழவே அரம்பையர்கள் நின்று
சாமரைகளும் வீசவே!
நேமுகமாகவே சீரடி தொழுதிடவே
லெஷ்மீ நாராயண மச்ச கூர்ம அவதாரர்
(வந்தார்......)
தேவர்கள் மலர் தூவவே இந்திரன் நின்று
ஜெய ஜெயா வென்று கூறவே
ஆபரணங்கள் ஆட அஷ்ட் டதிக்குள்ளோர் பாட
அண்டங்கள் குலுங்கிடவே தண்டைகள் கலீரெனவே
(வந்தார்......)
கோபஸ்த்ரீ களுக்காக ஆயர் பாடியில்
குன்றைக் குடையாய்ப் பிடித்து
நாகத்தின் மேல் பள்ளி கொண்ட நாராயண தேவர்
ரம்பைகள் ஆட திருமால் கெருடன் ஏறி
(வந்தார்......)

## தருமராசர் வருகிற விருத்தம்: 15

அஸ்தினா புரத்தில் வாழ் அழகு தர்மேந்திர பூபன்
மெத்தவே பெருமை கீர்த்தி மேன்மையும் புகழுமுள்ளோன்
சத்துரு தன்னையும் போற்றும் தாட்சண்ய
தன்மையுள்ளோன்
உற்ற கேசவரைக் காண உண்மையாய் வருகின்றாரே!

## தருமர் விருத்தம்: 16

கதிர் மதி சூழும் சோலைக் கடிமலரதில் தேனும்
நதி எனப் பெருகும் அஸ்தினாபுரம் தன்னையாளும்

அதிபதி மகுடதாரி அரசர்கள் புகழும் வேந்தன்
துதி பெறும் தருமராசன் துரந்திரன் கொலுவில் வந்தான்

## தருமர் தரு - 9

மனுநீதி தவறாத செயதருமராசனும் வந்தாரே
கொலுவில்
அணியும் திருநாமமும் அழகான மேனியும்
ஆபரணம் குலுங்க நாகரீகமாகவே
அந்தரத் துந்துமி எங்கும் முழங்கிட
சுந்தரமாகத் துரந்திரன் சூழவே
(மனுநீதி......)
எங்கும் புகழ் படைத்தத்தங்கக் கிரீடமும்
ஏகச் சக்கரக் குடையும் ராசாதிராசர் தங்கும் சிம்மானமும்
மங்கை நடனமாட சங்கீதங்களும் பாட
திங்கள் உதயம் போலவே செயபேரிகை முழங்க
சேகு சந்தரிதாகு தித்திமி தக திக தோமென தித்திக
தோமென
(மனுநீதி......)
முத்து வெண்சாமரை வீச ரெத்தினக் குடைப் பிடிக்க
முடிமன்னர் நின்றிலங்க ராசாதி ராசன் திருவடி
தன்னைக் காண
பணிவிடைக் காரரும் அடிகள் வணங்கவே
பாவையர் இருபுறமும் சாமரை வீசவே
பணியும் திரு அணியும் கொலு மிகுந்திட
(மனு நீதி......)
ஆதிமூலமே என்று நாமத்தை மறவாமல்
அனுதினம் துதிகள் செய்து மதியும் நிதியும் உள்ள
துதி பெறும் தருமராசன் இதமுடன் கொலுவினில்
தகதக வென்று தாங்கி நின்றெதிர் வந்த
கோமளம் எங்குமாகவே துரந்திரன் வனசீலன்
(மனுநீதி......)

## ஸ்ரீ கிருஷ்ணர் கட்டியக்காரருக்கு சொல்விருத்தம்

### விருத்தம் :

அஸ்தினா புரத்தில் வாழும் அழகு தங்கும் இந்திரன் வாசல்
நித்தியம் புகழும் கட்டியம் வித்தகரே சொல்லக் கேளும்
மெத்தவே துவாரகை வாழும் விஷ்ணு நாம் வந்தோ மென்று
கொற்றவரிடமே சொல்லி குணமுடன் அழைத்து வாராய்.

### வசனம் :-

அகோ வரும் பின்னாய் கட்டியக்காரா துவாரகா புரி வாசன்றான் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஆசார மணி முகப்பிலே எழுந்தருளி இருக்கிறாரென்று முரசுக்கொடி படைத்த தரும ராசாவை அழைத்து வாரும் பின்னாய் கட்டியக் காரா.

### கட்டியக்காரன் - விருத்தம் : 17

மகுட வர்த்தனர்கள் சூழவும் வஞ்சியர் நடனமாட
விகட சங்கீத லோலா வேந்தனே சொல்லக் கேளும்
கெருட வாகனத் தோரான கேசவர் அழைத்தாரய்யா
மருமலர் வாசத் தோனே மன்னவா சரணம் சுவாமி.

### வசனம் :-

அகோ சரணம் சரணமையா சுவாமி துவாரகாபுரி வாசரான் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி எழுந்தருளி இருக்கிரா

---

நித்தியம் - நாளும் விகட சங்கீத லோலா - மகிழ்ச்சிதரும் இசையை விரும்புபவன்.

ரென்று தங்களை அதிசீக்கரம் அழைத்து வரச் சொன்னாரையா சுவாமி.

## தருமர் சரணத் தரு - 10

அருள் செய்ய வேணும் நாதனே கோதண்டபாணி
அருள் செய்ய வேணும் சுவாமி
அய்ய மறக் கயிலாயம மர்ந்த அரன் தனக் கபயம்
காத்த ஆயனே அரிகேசவனே!
(அருள்......)

மச்ச கூர்ம அவதாரனே கோதண்டபாணி
மலையைக் குடையாகக் கவிழ்த்த மாயவா
அச்சுதா நரஸிம்ம தேவா அவனி தன்னையளந்த மாயா
ரட்சித்தருள வேணும் சுவாமி அச்சுதாநந்தா சரணம்
(அருள்......)

செங்கண்மா மலர் வதன ரூபனே கோதண்டபாணி
தசரத மகராச புதல்வனே எங்கள் ஐவரையும் காக்கும்
இஷ்டமான துவாரகை வாசா
பொங்கமுடனே அழைத்த சேதி புகலுவீர் உந்தன் தாள் சரணம்
(அருள்......)

கல்கி அவதார ரூபனே கோதண்டபாணி
கஸ்தூரி ரெங்க வாசனே
கச்சியில் அமர்ந்தோனே சுவாமி பச்சைநிற ரூபனே
லட்சுமி சமேதரான சச்சிதானந்தாசரணம்
(அருள்......)

## தருமர் விருத்தம் - 18

துவாரகா புரியில் வாழும் துளபத்திர ராமா போற்றி

---

பொங்கமுடன் - விருப்பமுடன். கச்சி- காஞ்சீபுரம் (வரதராசப் பெருமாள்) துளபத்திர - துளசி இலையை மாயையாக அணிந்த.

கார் நிற மேனி வண்ணா காரணா போற்றி
சீருடன் அயோத்தி யாளும் தசரதன் மைந்தா போற்றி
கோரமாய் இராவணனைக் கொன்ற கோவிந்தா
போற்றி போற்றி.

வசனம்:-

அகோ வாருங்களையா சுவாமி அடி யேனை அழைப்பிவைத்த காரியம் இன்னதிதுவென்று அருள் செய்ய வேணுமையா சுவாமி!

ஸ்ரீ கிருஷ்ணர் - விருத்தம்

ராசனே சொல்லக் கேளாய் நலமுடன் அழைத்த சேதி
நேசமாய் உனக்கே தான் நிலவரம் சொல்ல வந்தேன்
பாசமாய்த் துரியோதனன் பகர்ந்ததை கவனம் செய்து
வாசமாய் இம்மொழிக்கு வசனிப்பாய் அரசக்கோவே!

வசனம்:-

அகோ வாரும் தரும ராசனே, முன்னாளில் அஸ்த்தினா புரத்திலே துரியோதனனுடன் சூதாடித் தோற்று, பதின்மூன்று வருடம் வனஞ் சென்று வந்தால் தான் நாட்டை ஆளலாம் என்று சொன்னா னல்லவா அப்படியே வனம் சென்று வந்தாய், பிறகு என்னைப் போய் சமாதானம் கேட்கச் சொன்னீர்களே, அவ்விதமாக நான் போய் கேட்கும் காலத்தில், காடு சென்றவர்கள் நாடு வரலாகாது, அப்படி வந்தால் எங்களோடு யுத்தா யுத்தம் செய்து செயம் பெற்று நாட்டை ஆளச் சொல்லு மென்று சொன்னபடியால் ரண களத்திற்கு முஸ்தீபு செய்து ரணபேரிகை அடிக்கச் சொல்லி வந்தேன், உங்களுடைய சம்மதம் எப்படி மகா ராசனே!

## தருமர் விருத்தம்: 20

மூவரில் ஒருவரான முகுந்தனே சொல்லக் கேளீர்
ஆவதும் அழிவதும் உந்தன் அருளல்லால் வேறுமுண்டோ
பூவுலகையாளும் வேந்தன் பொய்யான
வார்த்தை சொன்னால்
கேவல மாகிப் பின்பு கீர்த்தியும் இழப்பான் பாரில்

### வசனம்:

அகோ வாருங்களையா சுவாமி! தங்கள் இஷ்டப்படி செய்து மோட்சப் பதவிக்கு அருள் செய்ய வேணுமையா சுவாமி.

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம்

தருமரே வாரும் நீர் தபத்தினால் மிகுந்த மன்னா
பெருமையாய் பட்டம் ஆளுவீர் புவியெல்லாம் உமதாகும்
நிருமையாய் காளியர்க்கு நிமிஷத்தில் பாலனை
ஒரு மையாய்ப்பலி கொடுத்தால்
உன் கத்திமுனை செயமாகும் தர்மராசனே

### வசனம்:

அகோ வாரும் தருமராசனே! உன் பாலகனாகிய நல்லரவானை பத்ரகாளிக்கு பலி கொடுத்தால் உன் கத்தி முனை செயமாகும் தருமராசனே.

## தர்மர் - சுவாமி தர்க்கத் தரு: 11

தரு:- பிள்ளை தனை பலிகொடுத்தால் ராகவனே
சுவாமி

---

முஸ்தீபு - முன்னேற்பாடு, ரணபேரிகை - போர்முரசு
கீர்த்தி - ஈகையினால் வரும் புகழ், நிருமையாய் - நேர்மையாய்

பொல்லாத பாவி என்பார் ராகவனே சுவாமி.

ஸ்ரீகிரு:- பாவி யென்பார் என்றுரைத்தாய் ராசனே
கேளாய் உங்கள்
பாளையத்தில் பட்சமுண்டோ ராசனே!

தரு:- பட்ச முண்டோ என்றுரைத்தீர் ராகவனே
சுவாமி
பாலகன் மேல் எதிரியுண்டோ ராகவனே
சுவாமி.

ஸ்ரீகிரு:- எதிரியோ வென் றுரைத்தாய் ராசனே கேளாய்
முன்னால் ஏன் வதைத்தார் சீராளனை
ராசனே கேளாய்.

தரு:- சீராளன் முகமை சொன்னீர் ராகவனே சுவாமி
செத்தானோ பாலகன் தான் ராகவனே சுவாமி.

ஸ்ரீகிரு:- செத்தானோ வென்றுரைத்தீர் நீங்கள்
செய்த தவம் பழுது போமோ ராசனே கேளாய்.

தரு:- பாராள வேண்டியாரும் ராகவனே சுவாமி-தன்
பாலகனை பலி வைப் பாரோ ராகவனே
சுவாமி.

ஸ்ரீகிரு:- ஆலகாலத்தை யுண்டோன் ராசனே கேளாய்
இது
அரனார் திருவருள் தானோ ராசனே கேளாய்.

தரு:- இவ்வுரை நீர் சொல்லுவதும் ராகவனே
சுவாமி இது
எவர்க்கும் சரியாமோ ராகவனே சுவாமி.

---

சீராளன் - பரஞ்சோதிப் பண்டிதன் எனும் சிறுத் தொண்ட நாயனாரின் மகன் - இவனை அறுத்துக் கறியமுதாக்கி சிவனுக் கிட்டனர் பின்னர் சிவனருளால் உயிர் மீண்டு உருப்பெற்று வந்தான்

ஸ்ரீகிரு:- பாலனைப் பலி கொடுத்தால் ராசனே கேளாய்
நீங்கள்
பட்டங்கள் ஆளுவீர் புவியெல்லாம் ராசனே
கேளாய்

தரு:- புவியாள்வீர் என்றுரைத்தீர் ராகவனே
சுவாமி நாங்கள்
போகிறோமையா கானகத்திற்கு
ராகவனே சுவாமி.

ஸ்ரீகிரு:- கானகத்திற்குப் போகிறோ மென்றாய்
ராசனே கேளாய் மங்கை
கார் குழல் முடிப்ப தெப்போ ராசனே கேளாய்.

## தருமர் விருத்தம்:- 22

முடிப்பதும் எப்பொழுதென்று முகுந்தனே சொல்லவந்தீர்
அடிக்கடிப் பாலனை அறுத்திடச் சொன்னீரையா
நொடித்திடும் நொடிக்குள்ளே நூற்றுவரையும் பின்னும்
அடுத்திடும் சேனைகூட அதம்பண்ணி குழல்முடிப்பேன்.

## வசனம்

அகோ வாருங்களையா சுவாமி பெற்ற மைந்தனைப் பலிகொடுத்து ராச்சிய பாரம் ஆளத்தேவையில்லை. தேவரீருடைய சீர்பாதகமலம் ஒன்றே போதுமையா சுவாமி.

## தரு: 12

## தருமர் - ஸ்ரீ கிருஷ்ணர் தர்க்கத் தரு:

தரு:- எந்த உலகத்தில் இந்தக் கொடுமை ஏற்குமோ
என் சுவாமி.
பெற்ற மகனைக் கொல் லென்று வாயினால்
சொல்ல
மன்து வருகுமோதான்.

ஸ்ரீகிரு:- மனம் வருகுமோ என்று இதைத்துடன் என்
முன்னே வருத்தாய் மன்னா
அன்ன நடை மாது திரௌபதி தேவிக்கு
அழகாய் முடிப்ப தெப்போ ஓய்-மன்னா

தரு:- அழகாய் முடிப்பதற்காக மதலையை ஆரேனுங்
கொல்வாரோ இப்போ அங்கம் பதறுதே
ஆ இதற் கென் செய்வேன் அச்சுதா என்
சுவாமி.

ஸ்ரீகிரு:- அச்சுதனே என்று பட்சமாய் என் முன்னே
அறைய வந்தாய் அரசே உங்கள்
அரிவை தனை அன்று அம்பலமேற்றி
அவமானம் செய்தானே ஓய் மன்னா

தரு:- செய்த வினையது செய்தவனைச்சூழும்
பையரவில் துயில்வோய் என்
சிந்தை கலங்குதே சித்தம் வேறாகுதே திருவடி
சரணமய்யா,

ஸ்ரீகிரு:- சரணமென்று என்னிடம் நிர்ணயமாகவே
தான் உரைத்தாய் மன்னா அந்த
தாரணி முற்றும் அரவக் கொடியோனும் தானே
அரசாள் வான் ஓய் மன்னா

தரு;- அரச பதவி எங்கள் ஐவருக்கும் தேவையில்லை.
ஆரண்யமே போகிறோமையா தேவரீர்
அன்பு வைத்து எங்கள் ஐவரை என்றைக்கும்
அடைக்கலம் காருமையா.

ஸ்ரீகிரு:- அடைக்கலம் காக்க நீங்கள் என் சொற்படி
நடக்கவில்லையே மன்னா இனி
ஆருக்கு நஷ்டமோ உங்கள் மனதின்படி
ஆகவே செய்வீர் மன்னா.

---

நிர்ணயமாக - உறுதியாக. ஆரண்யம் - காடு.

## தருமர் விருத்தம் 23

மாதவா நாங்கள் இந்த மாநிலம் ஆளவே
பூதலத்தில் உள்ளோர்கள் ஏச என் பிள்ளையைக்
கொல்லமாட்டேன்
நீதமோ உமக்கிந்த நெறி தப்பி மொழிவதையா
ஸ்ரீதரா நந்தகோவே உங்கள் திருவடி சரணமய்யா

### வசனம் :

அகோ வாருங்களையா சுவாமி, சீமை பூமி ஒன்றும் தேவையில்லை, உங்களுடைய திருவடிக் கமலம் ஒன்றே போதுமையா சுவாமி :-

## கிருஷ்ணர் வெண்பா : 1

மெய்யனென்று பேர் படைத்த முரசக் கொடியோனே
வையகத்தார் உம்மை மதித்தாரே உன் செய்கையினால்
கண்டேன் விழிக்கு முன்னால் காணாத காட்சியெல்லாம்
கண்டேன் உமதிடத்தில் காண்,

### வசனம் :

அகோ வாரும் தருமராசனே உம்மை இந்த உலகத்தில் உண்டாகிய ஜனங்கள் நியாயவான் என்றும் சத்தியவான் என்றும் பொய் சொல்லாதவரென்றும் சொன்னபடியால் நான் மெச்சிக் கொண்டேன். இப்பொழுது யோசித்துப் பார்க்கும் அளவில் உம்மை விடப் பொய்யன் வேறு ஒருவர் கிடையாது மகாராசனே!

## தருமர் விருத்தம் : 24

பொய்யனென்று சொன்ன போதே மனந்தளர்ந்தேன்
அய்யனே எந்தனுக்கு அறிவிப்பீர்

செய்யும் வகைகாட்டும் உலகறிய கபடமதாய் எண்ணை
மிட்டு

மெய்யாய் பிசகிதே போம் - போம்:

**வசனம்**

அகோ வாருங்களையா சுவாமி. இந்த ராஜ சபையில் என்னைப் பொய்யன் என்று சொல்ல வந்தீர்களே அதை விவரமாக உலகத்தோர் அறிய சொல்லவேணு மையா சுவாமி!

**ஸ்ரீ கிருஷ்ணர் : தரு : 13**

**ஸ்ரீ கிருஷ்ணர் - தருமர் தர்க்கத் தரு)**

ஸ்ரீகிரு:- உண்மை வார்த்தைகள் உமதிடம் பேசுவது
தகுமோ இனிமேல் தகுமோ
ஊரறிய என் சொல் தவறி பேசுவது
தரமோ இது தரமோ.

தரு:- தவறுதல் சொல்வதை தரணியோர் அறியவே
சாதகமாகவே பேதகம் செய்ததைத்
தானுரைத்திட வேணும்
வஞ்சக வார்த்தையை நெஞ்சில் நினைந்து
கொண்டு பேசுநீர் நீர் பேசுநீர்
உண்மை வார்த்தைக்கு புரட்டன் என்று
நேர்த்தியதாய் அறிந்தேனே அறிந்தேனே:
அறிந்துகொள்ளும் வகை தெரிந்திட எங்களுக்கு
அறியவைப்பீர் ஸ்வாமி;

ஸ்ரீகிரு:- அன்புடனே நல்ல பழமொழி கூறும் அய்யா
உலகறிய
உலகத்தில் நன்னடத்தையால் கலைகள் கற்று
ஓதியதால் என்ன.

---

கபடம் - சூழ்ச்சி. பிசகு - தவறு. புரட்டன் - முன்கூறியதை இல்லை என மாற்றிக் கூறும் பொய்யன்

சகல பேரறிய சந்தியம் சொல்லித் தானதை
மறந்தாயே!

**சபை விருத்தம் : 25**
**(பீமன் வருகிற சபை விருத்தம்)**

தருமருக்கிளைய மன்னன் தாட்டீக புஜபலபராக் கிரமன்
மருவலர் பணியும் வீரன் மதகரி ராசன் தானும்
கருமுகில் வண்ணன் நாதன் கரிய மால் தன்னைக்
காண
அரியதோர் சபையிலேதான் அன்புடன் வருகின்றானே!

**வீமன் வருகிற : தரு: 14**

ராசாதி ராசனும் வந்தார் வாயுகுமாரன்
வீராதி வீரனும் வந்தார்:
ராசாதி ராசர் பணிய ஜெகத்திலுள்ளோர்
தேசாதி தேசத்தில் ஒளிய கீசகனையும் பகாசூரனையும்
இடும்பனையும் கிழித்தெரிந்த மகானு பாவன்
கேசவன் முராரியான ஆயனிடத்தில் நேசமுடன்
வந்தான்
(ராசாதிரா......)

செங்கையில் கதையும் இலங்க வீம ராசேந்திரன்
தேவர்கள் கண்டுமே நடுங்க
மங்கையர் கும்பங்கள் ஏந்தவே ரம்பைகள் நன்றாய்
மங்கள சோபனங்கள் பாட.
சங்கீத நாட்டியங்கள் ஆட வீம ராசேந்திரன்
செங்கண் மாலிடத்தில் வாரார் காண் :
(ராசாதி......)

மார்பினில் சந்திர ஆரம் இலங்க முத்து மோகன

---

கதை - கதாயுதம் கதை எனும் ஆயுதம்

மாலைகள் கழுத்தில் துலங்க அவர்
சீருடன் பணிகள் துலங்க வீம ராசேந்திரன்
சென்னியில் மகுடமிலங்க பார்தனையளந்த மாயன்
தன்னைக் காண வீரமுடன் வாரார் காண்
(ராசாதி......)

எத்திசையும் புகழும் வீரன் வீமராசேந்திரன்
சுத்த வீர பராக்கிரமன் வீமராசேந்திரன்
முத்தணிந்த மணிமார்பன் வீமராசேந்திரன்
மும்மதம் பொழியும் வீரன்
(ராசாதி......)

### கிருஷ்ணர் விருத்தம் - 26

மட்டில்லா புகழ் படைத்த மதகரி ராசன் வாசல்
கட்டியக் காரா உந்தன் காவலனிடத்தில் சென்று
இட்டமாய் துவாரகை வாழ்வான் இன்பமாய்
அழைத்தானென்று
துட்டரை செயிக்கும் தருமர் சுதர்மனை அழைத்து
வாராய்

**வசனம் :-**

அகோ வாரும் பிள்ளாய் கட்டியக்காரா! வாயு புத்திரனாகிய வீமராசாவை அழைத்து வாரும் பிள்ளாய் கட்டியக் காரா!

### கட்டியக்காரன் விருத்தம் :- 27

கீசகன் தன்னை வாரிக் கிழித்திடும் வதன ரூபா
வேள்மதன் தனக் கொப்பான வேந்தனே சொல்கேள்
கேளும்
ஏழிரு புவனம் தன்னை இன்பமாய் உண்ட மாயன்
நாளுமே வரவும் சொன்னார் நாதனே சரணம்
சுவாமி!

---

சுதர்ன்ம - தம்பி வேள் - மன்மதன்.

## வசனம்

அகோ சரணம் சரணமையா சுவாமி! வைகுந்த வாசராகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஆசாரமணி முகப்பிலே எழுந்தருளி இருக்கிராரென்று தங்களை அதிசீக்கிரமாக அழைத்து வரச் சொன்னாரையா சுவாமி.

## பீமன் : சரணத் தரு : 15

சரணம் சரணம் சாமி ரகுபதிக்கு
சரணம் சரணம் சுவாமி
சரச கோபால கிருஷ்ணா வரமும் கொடுக்க வேணும்
வைகுந்த வாசனே
(சரணம்......)

கார் வண்ண மேனியனே புவி யெங்கும் ஓரடி
அளந்தவனே
தாரணியோர் மன்னர் சீரடி பணியவே
காக்கும் உந்தனைக் கண்டு சேவிக்க வேணுமென்று
(சரணம்......)

எங்கும் புகழ் ஓங்கும் தசரதன் மைந்தனே
கார் வென்ற தங்கத் திருமேனி சச்சிதானந்தனே.
சங்கு சக்கரத் தோனே சரணம் சரணமையா
(சரணம்......)

பஞ்ச கோடி மண்டலம் பூசக்கரக் குடையும் தனைப்
பிடிக்க
வஞ்சகம் செய்த துரியோதனன் தன்னை அஞ்சாமல்
என் கதைக்கு
கொஞ்சம் உத்தாரம் தாரும் சரணம் சரணம்
(சரணம்......)

---

சேவிக்க - வணங்க.

## வீமன் : விருத்தம்: 17

கோதண்டம் கரத்திலேந்தும் கோபாலா ரத்தினக்
கிரிவாசா
யாதொன்றும் அறியார்போல அடியவர்க் கெளியவனே
நீதமாய் அறிவிற்குள்ளே நிரந்தரமான மூர்த்தி
ஏதென்னை அழைப்பித்த காரியம் இன்ன
தென்றியம்புவீரே!

### வசனம்:

வாருங்களைய்யா சுவாமி! அரிகேசவா! அடியேனை அழைத்த காரியம் இன்னதென்று அருள் செய்ய வேணு மையா சுவாமி!

## கிருஷ்ணர்: விருத்தம்: 29

மதகரி வீமா வாரும் மங்கை காளியர்க்குத் தானும்
இதமுடன் பாலன்தன்னை இன்பமாய் பலிகொடுத்தால்
உனது கைக் கதையும் தானும் உண்மையாய் ஜெயமே
ஆகும்
இனமுடன் அறிந்து சொன்னேன் இனி உந்தன் மனது
தானே!

### வசனம்:

வாரும் பிள்ளாய் வீமராசனே! உன் பாலகனாகிய நல்லரவானை பத்ரகாளிக்கு பலிகொடுத்தால் உன் வலது கையில் இருக்கிற கதாயுதம் ஜெயமாகும் பிள்ளாய் பீமராசனே!

## வீமன் கிருஷ்ணர் தர்க்கத் தரு: 16

பீமன்:- மன்தென்றும் சொல்ல வந்தீர் என்

மைந்தனைக் கொல்லு வேனோ! மாதவனே
அரி கேசவனே சுவாமி.

ஸ்ரீகிரு:- கொல்லுவேனோ என்று உரைத்தீர் சொன்ன
சபதம் வெல்ல
என்னமாய் முடியுமடா மன்னாவே மன்னா!

பீமன்:- முடியுமோ என்றுரைத்தீர்
அடியேனாலாகாதோ.
ஆயன் கிருபை யுண்டானால் மாயவனே சுவாமி

ஸ்ரீகிரு:- கிருபை என்று புகழவந்தீர் அரிவை குழல்
விரித்தாள்
முடிப்பதுவும் எப்பவடா மன்னாவே மன்னா!

பீமன்:- எப்பவடா என்றுரைத்தீர் இச்சணம் அதம்
பண்ணுவேன்
என்னாலே ஆகாதோதான் அச்சுதனே சுவாமி.

ஸ்ரீகிரு:- அச்சுதனே என்று மெல்ல பட்சமுடன் சொல்ல
வந்தாய்
அஞ்சாமல் பாலனை அதம் பண்ணடா வீமா

பீமன்:- அதம் பண்ணடா வென்றுரைத்தீர்
அடியேனால் ஆகா தது தானே
ஆரண்யம் போகிறோமையா
நாரணரே சுவாமி.

ஸ்ரீகிரு:- ஆரண்யம் போவதற்கு வீரியமாகவே தான்
அதட்டி சபதம் பண்ணுவான் ஏனடா வீமா!

**வீமன் விருத்தம் : 30**

சகிதம் என்றெனுக்கு மெத்த சம்பிரமாய் சொல்ல
வந்தீர்

---

அதம் பண்ணல் - அழித்தல்.

உசிதம் தாமோ உலகில் பாலகன் உயிர் வதை செய்
வாருண்டோ
நிகிதமாய் எண்ணவேண்டாம் நெடியமால் கிருமையாலே
அபஜெய தளங்கள் எல்லாம் அதம்பண்ணி குழல்
முடிப்பேன்

### வசனம் :

அகோ வாருங்களையா சுவாமி அரிகேசவா பிள்ளையைப் பலி கொடுத்து இராச்சியம் ஆளத்தேவையில்லை. தேவரீருடைய சீர் பாதகமலம் அடியேனுடைய சிரசின் மேல் இருந்தால், அந்த பாவியாகிய துரியோதனனாதிகளையும் அதம் அதம் பண்ணி திரௌபதியின் விரிந்த கூந்தலை எடுத்து முடிக்கச்செய்குறேனையா சுவாமி.

### அர்ச்சுனன் வருகிற சபை விருத்தம் : 31

துதித்திடும் அஸ்தினாபுரம் சூழ் நகராண்ட மன்னன்
விதித்த நூற்றுவர் தம்மை வெற்றிசேர் ஜெயிக்கும் வீரன்
கதித்து மூவுலகாண்ட கரியமால் தன்னைக் காண
உதித் தெழுங் கதிரோன் போலே ஒளிர்வுடன் விசயன்
வந்தான்.
அண்டருக் கரசர் மைந்தன் அனைவரும் புகழும் வீரன்
வண்டணி நிறைத்தையுள்ளோன் மாயவன் தனக்
கன்புள்ளோன்
அன்று முப்புரம் எரித்த அண்ணல் மேல் கணை
தொடுத்தோன்
அண்டினோர் தனைக் காக்கும் அர்ச்சுன ராசன் வந்தான்

---

சகிதம் - துணை நிகிதம் - விரோதம் உசிதம் - சரியானது
தளங்கள் - படைகள் ஹிதம் X நஹிதம் - நிகிதம் (வடசொல் மருவியது) கதித்து - கோபங்கொண்டு.

## அர்ச்சுனர் வருகிற தரு: 17

வானவரரசன் குமாரரெனும் கிரீடி வந்தானே.
சபையில் ராசாதி ராசன் - அவர்

(வானவர்)

தான் என்று எதிர்த்தவர் தன்னைத் துணித்திடும்.
தாட்டீக முள்ள வீரன் ராசாதிராசன்

(வானவர்)

அந்த ஆனைஉரித்துத் தரித்தவரைப் பார்தன்னில்
வில்லால் அடித்த ராசன் ராசாதிராசன்

(வில்லால்)

செங்கையில் அஸ்திரமும் முன்கையில் பாணமும்
சிங்கரணி அம்பும் பிடித்து ராசாதிராசன்

(செங்கை)

அங்குசனைப் போலவே சிங்கார மாகவே
மங்களனாம் சுதனாம் ராசாதிராசன்

(வானவராசன்......)

அரவக் கொடியோனைக் கருவறுத்திடும் மன்னன்
தருமர் சகோதரன் தான் ராசாதிராசன்
வெகு பிரபல்ய மாகவே காண்டாவனம் தன்னை
பெருமையுடன் எரித்தான் ராசாதிராசன்

(வானவரரசன்......)

ஈரைந்து நாமம் தரித்தவர் பார்தன்னில்
எங்கும் புகழ்ந்திடவே ராசாதி ராசன்
சுத்த வீர பராக்கிரமனெனும் கிரீடி
நாரணன் முன் தோறினார்:

(வானவர ரசன்.....)

---

வானவரரசன் - இந்திரன் அங்குசன் - மன்மதன்
சிங்கரணி - அம்புக்குடலை. பிரபல்யம் - புகழ்.

## கொச்சகம் : அர்ச்சுனன்

வானவர்க்காக இராவணனை வதைத்த அரிகேசவனே!
வானுலகளந்தவனே மாயவனே என் கோனே!
ஜானகியால் மாரீசன் தன்னை வதை செய்தோனே!
யானுனது சரணமையா ஆதி நாரா யணனே!

## அர்ச்சுனன் தரு: 18

ராசனாம் மகாராசன் வருகிறான்
தனஞ் செயன் எனும் கிரீடி

(ராசனாம்......)

ராசன் வருகிறான் நேசம தாகவே
நாராயணன் தன் சீரடி பணியவே
ஈசனை வில்லால் அடித்த பார்த்தன்
பாசு பதாஸ் திரம் வாங்கிய பற்குணன்

(ராசனாம்......)

தேவேந்திரனுக்கு மகனானவர் திருமால் எனும்
கிருஷ்ண தேவருக்கு மைத்துன னானவர்
இந்த மூவுலகத்திலுள்ளோர்க் கெல்லாம் அதிபதியானவர்.
பூரண சந்திர வதன முடையவர் தேவி சானகியால்
பாவி இராவணன் வர்க்கம் குலைத்த கேசவர் தம்மிடம்
தேவகி நந்தனா ரெகு நந்தனா மாதவனே
திருத்தாள் சரணம் என்று

(ராசனாம்......)

முடிதனில் மகுட மணிந்து இளம் பிறை யொத்த
நுதலதில் திருமணியது அணிந்து அந்த நெடிய
மால் தன்னை
மனதிலே துதித்து கையில் தனுசு பிடித்து
முதுகில் அஸ்திரத் தூணிலங்க தூணில் அம்பு தரித்து

---

நுதல் - நெற்றி. கடுகி - வேகமாக.

இடையில் முப்பத்திரண்டு ஆயுதமும் கட்டி
இரவி போல் குண்டலம் செவிதனிலே யிட்டு
கடுகி மிகுந்த கதம்பந் திமிர்ந்திட காகுத்தனைக்
கண்டு சேவிக்க வேணு மென்று

(ராசனாம்......)

## அர்ச்சுனன் கொச்சகம்

செங்கருடன் மீதில் அமர்ந்த செங்கண்ணெடு மாயவனே
எங்கள் சிகாமணியே இருதயத்தில் நின்றவனே.
பங்கயம் தனையளந்த மங்கள சௌந்தர்யனே
சங்குசக்கரத்தோனே சுவாமி சரணமையா.

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம்: 32

மதிமனுநீதி தவறாத மன்னவன் கீரீடி வாசல்
கதிரொளி போல விளங்கும் கட்டியக் காரா கேளாய்
துதி பெரும் துவாரகை வாசன் சுகமுடன் அழைத்தரென்று
மதிகுலத் தரசன் தன்னை வணங்கி நீ அழைத்து வாராய்

## வசனம்:

அகோ வாரும் பிள்ளாய் கட்டியக் காரா, அருச்சுன மகா ராசனை அழைத்து வாரும் பிள்ளாய் கட்டியக் காரா

## கட்டியக்காரன் விருத்தம் - 33

கானகம் தனை யெரித்த காண்டீபம் பெற்ற தீரா
வானவர் தேவர் மெச்சும் மன்னவனே சொல்லக் கேளும்

---

தனுசு - வில் காகுத்தன் - கண்ணன்.
காண்டீபம் - காண்டீபம் எனும் வில் காண்டீபன்-அர்ச்சுனன்
கிரீடி - அர்ச்சுனன்

மாநகர் அளந்தமாயன் மகிழ்ந்துமே வரவுஞ்
சொன்னார்
நானுமே உமது பாதம் சரணம் சரண மையா:

**வசனம் :**

அகோ சரணம் சரணமையா சுவாமி! ஆதி வஸ்துவான அனந்த கோபாலர், ஆசார மணி முகப்பிலே எழுந்தருளி இருக்கிறார் என்று, தங்களை அதிசீக்கிரம் அழைத்து வரச் சொன்னாரையா சுவாமி!

**அர்ச்சுனன் : சரணத் தரு: 19**

நமஸ்காரம் செய்குறேன் சுவாமி எந்தன்
மனக்கவலை தீரும் சுவாமி:
நமஸ்காரம் செய்குறேன் நாரணர்க்குக் கிரீடி
நந்த குமாரா நவநீத ஸ்வரூபா
(நமஸ்காரம்......)

சுந்தர கோதண்டபாணி சோதி சுடரொளி யாகியவா
நீ என்
சிந்தையிலே உன் திரு நாமம் எந்நாளும்
தியானம் செய்பவர்க்கு கியானம் அளிப்பீரே!
(நமஸ்காரம்......)

அண்டரைக் காத்து அபயம் அளித்தீரே! எமன்
சண்டனையும் ரக்ஷித்தீரே! இந்த
மண்டலத்திற்கொரு மச்சமுமானோனே
கெட்ட இராவணனைக் கொன்ற கோவிந்தா அரிகரி.
(நமஸ்காரமும்......)

சர்வ ஜீவாத்மாவும் நீரே பூமிதனில் துஷ்ட்ட
நிக்கிரகரும் நீரே! அந்த துரியோ தனன் பாவி

---

கியானம் - ஞானம். இச்சணம் - இந்த க்ஷணம் இது நேரம்.

மணிமுடியது கொய்ய இனி தாமதம் என்ன
அநுக்கிரகம் செய்யுமய்யா

(நமஸ்காரம்......)

## சபை விருத்தம்: 34

வந்து பார்த்திபன் தானும் மாயவனார் இடத்தில் சென்று
அந்தமாய் போற்றி செய்து அடியது வணங்கி நின்று
எந்தனை அழைத்த காரியம் இன்னதென்றுரைக்க
வேணும்
செந்திருவை மார்பில் வைத்தவா திருவடி சரணம் சுவாமி

### வசனம்:-

அகோ வாருங்களையா சுவாமி! அடியேனை அழைத்த காரியம் இன்னதென்று அருள் செய்ய வேணுமையா சுவாமி!

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம்: 35

அர்ச்சுனா வாரும் நீர்தான் அன்புடன் காளியர்க்கு
இச்சணம் பாலன் தன்னை இன்பமாய்ப் பலி கொடுத்தால்
உன் அஸ்திரம் ஜெயமே ஆகும் நீ அன்றிட்ட சபதம்
வெல்வாய்
நிச்சயமாகச் சொன்னேன் நீ அறிந்து கொள்வாய்!

### வசனம்:-

அகோ வாருமையா அருச்சுனமகா ராசனே உன் பாலகனாகிய நல்லரவானை பத்திரகாளிக்குப் பலி கொடுத்தால் உன் பாண முனை செயமாகும் அர்ச்சுன மகாராசனே.

## அர்ச்சுனர் கிருஷ்ணர் தர்க்கத் தரு : 20

அர்ச்:- அறிந்து கொள்ளும் என்றுரைத்தீர் ராமா
அடியேனால் ஆவதென்னா ராமா.

ஸ்ரீகிரு:- ஆவதென்ன வென்றுரைத்தாய் மன்னா. உங்கள்
ஆயுதம் ஜெயிக்கச் சொன்னேன் மன்னா:

அர்ச்:- ஆயுதம் செயிக்க வென்றால் ராமா. உலகில்
பாவி யென்று தர்மம் பிறழ லாமா

ஸ்ரீகிரு:- பாவி என்று வாது கூற வாராய் மன்னா.
நாளை சேதிகளறியவே நீ போராய் மன்னா

அர்ச்:- போ வென்றுரைக்க வந்தீர் ராமா ராமா
எந்தன் பிள்ளை தன்னைக் கொல்ல மாட்டேன்
ரரமா அரிகரி ராமா

ஸ்ரீகிரு:- கொல்லே னென்று உரைக்க வந்தீர் மன்னா
கோர்தை குழல் முடிப்ப தெப்போ மன்னா.

### அர்ச்சுனர் - விருத்தம்

முடிப்பதும் இல்லை என்று முகுந்தனே சொல்ல வந்தீர்
அடிப்பேன் நான் தளங்கள் எல்லாம் ஆயனார்
சிருபையாலே
பொடிப் பொடியாகச் செய்து பூவைதன் குழல்
முடிப்பேன்
மடிப்பது சொல்லவந்தீர் என் மைந்தனைக் கொல்ல
மாட்டேன்

### வசனம்

அகோ வருங்களையா சுவாமீ மைந்தனைப் பலி கொடுத்து ராச்சிய பாரம் ஆண்டார்கள் என்று உலகத்தார் நகைத்திடார்களோ சுவாமி!

---

பாணமுனை - அன்புமுனை    தளங்கள் - படைகள்.

## அர்ச்சுனர் ஸ்ரீ கிருஷ்ணர் தர்க்கத்தரு : 20

அர்ச் : என்னவென்று மனம் துணிந்து மாதவனே சுவாமி
எப்படி துணிப்பேன் நான் என் சுதன் தன்னை மாதவனே சுவாமி.

ஸ்ரீகிரு : கண்ணல் மொழி திரௌபதிக்கு மன்னா கேளாய் நாளை
கருதிய குழலது முடிப்பது எப்போ அர்ச்சுன ராசனே!

அர்ச் : எப்போ வென்று உரைக்க வந்தீர் கேசவனே சுவாமி ஒப்பிதமாகுமோ இப்படி வார்த்தைகள் மாதவனே சுவாமி!

ஸ்ரீ கிரு : ஒப்பிதமாகா தென்றுரைத்த மன்னரே கேளாய் எப்படி ஜெயிப்பீர் இப்பெருந் தளங்களை ராசனே கேளாய்.

அர்ச் : ஜெயிக்க மாட்டேன் என்றுரைத்தீர் மாதவனே சுவாமி இனி பொறுக்கமாட்டேன் இவ்வார்த்தைகளை மாதவனே சுவாமி.

ஸ்ரீகிரு : மாட்டேன் என்றுரைக்க வந்தீர் ராஜனே கேளாய் போட்ட சபதங்கள் முடிப்பதும் எப்போ அர்ச்சுனராசனே !

அர்ச் : முடிக்கமாட்டேன் என்றுரைத்தீர் மாதவனே சுவாமி நாளை அடிப்பேன் நான் அவன் தளங்களை எல்லாம் மாதவனே சுவாமி

ஸ்ரீகிரு : மாதவா கேசவா என்ற ராசனே கேளாய் இப்போதே உன் சுதன் தன்னைக் கொல்வீர் அர்ச்சுனராசனே!

## அர்ச்சுனர் விருத்தம்: 36

சுதன் தன்னைக் கொல்வீர் என்று சொல்லிடும்
வார்த்தை வேண்டாம்
செகந் தன்னில் மன்னவர் கேட்டால் சிரித்துமே
நகைத்திடாரோ.
நகந்தன்னால் இரணியனை நிச்சயம் கிழித்த ராமா.
பகர்ந்திடும் வரர்த்தை வேண்டாம் பாலனைத் துணிக்க
மாட்டேன்

### வசனம்

வாருங்களைய்யா சுவாமி! அரிகேசவா! பிள்ளையைக் கொல்வதற் கென்னால் ஆகாது ஆனால் உங்களுடைய சம்மதம் போல் நடந்து கொள்கிறேனையா சுவாமி!

## நகுலன் கொலு விருத்தம்: 37

ஜெகதல மன்னர் போற்றும் தீரனாம் நகுல ராஜன்
மகுடமுடி தரித்து மாயனைத் தியானம் செய்து
விகட சங்கீத லோலன் விஜயனுக் கிளைய மன்னன்
தக தக வென்றிலங்க சபைதனில் வருகின்றானே!
உன்னிதக் கலைகள் மின்ன உரக ரெத்தினம் துன்ன
சென்னியில் மகுடமின்ன சிலை அம்பு பிடித்த மன்னன்
மன்னர் மண்டலீகர் வந்து மாமுடி வணங்கிப் போற்ற
நன்னய மாகவேதான் நகுல ராசனும் வருகின்றானே.

## நகுலன் : தரு (சபை) 21

தத் தித் ஜெம் தரி தா தோமென
தகிட திமி திமி த திங் கிண தோமென ராஜன்
வந்தானே!

---

உரகம் - பாம்பு    உரக ரத்தினம் - நாகரெத்தினம்.

நகுல மகா ராஜன் வந்தானே!
ராஜனும் வந்தானே நேசமதாகவே நாராணன்
தன்னுடைய சீரடி பணியவே
சென்னியில் மாமுடி மின்னவே நுதலில் செந்தூர
திலகமும் துன்னவே
அவர் செங்கையில் வாள் தள தள வென்னவே
செவியில் குண்டலங்கள் பளபள வென்னவே
எண்ணிலாத அரசர்களும் நன்னியமாகவே பொன்னடி
பணியவே உன்னிதமாகவே
(ராசனும்......)
மார்பினில் சந்திர ஆரம் இலங்கவே நல்ல
மதிவதனமும் துலங்கவே
தாரணி அம்புயம் குலுங்கவே கையில்
தனுசும் அம்பும் அது இலங்கவே
தாரணி அளந்த மாலின் சீரடி பணியவே
வாரிசை மலர்க் கையை மாமுடிமேல் வைத்து
(ராசனும்......)
எத்திசையும் புகழும் திருதராஷ்ட்டிரன் பெற்றிடும்
புத்திரனாம் அந்தக் கொற்றவன் என்றுரைத்த
துரியோதனன் கோமான் குல வைரி சுத்தி
அரவம்படைத்தவோர் காலால் மிதித்து நின்றாடும் மால்
சிற்றடி பணியவே
(ராசனும் வந்தானே......)

**நகுலன் கொச்சகம்:**

அன்ன வதனம் போல் அங்கி நிஜார் அணிந்து
சொர்ணமா முடியில் கலிக்கி டிகம்பர் வைத்து

---

சென்னி - தலை தாரணி அம்புயம்-மாலையணிந்த அழகான தோள்கள் வார் - வண்டு வாரிசை - வண்டுகள் இசைத்து மொய்க்கும் வைரி - விரோதி.

வண்ணமாய் சந்திரஹாரம் மார்பினில் தரித்த ராஜன்
சுவாமி
சன்னதியை நோக்கி சரணம் பணிய வந்தேன்!

## நகுலன் சரணத் தரு: 22

வந்தான் நகுலமகாராஜன் வந்தானிதோ நடனம் செய்து
விந்தையான புரவிமேல் சுந்தர நடை நடந்து
தந்திரம தாகவே தருமர் சகோதரன் தான்
(வந்தான்......)
கைதனில் வில்லம்பும் கொண்டு கத்தியும் கதித்த வாங்கும்
செய்யும் பணிகளாட பைய நடை நடந்து.
(வந்தான்......)
செங்கையில் அஸ்த்திரம் முன்கையிலே பிடித்து
திங்கள் நுதலில் பொட்டு சிரக்க பணிகள் பூண்டு
அச்சுதனைக் காணவென்று சச்சுதனை தியானம் செய்து
மச்ச கூர்ம அவதாரா ரெக்ஷியு மென்று
கோவிந்தா வென்று சொல்லி குணத்தைத் தரித்த
ராஜன்
தாவி மலர் கொண்டு மேவி மால் தன்னைக் காண
(வந்தான்......)
அந்தணர் முனிவரெல்லாம் அசைந்து சபையில் வர
துந்துபி மேள வாத்தியம் துரிதமான நடை அளிக்கவே
(வந்தான்......)

## ஸ்ரீகிருஷ்ணர்: விருத்தம்

நவமணி மாலைமார்பன் நகுல ராசேந்திரன்
கவனமாய்க் காக்கின்ற கட்டியக்காரா கேளாய்

---

கலிக்கி, டகம்பர் - நெற்றியில் அணியும் அணிகலன்கள் கலிக்கி டகம்பற் வைத்து என சுவடியில் உள்ளது. வாங்கு - கூர்முனை கொண்ட ஆயுதம். துந்துபி - ஒரு இசைக் கருவி.

புவனமே அளந்த மாயன் போற்றவே அழைத்தா
ரென்று
மவுனமாய் அரசன் தன்னை வணங்கி நீ அழைத்து
வாராய்...

**வசனம்:**

அகோ வாரும் பிள்ளாய் கட்டியக்காரா. நகுல மகாராசனை அழைத்து வாரும் கட்டியக்காரா;

**கட்டியக்காரன் : விருத்தம்**

சூழுல காளும் வேந்தன் சுந்தர ராசகோவே
வேள் மதன் தனக் கொப்பான வேந்தனே சொல்லக்
கேளும்
மாநர் அளந்த மாயன் மகிழ்ந்துமே வரவும் சொன்னார்
நானுமே உமது பாதம் சரணமே சரணமையா:

**வசனம் :-**

அகோ வாருங்களையா சுவாமி! ஆதி வஸ்து, அனந்த கோபாலர், நம்முடைய ஆசார மணி முகப்பிலே எழுந்தருளி இருக்கிறாரென்று தங்களை அதிசீக்கிரம் அழைத்து வரச் சொன்னாரையா சுவாமி:

**நகுலன்: சரணத் தரு : 22**

அகிலாண்டகோடி பரவாசு தேவனே சரணம்
வராக அவதாரனே புவியெங்கும் ஓரடியாய்
அளந்தவனே!
ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டவனே அச்சுதனே
அரி மச்சாவ தாரனே!
(அகிலாண்ட.....)

---

ஆதிவஸ்து - முதற் பொருள்.

ஐயனே சரணம் ஐவர்க்கும் மெய்யனே சரணம்
பையரவில் வாழும் தையலாள் சுதனே
வையகம் புகழும் அய்யனே சரணம்
(அகிலாண்ட......)
ஆதியில் காத்தவனே எங்கள் பேரில் சோதியை
வைத்தவனே
ஓதியே மொழிந்த சேதி தனைக்கேட்டு உச்சிதமாகிய
சச்சிதா சரணம்:
(அகிலரண்ட......)
சானகி தேவிக் காக இராவணனை சம்மாரம்
செய்தவனே
மனைவியாகிய லட்சுமிதேவியை வாஞ்சையாய்
நெஞ்சினில் வைத்தவனே சரணம்
(அகிலாண்ட......)

**நகுலன் : விருத்தம் : 38**

அம்புவி அளந்த மாலே ஆயனே என்னையிப்போ
சம்பிரமமுடனே நீரும் சலுதியில் வருகச்சொல்லி
இன்பமாய் அழைத்த காரியம் இன்னதென்றுரைக்க
வேணும்
நம்பினோர் தன்னைக் காக்கும் நாரணா போற்றி
போற்றி!

**வசனம்:**

வாருங்களையா சுவாமி 'அரிகரீவாசு தேவா! அடியேனை அழைத்த காரியம் இன்னதென்று அருள் செய்ய வேணுமையா சுவாமி:

---

வாஞ்சையாய் - ஆசையாய். சம்பிரமம் - சம்பிரதாயம் முறைப் படி. சலுதி - சல்தி, சீக்கிரம் (ஹிந்துஸ்தானி)

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம் : 39

பார்தனில் மன்னரெல்லாம் பணிந்தடி வணங்கிப்
போற்றும்
தீரனே நகுலா உங்கள் தேவி துரௌபதியாள் தானும்
கார் குழல் முடிக்க மங்கை காளியர்க்கு உமது பாலன்
தாரணி நல்லரவான் தன்னைக் களப்பலியும்
வைப்பாயே!

### வசனம்:

அகோ வாரும் பிள்ளாய் நகுல மகா ராசனே! உன் பாலகனாகிய நல்லரவானை பத்ரகாளிக்கு பலி கொடுத்தால் உன் பாணமுனை ஜெயமாகும் நகுல மகாராசனே!

### நகுலன் - கிருஷ்ணர் - தர்க்கத் தரு: 24

நகு:- பாலனைப் பலி வையென்றால் ராகவனே
சற்றும் பாராமல் சொல்லலாமோ ராகவனே

ஸ்ரீ கிரு:- பாராமல் சொன்னேனென்ற ராசனே கேளாய்
பாவை குழல் முடிப்பதெப்போ ராசனே கேளாய்

நகு:- குழல் முடிக்க வேணு மென்றால் ராகவனே
சுவாமி
பாரில் குழந்தையைக் கொல்வாரோ யாரும்
கூறும் ராகவனே சுவாமி.

ஸ்ரீ கிரு:- குழந்தையைக் கொல்வானோ என்றால்
ராசனே கேளும்
அன்று மொழிந்த தற்கென்ன செய்வாய் நீ
ராசனே கேளும்

நகு:- மொழிந்ததற் கென்ன செய்வேன் என்றால்
ராகவனே சுவாமி

பாலன் முடிதனைக் கொய்வாரோ யாரும்
ராகவனே சுவாமி.

ஸ்ரீகிரு:- கொய்வாரோ முடிதனை என்ற ராசனே
கேளாய்
நாளைக் குவலயம் ஆளுவதெப்போ ராசனே
கேளாய்.

நகு:- இவ்வுரை நீர் சொல்லுவது ராகவனே
ஏற்குமோ யாருஞ் சிரியாரோ ராகவனே

ஸ்ரீகிரு:- ஏற்குமோ என்று மொழிந்த ராசனே கேளாய்
நீங்கள் கேட்டபடி செய்வீர்களா ராசனே
கேளாய்

## நகுலன் விருத்தம்: 40

குழல் தன்னை முடிக்க வென்று குழந்தையை
கொல்லலாமோ
அலை கடல் தனில் துயின்ற ஆயனே என்னால் இல்லை
நிலவரமாகச் சொன்னேன் நிச்சயம் இதுதானய்யா
பலப் பல வார்த்தை வேண்டாம் பாலனைத் துணிக்க
மாட்டேன்.

## வசனம்:

அகோ சரணம் சரணமையா சுவாமி! குழல் முடிக்கிற நிமித்தம் பிள்ளையைக் கொல்வார்களோ சுவாமி.

## நகுலன் ஸ்ரீ கிருஷ்ணர் தர்க்கத் தரு: 25

நகு:- என்ன வார்த்தை சொல்ல வந்தீர்
கோதண்டபாணி
என் சுதனைத் துணியு மென்று.

---

குவலயம் - உலகம்.

ஸ்ரீகிரு:- துணிக்க லாகா தென்று சொன்னால் அரிவை
தன் கூந்தல் முடிப்ப தெப்போ.

நகு:- முடிக்க லாகா தென்று சொன்னால் உங்கள்
கிருபையால் அடிக்கிறேன் தளங்கலெல்லாம்.

ஸ்ரீகிரு:- தளங்களைச் செயிக் கிறோ மென்று மெத்த
சமர்த்தாய் தாஷ்டிகமாய் சொல்ல வந்தாய்

நகு:- வந்தால் உலகம் சொல்லாதோ அவனை
செயிக்க ஆயனார் கிருபை உண்டு.

ஸ்ரீகிரு:- கிருபை உண்டென்று புகல வந்தாய் பாலகனை
முடிதனைக் கொய்யும் ராசனே!

நகு:- கொய்யும் சுதனை என்று கபடமாகவோ
மெய்யாவோ சொன்னீர்.

ஸ்ரீகிரு:- மெய்யாகவே துரியோதனனை உங்கள் குலம்
செயிக்க வென்று சொன்னேன்.

## நகுலன் விருத்தம்: 41

பாராள வேண்டி யாரும் பாலனை பலி வைப்பாரோ.
கார் ஆனை த்தன்னைக் காத்த கார்முகில் வண்ண நாதா
போகிறோம் நாங்கள் கானகத்திற்கே புவியது
வேண்டாம் உந்தன்
சீர்பாத கமலப் பதம் திருவடி சரணம் சுவாமி.

### வசனம்

அகோ வாருங்களையா சுவாமி! பெற்ற மைந்தனை

---

தாஷ்டீகமாக - தைரியமாக, கம்பீரமாக. மேலும் பல இடங்
களில் இவ்வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

கார் ஆனை - கஜேந்திரன் என்ற யானையை.

பலி கொடுத்து ராஜ்ஜிய பாரம் ஆண்டார்கள் என்று
உலகத்தார் நகைத்திடார் களோ சுவாமி!

## சகாதேவன் விருத்தம்: 42

சாஸ்திரம் கையில் தாங்கும் சகாதேவ ராசன் தானும்
நேர்த்தியாய் பணிகள் பூண்டு நீலமேகத்தைப் போலே
சூத்திர தாரி மாயன் துணையடி பணியவே தான்
நாற்றிசை புகழும் வீரன் நலமுடன் வருகின்றானே!

## சகாதேவன் தரு: 26

ஐவருக் கிளையராசன் தெய்வப் புரோகித மகிபன்
துய்ய மதிபோலே வருகிறார் காண் சகாதேவராசன்
கைதனில் கணையும் வில்லும் கதித்த கட்டாரி அம்பும்
செய்யவே வல்லயம் வாங்குடன் விருதுபூண்டு
துய்ய மதிபோலே பையரவின் மேற் றுயின்ற
வையகம் அளந்த மாயன் செய்ய மலர்ப் பாதம்
காணவே
தையலார் சாமரை வீசவே சம்பிரமான
வைபோகத்துடன்
சங்கீத நாட்டியங்கள் ஆடவே! மங்கள மதாக
(ஐவரு......)

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம் : 43

வேத சாஸ்திர விநோத சீலன் சகாதேவராசன் வாசல்
நேர்த்தியாய் புகழும் கட்டியம் விதரணா சொல்லக்
கேளாய்

---

சாஸ்திரம் - சோதிட நூல்.
புரோகிதன் - சோதிட நூல் வல்லோன் கட்டாரி - கத்தி போன்ற ஆயுதம் வைபோகம் - விழா சதிருடன் - நன் முறையில் வல்லயம், வாங்கு - ஆயுதங்கள் விருது - பட்டம் விதரணன் - தெளிந்த அறிவினை உடையவன்.

சூஸ்த்திரதாரி மாயன் சுகமுடன் அழைத்தாரென்று
சாற்றிட நிமிஷம் தன்னில் சதிருடன் அழைத்து வாராய்

**வசனம்:-**

அகோ வாரும் பிள்ளாய் கட்டியக்காரா. சகாதேவ ராசனை அழைத்து வாரும் பிள்ளாய் கட்டியக் காரா:

**கட்டியக்காரன் விருத்தம் : 44**

சாஸ்த்திர விநோத சீலா சரச சிங்கார லோலா
நாற்றிசை புகழும் வீரா நகுலனார்க் கிளைய மன்னா
சூஸ்த்திரதாரி மாயன் சுகமுடன் அழைத்தாரையா
போற்றினேன் உந்தன்
யாத சன்னியம் சரணம் சுவாமி.

**வசனம்:**

அகோ வாருங்களையா! ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஆசார மணி முகப்பிலே எழுந்தருளி இருக்கிறாரென்று தங்களை அதிசீக்கிரம் அழைத்து வரச்சொன்னாரையா சுவாமி!

**சகாதேவன் விருத்தம் - 45**

உரகணை மீது துயின்றோங்கும் அரிகரி நாராயணா.
அச்சுதனே என்கோனே கருமுகில் நிறத்தோனே.
பாற்கடலில் துயின்றோனே சிறியேன் தன்னை
யழைப்பித்த
சேதி தன்னை சொல்லுமையா :-

**வசனம்:**

அகோ சரணம் சரணமையா சுவாமி அடியேனை

---

உரகணை - உரகம்+அணை - பாம்புப்படுக்கை

அழைப்பித்த காரியம் இன்னதென்று அருள்செய்ய வேணுமையா சுவாமி!

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம்: 46

ஐவருக் கிளைய மன்னா அன்புள்ள சகாதேவா
பையவே காளியர்க்கு ப்பாலனை பலிகொடுத்தால்
உய்யவே தளங்களெல்லாம் உன்படை வெல்லுவாய் கண்டாய்
தையலாள் என் தங்கையும் குழல் முடிப்பாள் உன் சமுதாடு செயமாகும்.

## வசனம்

அகோ வாரும் பிள்ளாய் சகாதேவராசனே உன் பாலனாகிய நல்லரவானை பத்ர காளிக்கு பலி கொடுத்தால் உன் சமுதாடு செயமாகும் பிள்ளாய் சகாதேவராசனே!

## ஸ்ரீ கிருஷ்ணர் சகாதேவன் தர்கத் தரு - 27

சகா : செயமாகும் என்றுரைத்தீர் தெரியும் காண்
சேதி கிருஷ்ணா அரீகரி மாதவனே சுவாமி!

ஸ்ரீகிரு : தெரியுமெந்தனுக்கு தீர்க்கமாய் சொல்ல வந்தாய்
துரியோதனைக் கொல்லுவதுஎப்பவடா மன்னா!

சகா : எப்பவடா என்றுரைத்தீர் இத்தக்ஷணம் அதம்
பண்ணுவேன் என்னாலே ஆகாதோ என்ன எம்பெருமாளே சுவாமி

ஸ்ரீகிரு : என்னாலே ஆகாதோ வென்று சொன்ன
மன்னா உன் சுதன் தனை துணியடா மன்னனே!

---

சமுதாடு-வாள் தீர்க்கமாய் - உறுதியாய்.

சகா : சுதனைத் துணியுமென்று சொல்ல வந்தீர்
அப்யா இது என்ன வார்த்தை அய்யா எம்
பெருமாளே சுவாமி!

ஸ்ரீகிரு: இது என்ன வார்த்தை என்று இயம்ப வந்தாய்
பையா என்னடா மெத்த மெத்த துள்ளுகிறாய்

சகா : பையாவென்று பதறாதீர் மாயவனே. அய்யா
உன்னைக் கொல்லுவேன் மெய்யாகவே சுவாமி

ஸ்ரீகிரு: கொல்லுவேன் என்று மெத்த வல்லமை பேச
வந்தாய் வெல்லுவாயோ எந்தனையும்
வேண்டாமடா பையா

## சகாதேவன் விருத்தம் - 47

வேண்டாம் என்று உரைக்க வந்தீர்
ஆண்டையும் நீர் தானய்யா அடிமையும் நான் தானையா
மாண்டாலும் மாள்வதல்லால் மைந்தனைக்
கொல்லமாட்டேன்
புண்டரீகா ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி போகிறேன் நான்
கானகத்திற்கே!

### வசனம்

அகோ வாருங்களையா சுவாமி! பாலகனாகிய நல்லரவானைப் பலி கொடுக்கிறதைப் பார்க்கிலும் பழைய படியே கானகங்களிலே திரிந்து காய்கனி கிழங்குகளைப் புசித்துக்கொண்டு காலம் போக் கினால் உசிதமாகத் தோன்று கிறது பாலகனைப் பலி கொடுக்க என்னாலே முடியாது பழைபடி ஆரண்யம் போகிறோமையா சுவாமி!

---

துள்ளுகிறாய் துள்ளிப் பேசுதல்-எதிர்த்துப் பேசுதல்.
ஆண்டை - தலைவன், உடைமையாளன்
புண்டரீகம் - தாமரைமலர்.

## கிருஷ்ணர் சகாதேவன் தர்க்கத்தரு: 28

ஸ்ரீகிரு:- கானகத்திற்குப் போகிறேனென் றுரைத்தாய்
மன்னா
காரியம் இதுவல்லடா சகாதேவா காரியம்
இதுவல்லடா

சகா:- காரியம் இதுவல்லவென்றால் கார்முகில்
வண்ண நாதா.
பாரில் என் சுதனைக் கொல்லவா
கோதண்டபாணி

ஸ்ரீகிரு:- சுதனைக் கொல் வாறோ வென்று
உசிதமாய்ச்சொல்லவந்தாய்
துரோகம் உங்களுக் கில்லையடா சகாதேவா.

சகா:- துரோக மில்லையென்றாலும் துணியுமோ
மனது
துவாரகா புரி வாசவா கோதண்டபாணி.

ஸ்ரீகிரு:- துணியுமோ வென்றால் இனிமேல்
நமக்கென்னடா.

சகா;- பஞ்சை யென்னும் சொல் சொன்னீரே உன்
செயலில்லா விட்டால் பாரில் இருப்போமோ
இத்தனை நாளாய்

ஸ்ரீகிரு:- பாரில் இருப் போமோ வென்ற சொல்
வீரியமாக வே உந்தன்
பாலனைப பலி வையடா சகாதேவா
பாலனைப் பலி வைத்து பாராளவேணுமோ
தான்
சீலமாய் வனம் போகிறேன் காண் கோதண்ட
பாணி.

---

பஞ்சை - பிழைக்க வழியற்றவர்.

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம் : 48

கானகம் போகிறேனென்று கருதியே மொழிந்தாய்
மன்னா
வானவர் அறிய உந்தன் மங்கையர் சபதம் சொன்னாள்
தேனவள் மொழிந்த வீரம் செயித்திட வேண்டு
மென்றால்
மானமுள்ளவனானால் மைந்தனை நீ எற்றிடாயே

### வசனம்:-

அகோ வாரும் பிள்ளாய் சகா தேவராசனே உங்கள் தேவியாகிய திரௌபதியானவள் அந்த ராஜசபையில் நின்று சபதம் சொன்னாளே அந்த சபதம் இப்போது நிறைவேற வேண்டுமானால் உன் மைந்தன் தன்னை களப் பலியாய் வையும் பிள்ளாய் சகாதேவ ராசனே!

## சகாதேவன் ஸ்ரீகிருஷ்ணர் : தர்க்கத் தரு : 29

சகா:- களப் பலி வையென்று கருதி வந்ததைச்
சொன்னீர்
அடுக்குமோ உலகினில் ஆயனே சுவாமி

ஸ்ரீகிரு: ஆயனே யென்று மெத்த நேயமாய்ப் பேசு
கிறாய் உபாயம் உனக்குச் சொன்னேன்
உண்மையைக் கேளாய்

சகா : உண்மையென்று சொல்லி நம்மிடம் சொல்லு
கிறீர் என் மகனைத் துணிக்க ஏற்குமோ ராமா

ஸ்ரீகிரு: ஏற்குமோ வென்று நீர் இயம்ப வந்தாய்
பையா போர்க் களந் தன்னில் பொறுமை
என்னடா

---

உபாயம் - நல்ல யோசனை.

சகா : பொறுமை என்னடா வென்று புகல வந்தீரய்யா
அருமை பாலகனை அறுக்கவோ அச்சுதனே!

ஸ்ரீகிரு : அச்சுதனே என்று பட்சமாய்ப் பேசுகிறாய்
உச்சித வார்த்தைகள் ஒவ்வாது மன்னா!

சகா : ஒவ்வாதென்று உவமை சொல்ல வந்தீர்
மூவுலகம் நகைக்கும் முகுந்தனே சுவாமி

ஸ்ரீகிரு ; நகைக்கும் என்று சொல்லி நம்மிடம் பேசுகிறாய்
பகைக்குச் சொல்லவில்லை பாரதம் முடியவே

சகா : பாரதம் முடிக்க வென்று நீர் பகரவும் வந்தீரே
வேறோர் துணையில்லை காண் விண்ணளந்
தவனே

ஸ்ரீகிரு : வேறோர் துணையில்லை என்று பாரத்தைப்
போடுகிறாய் ஆர் தான் முடிப்பர் அரிவை தன்
கூந்தல்

சகா : குழல் முடிக்க வேண்டுமென்று குழந்தையைக்
கொல்லலாமோ!
அலைகடலில் துயின்ற அரசனார் மைத்துனரே

ஸ்ரீகிரு:- துயரை மெத்த சொல்லவந்த மன்னா
விகண்டு சொன்னே னென்று வேதனை
சொல்கிறீர்
பயந்து வருகுது இப்போ பாலனைக் கொல்ல

## சகாதேவன் விருத்தம் : 69

மாதவர் நாங்கள் இப்போ மாநிலம் ஆளவேண்டி
பூதலத்தி லுள்ளோர் ஏச பிள்ளையைக் கொல்ல
மாட்டோம்
நீதமோ உமக்கு இந்த நெறிதப்பி மொழிவதையா
சீதரா நந்தகோவே திருவடி சரணம் சுவாமி!

---

பட்சமாய் - அன்பாய் விகண்டு - விகல்பமாக வேறுவிதமாக மாறாக.

**வசனம் :-**

அகோ சரணம் சரணமையா சுவாமி. முன்னாலே துரியோதனுடனே சொக்கட்டான் ஆடி அபஜெயப்பட்டுப் போனோம். மைந்தனைப் பலிகொடுக்க என்னால் ஆகாதையா;

**சபை விருத்தம் : (பாஞ்சாலி)**

பாஞ்சால ராஜன் யக்யம் பரிவுடன் பிறந்த தேவி
சாய்ந்தாடும் மயில் போல் கூந்தல் தரணியில் தரள
வேதான்
நீதி அஞ்சாது மாய்கை செய்த நெடிய மால் தன்னைக்
காண
பூஞ் சோலை யளிப் பெண்மாதர் பின் சூழ
வருகின்றாளே!

**கொச்சகம் (பாஞ்சாலி)**

தங்கப் பணிகள் பூண்டு சவரணையாய் மெட்டியிட்டு
மங்கையர்கள் இருபுறமும் வெண்கவரி வீசிவர
செங்கையில் வளையல்கள் இலங்க சிற்றடி சிலம்பலுங்க
பங்கமிலா ஐவர்தேவி பாஞ்சாலி தோணினாளே!

**பாஞ்சாலி வருகிற தரு - 30**

வந்தாளே தேவி என்னம்மணி வந்தாளே தேவி
வெள்ளிப் பல்லக்கிலேறி என்னம்மணி தங்கப்
பல்லக்கிலேறி
தாதிமார் பின் சூழ ஐவருக்கும் கைகொடுத்த என்றைக்கும்
அழியாத திரௌபதியாள் பஞ்சவர்க்குக் கைகொடுத்த
என்னம்மணி பத்தினி வாராளே!

---

சீதறா-ஸ்ரீதரா யக்யம் - யாகம் வேள்வி மாய்கை - மாயம்.

பாஞ்சால ராசன் பெற்ற என்னம்மணி
பதிவிரதையாள் திரௌபதி
முத்துப் பல்லக்கிலேறி என்னம்மணி முடிமன்னர் செயங்
கூறவே தேவி வந்தாளே என்னம்மணி

**கொச்சகம் பாஞ்சாலி**

ஆடகப் பொன் மெட்டியிட்டு அழகு ரத்தினத்
தண்டையிட்டு
பாடகக் கங்கணமிட்டு பசும்பொன் சதங்கையிட்டு
தேடணிசேர் வேல் விழியாள் தோகையின் சாயலுள்ள
வாடா மலர் முகத்தாள் மாயவன் சபைக்கு வந்தாள்

**பாஞ்சாலி வருகிற தரு - வேறு**

தேவி வந்தாளே சயனந் தரி தேவி வந்தாளே!
தேவி வந்தாளே ஸ்ரீ ராமர் தன்னைக் கோரி
சித்தர்கள் முனிவர்கள் சிறந்த மலர்கள் தூவ
(தேவி வந்தா.....)
செங்கை வளையிலங்க சிற்றடி தன்னில் சிலம்பும்
ஒளி துலங்க
இடைதனில் தங்கக் கொடி துலங்க ஸ்தனத்தில்
ரத்தினத் தாவடம் இலங்க
குயிலதுபோல் நங்கைமார்களுடன் இங்கிதமாகவே
ரஞ்சிதத்துடனே
மிஞ்சி கொஞ்சி ஒயிலாய் நடைநடந்து
(தேவி வந்தாளே.....)
சேலை இடையிட்டு திருநுதலில் சிறந்த திலகமிட்டு
ஸ்தனத்தில் ரத்தினத் தாவட வளையலிட்டு
தங்கச் சரிகையாலே ரவிக்கை தொட்டு
தத்தையர்கள் போலெனவே மொழிந்து
ஞானத் தோர்கள் புகழும் பூவையெனும் இவ்

---

சவரணையாய் - அழகாக. திரௌபதியின் வேறு பெயர் - சயனந்தரி, பாஞ்சாலி ஆகியன.

வனத்தில் தேவி ரகுபதியெனும் மாயனைத் தேடி
(தேவி வந்தாளே......)
மாலை ஒளி துலங்க மயிர் அவிழ்ந்து தாளின் மேல் புரள
கந்த களபங்கள் மேலே திமிர்ந்து வீசவே
சோலைக் குயிலது போல் மெல்லவே மொழிந்து
நீலமேக ஆயன் மாயன் தமைக் கோரி.
(தேவி வந்தாளே......)
வந்தாளே சயனந் தரி ஆயனிடத்தில் வந்தாளே
சயனந்தரி அவள்
செந்தனலில் பிறந்து அந்தமுடனே வளர்ந்து
குந்திமக்கள் பாரியான சுந்தரி பஞ்சகல்யாணி
(வந்தாளே......)
அஞ்சுகம் போலே அசைந்து கொஞ்சி வாசம் பொழிந்து
செஞ்சதங்கை தாளில் கொஞ்ச வஞ்சியர்கள்
நாட்டியங்களாடவே
(வந்தாளே......)
தூயமதிபோல் துலங்க கைதனில் கிளி யிலங்க
தையலார் சாமரை வீச வையகத்துள் ளோர் பணிய
(வந்தாளே......)
மையல் கொண்ட கீசகனை வதைத்த சயனந்தரி
செய்ய தோர் அன்னத்தைப் போல
பையவே நடை நடந்து
(வந்தாளே......)

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம்: 51

மங்கையர்க் கரசியான மாது திரௌபதியாள் வாசல்
திங்கள் போல் விளங்கும் கட்டியம் தீரனே!
சொல்லக்கேளாய்

---

தத்தை - கிளி. கிளி போலப் பேசும் பெண்களுக்காகி வந்தது.
கந்த களபம் - நறுமணம்.

பொங்கர வணிந்த மாயன் போற்றவே அழைத்தா
ரென்று என்
தங்கையரிடத்திலே சொல்லிச் சதிருடன் அழைத்து
வாராய்

**வசனம்:**

அகோ வாரும்பிள்ளாய் கட்டிக்காரா என் தங்கை யாகிய சயனந்தரியை அழைத்து வாராய் பிள்ளாய் கட்டியக் காரா.

## கட்டியக்காரன் விருத்தம்: 52

வம்பு செய்த அரசர் தம்மை வாக்கினால் அறுத்த பின்
செந்தனல் பிறந்த தாயே சிறியேன் நான் உரைக்கக்
கேளும்
அன்பருக் கன்பனான அவனியை அளந்த மாயன்
எம்பெருமானும் உன்னை ஏகியே வரவும் சொன்னார்.

**வசனம்:**

அகோ சரணம் சரணம் அம்மா தாயே! கிருஷ்ண மூர்த்தியானவர் ஆசார மணி முகப்பிலே எழுந்தருளி இருக்கிறார் என்று தங்களை அதிசீக்கிரம் அழைத்து வரச்சொன்னாரம்மா தாயே!

## திரௌபதி சரணத் தரு - 31

ஆயனே அரி சரஸீருஹ சிகாமணி நின் திருத்தாள்
சரணமைய்யா உந்தன் திருத்தாள் சரணமைய்யா
உலகத்தினில் எவ்வுயிர்க்கும் எள்ளில் எண்ணெய் போல்
உருக் கொண்டவனே!

---

சதிர் - அழகு. ஸரஸீருஹம் - தாமரை மலர்.

பார்புகழ் கண்ணனே கார்நிற வண்ணனே பக்தற்கு
முக்தி அளித்திடும் கர்த்தனே! ஆயனே அச்சுதனே
சரணம்
ஐவர்க்கு மைத்துனனே சரணம்
உச்சித மாகிய பச்சை மேனியனே நச்சரவினில் வாழும்
மச்சாவதாரனே
(ஆயனே அரி......)
தந்தியைக் காத்தவனே எந்தன் மானம் தன்னைக்
காத்தவனே
விந்தையாக செந்திருவை மார்பினில் அணிந்தவனே
பாரளந்தவனே சுவாமி
(ஆயனே அரி......)
ஆழிதனில் துயின்ற திருமால் எனும் மாயவனே
வேள் மதனை
எரித்தவர்க்கு ஆபத்து வேளையில் வாகனமானவனே
சுவாமி
(ஆயனே அரி......)

## விருத்தம் - 53

அரிகரி ஐவர் பங்கில் அமர்ந்தவனே அச்சுதனே போற்றி
பெருகின கடலிலே தான் பிள்ளையாய்ப் பிறந்தவனே
போற்றி
உறுதியாய் என்னையிப் போது அழைத்த சேதி
கருமுகில் வண்ண நாதா காரணா உரை செய்குவாயே!

### வசனம்:

அகோ வாருங்களையா சுவாமி! அடியேனை அழைப்பி வைத்த காரியம் இன்னதென்று அருள் செய்ய வேணுமையா சுவாமி!

---

தந்தி - யானை

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம்: 54

தங்கையே சொல்லக் கேளாய் சதிருடன் உன்னையிப்போ
பொங்க மாய் அழைத்த சேதி புகலுவேன் நன்றாய்க் கேளும்
பங்கமாய் சபையோர் முன்னே பாவி துயில் களைந்த போது
வங்கையாய்ச் சொன்ன வாக்கிற்கு மறுமொழி கூறுவாயே

### வசனம்:

அகோ வாருமம்மா என் தங்கையான சயனந்தரியே! அஸ்தினாபுரத்திலே துரியோதனன் சபையிலேஉன்னைக் கொண்டு வந்து மானபங்கம் பண்ணுகிற போது தான் மனம் கலங்கி கடவுளை நோக்கி முறையிட்டீரே! அந்த சபதம் தீர பழையபடி பாண்டவர் செயம் பெற வேண்டும் அதற்கு நீ என்ன சொல்கிறாய் என் தங்கையே!

## அம்மன் விருத்தம்: 55

ஆதியில் மானபங்கம் காத்த அண்ணாவே சொல்லக் கேளும்
கோதிலா பஞ்ச பாண்டவர்கள் குணமுடன் உரைத்த வார்த்தை நீதிகள் இனி வனம் செல்லலாமோ
சோதி விளங்கும் ரூபா துன்பங்கள் அணுகாது செய்வீர்!

### வசனம்:

அகோ சரணம் சரணமைய்யா சுவாமி பழையபடி வனம் செல்லல் தகாது உங்கள் மனம் போலவே நடத்தி மோட்ச பதவிக்கு அருள் செய்ய வேணுமையா சுவாமி!

---

வங்கை - வன்மை, புங்கமாய் என சுவடியில் உள்ளது.

## கிருஷ்ணர் விருத்தம்: 56

சொன்ன சொல் நிசமும் தானோ தோகையர்க்
கரசியே கேளாய்
நீ நன்றாய் யோசனைகள் செய்து நவிலுவாய்
புறங் கூறாதே!
மன்னவர் சபையில் சொன்ன வாதுகள் முடியவேதான்
அன்னையே நீரும் இப்போ அறிவிப்பாய் க்ஷணத்தில்
தானே!

### வசனம்:

அகோ வாருமம்மா என் தங்கையாகிய சயனந் தரியே! போர்க்களத்திற்கு முஸ்தீபு செய்யச் சொன்னீர் களே, பின்னால் என்னால் ஆகாது என்று சொல்லுவது போல் தோன்றுகிறது இதற்கு சம்மதியானால் சபையோர் அறிய கைபோட்டுத்தாருமம்மா என் தங்கையே.

## அம்மன் விருத்தம்: 57

சொன்ன சொல் பிசகே என் அண்ணா துயரங்
கொள்ளவேண்டாம்
முன்னமே சொன்ன வார்த்தை முடிவினில் காக்குமல்லால்
என்னமோ சொன்னே னென்று எளிதாக எண்ண
வேண்டாம்
அண்ணலே உமக்கு அறைந்திட்டேன் உறுதியாக,

### வசனம்:-

வாருங்கள் என் அண்ணாவே! ஏதோ என்பேரில் கோபப்பட்டு சந்தேகப்படுகிறீர். நான் சொன்ன வார்த் தைக்கு வேறுபட்டால் சூரியன் சந்திரன் திசைமாறி

---

கைபோட்டுத் தருதல் - கை மேல் அடித்து சத்தியம் செய்து தருதல்.

வேறுதிசை போனாலும் என் வார்த்தை மாறாதாக்கும்
இந்தபடிக்கு சபையோர் அறிய கைபோட்டுத் தந்தேன்
என் அண்ணாவே!

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம் 58

திங்களின் சோதியான தேவி பாஞ்சாலி கேளாய்
பெண்களுக் கரியதான கூந்தல் விரித்தது முடிக்கத்தானே
கைங்கையருடனே கூடி கனகமுடன் நடனம் செய்த
மங்கை காளியர்க்கு உந்தன் மைந்தனை பலி
வைப்பாயே

### வசனம் :

அகோ வாருமம்மா என் தங்கையாகிய சயனந்தரியே முன்னாலே அஸ்தினா புரத்திலே துரியோதனன் ராஜ சபையிலே உன்னைக் கொண்டுவந்து அவமான தோஷம் பண்ணி வைத்தானல்லவா, அப்போது நீ அளகாபாரம் விரித்து, கானகங்களில் பாண்டவர்களுடனே திரிந்து அளகாபாரம் முடிக்கிறதற்காக உன் சுதனாகிய நல்லரவானை பத்திரகாளிக்கு பலி கொடுத்தால் உன் பாண்டவர்கள் ஜெயமடைவார்களம்மா என் தங்கையாகிய சயனந்தரியே!

## அம்மன் விருத்தம் - 59

நஞ்சுண்டோன் மைத்துனரே அண்ணா நாரணா
சொல்லக் கேளீர்
பஞ்சின் அதிகமாக பறக்குதே என்சிந்தை கொய்திட
காளியர்க்கு
அஞ்சுதே என் செய்வேன் ஆயனே ரக்ஷிப்பாயே!

---

அவமான தோஷம் - மானபங்கம் செய்த குற்றம். அளகாபாரம் - கூந்தல்.

### வசனம்:

அகோ சரணம் சரணமைய்யா சுவாமி! பெற்ற மைந்தனைப் பலிகொடுக்க மனம் துணியுமோ எனது சிந்தை நொந்து உருகுதே அண்ணா! அரிகேசவா!

### ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம்: 60

அடியது வணங்கி நின்ற அழகு பாஞ்சாலி கேளாய்
படியது ஈசன் பரமனார் அருளேயல்லால்
வடிவது மிகுந்த திரௌபதியாளே வந்த விதி
தள்ளப்போமோ!

### அம்மன் தரு: 32

வந்தவிதி தள்ளப் போகாதென்று வசனம் உரைத்தீர்
அண்ணா
எந்தனைப் பாவி என்று ஏசுவாரே தேவர்.

### வசனம்:

அகோ வாருங்களண்ணா நந்தமுகுந்தா வசுதேவ குமாரா, வந்த விதியைத் தள்ளக் கூடாதென்று மெத் தவும் புகழ்ந்து சொல்ல வந்தீர்களே பெற்ற பாலகனைக் கொல்லமனந் துணியுமோ மானிடர்கள் நகைப்பார்கள் தேவர்களும் சிரிப்பார்களே! ஏ அண்ணா அரிகேசவா!

### ஸ்ரீ கிருஷ்ணர் தரு: 33

தேவர் என்றால் என்ன? திரிபுரம் எரித்தவர் தாவி
பிரமதேவன்
சிரைக் கிள்ள வில்லையோ.

### வசனம்

அகோ வாருமம்மா என் தங்கையான சயனந்தரியே! முன்னாலே தேவர்கள் நகைப்பார்கள் என்றும் மானிடர்

கள் சிரிப்பார்கள் என்றும் மெத்தவும் இகழ்ந்து சொல்ல வந்தீர்களே! பரமசிவன் கையினாலே பிரமதேவன் சிரசு கிள்ளப்படவில்லையா, அதுவும் பிரமதேவன் விதிவசமே வேறில்லை அந்த விதியை பிர்மதேவனால் கூட தள்ளக் கூடவில்லையே.

## அம்மன் தரு:

ஏ அண்ணா அரிகேசவா
சிரசென்ன கொஞ்சமோ சிவனை விட்டுதோ காண்.
பரதேசி ஐயமென்று பரக்க விட வில்லையோ!

## வசனம்:

அகோ வாருங்களண்ணா கபடநாடக சூத்திர அவதாரி! அந்த பிரமதேவன் சிரசைக் கிள்ளினாரென்று மெத்தவும் புகழ்ந்து சொல்ல வந்தீர்களே! அந்தப் பிரமதேவன் சிரசைக் கிள்ளின மாத்திரத்தில், அந்தப் பரமேஸ்வரனார்க்கு பிர்மஹத்தி பிடித்து அநேக காலம் தேச சஞ்சாரம் செய்து கையில் திருவோடெடுத்து பிச்சை யெடுத்து உண்கவில்லையா இன்னமும் பரதேசியைப் போலே பரக்கவில்லையா ஓ அண்ணா அரி கேசவா!

## ஸ்ரீ கிருஷ்ணர் தரு - 34

பறப்பதேது சும்மா பாவினைகள் செய்தாரே
சிறக்கவே காமனை சிவன் எரிக்க வில்லையா!

## வசனம்

அகோ வாருமம்மா என் தங்கையாகிய சயனந்தரியே! பரமேஸ்வரன் பிச்சையெடுத்து உண்டாரென்று மெத்த

---

பிர்ம ஹத்தி - கொலை செய்வதால் வரும்பாவம்
பாவினை - பாவனை நடிப்பு. (பாவனை)

வும் இகழ்ந்து சொல்ல வந்தாயே! பூலோகத்தில் அனேக பாவம் நீங்கும் பொருட்டு பரதேசியாய்ப் பாவனை செய்தாரே அல்லாமல் வேரில்லை, அப்படிக் கொத்தவர் புஷ்ப பாணம் தன் திரேகத்தில் பட்டமாத்திரத்திலே கண்ணைத் திறந்து பார்க்குமளவில் எதிரே நின்ற மன்மதன் எரிய வில்லையா, அதுவும் மன்மதனுடைய விதி வசமே, ஒழிய வேறில்லை. அந்த விதியை மன்மதனால் விலக்கக்கூட வில்லையே! என் தங்கையே!

## அம்மன் தரு - 35

எரித்தார் சிவன் அவரை இடும்பை செய்தானென்று
பொருந்துதோ உனக்கெந்தன் பிள்ளையைக் கொல்ல
அண்ணா

### வசனம்:

அகோ வாருங்களையா சுவாமி! அரிகேசவா மன்மதனை எரித்தா ரென்று மெத்தவும் புகழ்ந்து சொல்ல வந்தீர் மன்மதனானவன் பரமேஸ்வரனாருடைய தபசை அழிக்க மனத்தில் நினைத்த படியினாலே அந்த மன்தனை அப்படிக்கு எரித்தார் எந்தனுடைய பாலன் உந்தனுக்கு ஏதுகுற்றம்செய்தான்! உங்களுடைய மனம் பொருந்த என் பிள்ளையைக் கொல்லச் சொல்கிறீர்களே! ஏ அண்ணா அரிகேசவா!

## கிருஷ்ணர் தரு - 36

பொருந்துமோ வென்று மெத்த இகழ வந்தீரம்மா
அடித்தாளே என்னை இடைச்சி அறியாயோ விதியினால்

---

புஷ்பபாணம் - மலர்க்கணை. இடும்பை - துன்பம்

**வசனம்:**

வாருமம்மா எனது தங்கையாகிய சயனந்தரியே! என்னுடைய மனம் பொறுத்து உன் பிள்ளையைக் கொல்லச்சொன்னே னென்று மெத்தவும் இகழ்ச்சியாக சொல்ல வந்தாயே கோகுலத்திலே இடைச்சி பிடித்து என்னை உரலோடே கட்டிவைத்து அடிக்க வில்லையா, அதுவும் என்னுடைய விதிவசமேயல்லாமல் வேறில்லை அந்த அடியை என்னால் தள்ளக் கூடவில்லையே! என் தங்கையே!

## அம்மன் தரு - 37

விதியென்றும் மெத்தவே விவரங்கள் கூற வந்தீர்.
அறிவார் உரியில் வெண்ணெய் அள்ளி உண்டதினாலே!

**வசனம்:**

அகோ வாருங்களண்ணா அரிகேசவா! இடைச்சி பிடித்து உரியோடே கட்டி அடித்திடப் பட்டேன் என்று மொத்தவும் புகழ்ந்து சொல்ல வந்தீர்களே! அவர்கள் வீட்டில் இருக்கப்பட்ட உரியில், பால் தயிர் வெண்ணெய் இதுகளை திருடித் தின்றபடியினாலே அப்பேர்ப்பட்ட வாதை உமக்குக் கிடைத்தது இதுகளை எல்லாம் செகத்தில் உள்ளோர்கள் அறிவார்களே ஏ அண்ணா!

## ஸ்ரீ கிருஷ்ணர் தரு - 38

அள்ளி உண்டதை அறிவிக்க வந்தாயே
வள்ளல் கிருபையல்லால் மற்ற தொன்றுமில்லையம்மா!

---

வாதை - துன்பம் தண்டனை.

### வசனம்:

அகோ வாருமம்மா என் தங்கையாகிய சயனந்தரியே இடைச்சி வீட்டில் பால், தயிர், வெண்ணெய், திருடித் தின்றேன் என்று மெத்தவும் இகழ்ச்சியாக சொல்ல வந்தாயே! இதுவும் சகலலோக கர்த்தாவாகிய பரமேஸ் வரனாருடைய தீர்ப்பே ஒழியவேறில்லை, என்னாலே ஆவதென்ன என் தங்கையே!

### அம்மன் தரு - 39

வள்ளல் கிருஷ்ணா என்று சொல்ல வந்தீர் ராமா
பிள்ளையைக் கொல்லுவாரோ பெற்றதாயார் உலகினில்

### வசனம்:

அகோ வாருங்களையா சுவாமி! அரிகேசவா, சகல லோக கர்த்தா செய்த அமைப்பிற்கும், எந்த இராச் சியத்திலாவது, எந்த சாஸ்த்திரத்திலாவது, முன்னோர் கள் பழமொழியிலாவது, நூதனமான வார்த்தைகளிலே யாவது, பிள்ளையைக் கொன்று பட்டம் ஆண்டார்கள் என்று சொல்லக் கேள்விப்பட்டதுண்டா இப்படிக்கு சொல்கிறது தர்மமல்ல, சிசுவதை செய்ய மனந்துணியு மோ, எனது சிந்தை நொந்து உருகுதே அண்ணா அரிகேசவா!

### காலம்:

அருந்தனலில் யான் பிறந்து குந்திமக்கள் ஐவருக்கும்
அமைந்த காலம்.
ஆகாதான் பாவி துரியோதனனும் என்னை அவமானம்
செய்த காலம்.
வனந்தனிலே யான் திரிந்து லாடபுரம் மறை பொருளாய்
வந்ததும் காலம்.

தொடர்ந்தும் கீசகன்தான் வனந்தனிலே என்னைத்
தொடவும் தொடர்ந்த காலம்.
தொல்புவியோர் தானறிய லாடன் அவன் அனல்
வளர்த்துத் தள்ளு.
தள்ளுமென்று சொன்ன காலம்.
கல் மனத்தோன் கசடன் துரியோதனனுக்காகக்
குறத்தியாய்
போய் நின்று கலங் குங் காலம்.
காடுவனமே திரிந்து சமர்க் காலத்தில் வந்திரங்கக்
கண்ட காலம்.
கார்வண்ணன் தாரளந்தோன் என்சுதனைக் களப் பலியும்
வையு மென்று கருதுங் காலம்.

## சபை விருத்தம்: அரவான் 61

பூதலம் புகழும் ஐவர் புதல்வனாம் நல்லரவான்
காதில் கவசம் மின்ன கைதனில் வாள் பிடித்து
மாதவர் முனிவர் சித்தர் வானவர் பணிந்து போற்றும்
ஸ்ரீதர நந்தகோபன் திருவடி பணிய வந்தான்.

## சபை விருத்தம் (அரவான்) 62

நல்மொழி நல்லரவான் நாக கன்னிகையாள் பாலன்
சொல்மொழி தவறா மன்னன் துஷ்ட்டரை அடக்கும்
வீரன்
தொல்புவி அளந்த மாயன் துணையடி பணியவேதான்
செல்வனாம் நல்லரவான் சீருடன் வருகின்றானே!

## அரவான் வருகிற தரு - 40

கொந்தவிழ் தாரணி வேள்' நல்லரவான் கொலுவுக்கு
வந்தானே! ராசாதி ராசன் கொலுவுக்கு வந்தானே!

---

லாடன் - லாடபுரத்து மன்னன். அனல் - தீ. சமர்க் காலத்தில் - போர் செய்ய வேண்டிய நேரத்தில்

மந்திரிமார்கள் வெகு விந்தையாக மலர்க்கை கொடுக்க
மந்திரம் போற்புயம் முந்துறு மார்பும் மதிமுகமும் துலங்க
கொந்தவிழ்
சந்திர ஹாரமும் காந்தமும் தகதக வென்றிலங்க
வாரிசை போற்றும் மலர்க் கையில் மந்திரவாள்
தன்னை பிடித்து.
அனந்த தாரணி மன்னரெல்லோரையும் வெல்ல தனுவும்
அம்பும் எடுத்து
அண்டர் உலகத்து ரம்பையரும் எதிர் கண்டு பணிந்
திடவே இந்த
மண்டலந் தன்னில் அரசரெல்லோரும் வணங்கிடும்
மன்னரெனும்
கொந்தவிழ் தாரணிவேள் நல்லரவான் கொலுவுக்கு
வந்தானே!

## அரவான் விருத்தம் - 63

ஆரணப் பொருளே போற்றி அகில நாயகனே போற்றி!
பாரளந்தவனே போற்றி பாண்டவர் தூதா போற்றி!
வாரணம் அழைத்தபோது வந்து காத்தவனே போற்றி!
காரண வஸ்த்து வான கண்ணனே போற்றி.

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம்: 64

சரணம் பணிந்த சீலா என் தங்கை திரௌபதியாள்
பூரணச் சந்திரனைப்போல புகழ்ச்சியே வடிவு பெற்றாய்
அரனுடன் நடனம் செய்த அன்னை காளியர்க்குத்
தானும்
மரணமாம் போலே இன்று வைகுந்தப் பதவி சேர்வாய்.

---

கொந்தவிழ் தாரணி வேள் - மொட்டுக்கள் மலர்கின்ற மாலையை அணிந்த மன்மதனை ஒத்த. மந்திரம் - மலை.
வாரணம் - யானை.

## அரவான் விருத்தம்:

வாரிசை மலர் தன்னை மார்பிலணிந்த மாலே
தாரணி புகழும் ஐவர்தனை என்றும் காப்பாற்றும் இந்த
பாரத யுத்தம் பார்ப்பதற்காக எந்தன்
ஆருயிர் விழியில் நிற்க அனுக்கிரகம் செய்ய
வேணுமையா.

## வசனம்:

அகோ வாருங்களையா சுவாமீ தங்களுடைய திரு வாக்கிற்கு எதிர் வாக்குமுண்டோ! ஆதி முதலில் போர்க் களத்திற்கு நான் பலியாகப் போனேனேயானாலும் இந்தப் பாரத யுத்தத்தில் நடக்கிற சங்கதிகளை யெல்லாம் பார்க்க வேண்டும் என்று ஆசையாய் இருப்பதினாலே இந்தப்பதினெட்டு நாள் பாரத யுத்தம் முடிகிற வரையில் எனது பிராணன் இரு கண்ணிலும் உயிர் நிற்கும்படி கிருபை செய்ய வேணுமையா சுவாமி!

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம்: 65

ஐவர்க்கு சுதனாய் வந்த அய்யனே நல்லரவானே!
தையளாள் பற்றற் காளி தன் அருளினாலே இப்போ
பையவே ஐவர் செய்யும் பாரத யுத்தம் பார்க்க
உய்யவே உனது கண்ணில் உயிர் நிற்கிவரமும் தந்தோம்

## வசனம்:

அகோ வாரும்பிள்ளாய் நல்லரவானே உன் மனதின் படியே பதினெட்டு நாள் பாரத யுத்தம் முடிகிற வரையிலும் உனது பிராணன் இருகண்களிலும் உயிர் நிற்கும் படியாக கிருபை செய்தோம் உன் தாயார் தகப்பன்மார்களுக்கு சரணம் செய்து கொண்டு சீக்கிரம் நடவும் பிள்ளாய் நல்லர வானே!

---

வாரிசை - நார்களினால் (நூலிழை) கட்டப்பெற்ற
பிராணன் - உயிர்.

## அரவான் விருத்தம்: 66

என்னுடைய தாயே வாரீர் இன்பமாய் எனது தந்தை
பொன்னுடன் பணிகள் பூண்டு புகழ்பெற வளர்த்தாரவர்
தன்னுடைய பதமே போற்றி சரணம் பணிந்து கொண்டு
உன்னுடைய பாலன் தன்னை உகந்துமே அனுப்புமம்மா

### வசனம்:

அகோ சரணம் சரணம்மமா என் தாயே என் தகப்பன் மார்கள் ஆடை ஆபரணங்களினாலே அலங்காரம் செய்து அன்போடு அருமையாக வளர்த்தார்களல்லவா, அவர்களின் பாத தரிசனம் செய்து வருகிறேனம்மா என் தாயே!

## அம்மன் விருத்தம்: 67

பாலனே நல்லரவானே பாங்குடன் சொல்லக் கேளாய்
கோலமாய் தந்தைமுன்னே கொப்பெனச் சென்று நீ தான்
சீலமாய் ஐவர் பாதம் சீக்கிரம் பணிந்து கொண்டு
மாலவன் தனை வணங்கி நீயும் வரமது பெற்றுவடா

### வசனம் :

அடா வாடா என் அருமையாகிய நல்லரவானே! உன் தகப்பன் மார்களுக்கு சரணம் செய்துகொண்டு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பாதம் வணங்கி வரம் பெற்றுப் போய் வாடா மகனே!

## அரவான் சரணத் தரு : 41

சரணம் பணிய வாரான் நல்லரவான்
சரணம் பணிய வாரான்

---

கொப்பென - விரைவாக.

தந்தை தாயார் முன்பாக தருணம் இதுவென்று
தனஞ்செயன் பாலகன்
(சரணம்......)

தந்தை பாத கமலம் சிந்தையில் மிக எண்ணி
அந்தமுடன் பாலன் விந்தையாகவே நடந்து
(சரணம்......)

நாக கன்னிகை பெற்ற நலமுள்ள பாலகன்
தாக மாய் ஐவர் பாதம் தான் வணங்கவே
(சரணம்......)

எள்ளுக்குள் எண்ணெய் போலே எங்கும் நிறைந்த
வள்ளல் கிருபை தன்னை மனதில் மிகவும் எண்ணி
(சரணம்......)

## அரவான் விருத்தம் : 68

பொறுமையும் அதிகமுள்ள புண்ணியா எந்தன் சுவாமி
அருமையாய் வளர்த்தீர் என்னை ஆயனார் கபடம்
செய்தார்
திறமையாய் காளியர்க்கு நிச்சயமாகவேதான்
ஒருமையாக என்னையிப் போ உவந்துமே
அனுப்புமையா:

## வசனம்:

அஹோ சரணம் சரணமையா சுவாமி! பொறுமையும் அதிகமுள்ள மகானுபாவா, என்னை இத்தனை நாளும் செல்லமாக வளர்த்தீர்கள், இப்பொழுது ஏது காரணத் தினாலோ ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி காளிக்குப்பலியாகப் போகும்படி நியமித்தார் மனத்திலே வியாகூலப் படாமல் என்னை அனுப்புங்களையா சுவாமி!

---

பாத கமலம் - பாதமாகிய தாமரை. தாமரை மலர் போன்ற பாதங்கள். ஒருமையாய் - ஒரே மனத்துடன்.
வியாகூலம் - துன்பம்.

## அம்மன் விருத்தம்: 69

அரிகரி எனதுபாலா அமைப்பிதோ அறியேன் நானும்
துரிதமாய் காளியர்க்கு சுதனான் இன்றே நேர்ந்தான்
கரியமால் நினைத்த காரியம் கடுகவே முடித்தார்இப்போ
சிறியதோர் பாலா உந்தன் திருமுடி என்று காண்பேன்

## தருமர் தரு: 42

எப்படி நான் பூமி தன்னில் இருப்பேனோ அடா மகனே
முற்பிறப்பில் செய்தபாவம் மூண்டுதோடா மகனே
மைந்தனே உன்னையிழந்து நாங்கள் மண்ணாளவும்
ஆச்சுதோ
உந்தனைப் பலிகொடுக்க வென்று உமைபாகனார்
செயலோதான்
மாதர்கள் எல்லாம் புகழ் மைந்தனே உனையிழந்து
ஏதுநான் உயிர் தரிப்பேன் என் மகனே சுதனே.
நன்னகரம் ஆளுவாய் என்று நாங்கள் ஐவர் இருந்தோம்
மன்னன் துரியோதனனால் மாளவும் நாளாச்சே
(எப்படி நான்...)
என்னவென்று மனம்துணிந்து ஏகுவாய் என்பேன்
என்மகனே கண்ணே உன்னைப்பிரிய
சிவன் கற்பனையோ அறியேன்
அரனார் திருவருளோ இது ஆயன் வஞ்சனையோ
அய்யோ என்ன செய்வேன் யானும் அரும்பாவி
யானேன்
முன் செய்த வினையோ அய்யோ மூவர் கற்பனையோ
வஞ்சியர் காளிக்கு உன்னை வதைக்கவும் ஆனேனே!
பொன்மணி மகுடம் சூட்டி பூமி ஆளாமல் கண்மணியே
தில்லை வாழும் காளிக்கே ஈந்தேன்
மங்கை குழல் முடிக்க எந்தன் மைந்தன் உயிர்துடிக்க
அந்தமுடன் ஈசன் செயல் யானும் அறியேனே!

---

கடுக - விரைவாக ஏகுவாய் - போவாய், செல்வாய்.

## தருமர் விருத்தம் : 70

தம்பியரிடத்தில் சென்று சதிருடன் வணங்கிப் போற்றி
எம்பிரான் தன்னை உந்தன் இருதயம் தன்னில்
இருக்கும்
அம்பிகை கபாலி சூலி அரனுடன் ஆடியவர்க்கு
வம்பு செய்யாமல் இனியும் வணங்கி நீ போய் வாடா:

### வசனம்

அடா வாடா எந்தன் அருமையாகிய பாலகா உன்னைக் காளிக்குப் பலி கொடுக்கவோ ஈன்றேன் கபட நாடகர் பிடித்த காரியம் மூண்டதோ. மகனே தம்பி மார்களுக்கு சரணம் செய்துகொண்டு போய்வாடா மகனே!

### அறவான் வசனம்:

அந்தப்படியே மகா பாக்கியந்தானையா சுவாமி.

## அரவான் விருத்தம்: 71

மாயனார் கிருபைதன்னை மனோ பூசை செய்யும் சுவாமி.
தூயதோர் எந்தன் மாமன் சூதாக காளியர்க்கு
நேயமாய் வகுத்தாரய்யா நிச்சயம் அனுப்ப வேணும்
தாயகமான அருளே தந்தையே சரண மையா

### வசனம்:

அகோ வாருங்களையா சுவாமி என் மாமன் காளியர்க்குப் பலியாகப் போகும்படி நியமித்தார் அதுவும் நான் செய்த பூஜா பலன் தானய்யா மனத்திலே வியாகூலப் படாமல் என்னை அனுப்புங்களையா சுவாமி.

---

சதிர் - அழகு.

## பீமன் விருத்தம்: 72

கொஞ்சிடும் மைந்தன் தன்னைக் கொய்திடக் காளியர்க்கு
வஞ்சகமாய் ஆயனும் உன் மனது வேறாய்ச் செய்தான்
சேயே என் செய்வேன் மகனே உன்னை இழந்துமே
புவியையாள முன்
செய்த வினையே மூண்டதுவோ என் செய்வேன்.

## பீமன் தரு: 43

கமலத் திருமுகத்தை மகனே யிந்த காளியர்க்கோ
ஒப்படைத்தேன் மகனே!
துரோகி துரியோதனனால் மகனே மனம் துடிக்கத்
துணிக்கலானேன் மகனே!
கைதனில் உன்னை வளர்த்து மகனே தில்லை
காளியர்க்குமை ஒப்படைத்தேன் மகனே!
உனக்கே வையகத்தார் போலே யல்லோ மகனே!
நீடுவாழ்வாய் நீதானென்று இருந்தேன் மகனே
ஐவருடைய பேரும் சொல்லி மகனே நன்றாய்
அரசாள்வாய் என்று இருந்தேன் மகனே:
பெற்றாளே நாக கன்னிகை பெற்ற மகனே நாங்கள்
பேருடன் உனை வளர்த்தோம் மகனே.
விதியோ விதிப்படியோ மகனே!
பிர்மதேவன் கற்பனையோ மகனே!

## வசனம்:

அடாவாடா என் அருமையாகிய பாலகா! உன்னைப் பத்திர காளிக்குப் பலியாக போகும்படி பிர்மதேவன் எழுதினானோ. யான் அறிகிலேன். தம்பிமார்களுக்குச் சரணம் சொல்லிக்கொண்டு போய்வாடா மகனே!

---

பிரபலமாக - புகழ் பெறும்படி.

## அரவான் விருத்தம்: 73

பிரபலமாக என்னைப் பெற்ற தாய் தந்தையர் எந்தன்
சுவாமி
வரமது அளிக்கும் மாயன் மங்கை காளியர்க்கு என்னை
சிரமது துணிக்கச் சொன்னார் சிந்தையில் கலக்கம்
கொள்ளாமல்
திறமுடன் என்னை அனுப்பும் திருவடி சரணமையா:

### வசனம்:

அகோ வாருங்களையா சுவாமி! பிரபலமாக என்னைப் பெற்று வளர்த்தீர்களே இப்போது எனது மாமன் காளிக்குப் பலியாக நியமித்தார் சீக்கிரம் அனுப்புங்களையா சுவாமி!

## சபை விருத்தம்: (அம்மன்) 74

சொன்னதோர் சேதி கேட்டு துக்கமும் மனங்
கொள்ளாமல்
கண்களில் நீர் பெருகிஓட கருத்துள்ளே மிக மனம்
நொந்து
என்னமாய் மகனே உன்னை ஈவேன் காளியர்க்கு என்று
கண்ணே என் பாலா வென்று கழறியே புலம்புவாளே!

## அர்ச்சுணன் தரு: 44

என்ன செய்யப் போறேன் இந்தவிதி உனக்கு மகனே!
இப்போ
என்னென்று சொல்லினான் ஏகுவாயடா என் மகனே!
விண்ணாளும் பெருஞ்செல்வம் வெறுத்து நீ போகி
றாயோ மகனே நாங்கள்
பண்ணாத பாவங்கள் என்னென்ன பண்ணினோமோ
மகனே

அந்நாளில் உன் தலையில் அமைத்த விதியிதுவோ
மகனே
முன்னாள் விதிப்படி மூண்டதுவோ மகனே என்
செய்வேன்.
கண்ணினை யொத்த என் கண்மணியே அடாமகனே
இப்போ
பெண்ணான காளிக்கு மன்னா நீ போறாயோ மகனே
பாலனே உன்னைக் கொன்று பட்டமும் ஆளவாச்சுதே
இப்போ
ஆலகாலத்தை யுண்ட அரனார் செயலிதுவோ மகனே!
செல்லமாய் உன்னோடு கொஞ்சாமல் பாவியானேன்
மகனே! பிள்ளையைக்
கொல்லும் பாவியென்று சொல்லும் வசைக்குமானேன்
மகனே.
பாலனில்லாமல் வெகுநாளாய் தவமிருந்தேன் மகனே.
இப்போ
பாரில் உந்தனைப் போல் யாரைக் காண்பேனடா
மகனே.
விதிதனை ஓர் நாளும் வெல்லப் போகாதேடா மகனே.
அந்த சதுர் முகன் செய்த கற்பனைக் கென்செய்வேனடா

## சபை விருத்தம் அர்ச்சுனன்

மன்னவன் மகனை பார்த்து மனங்கொள்ளமாமல்
கிலேசத் தோடே
புண்ணிலே கோலையிட்டாற் போலே பொங்கி வர
வண்ணமாம் பணிகளெல்லாம் வகையுடன் அறுந்து வீழ
கண்ணே என் பாலனே என்று காண்டீபன் புலம்பலானான்

**வசனம்:**

அடா மகனே உந்தனைக் காளியற்குப் பலி கொடுக்க மனம் சஞ்சலப் படுதடா மகனே!

---

சதுர்முகன் - பிர்மதேவன். கிலேசம் - தயக்கம்.

## அரவான் சபை விருத்தம் - 76

சஞ்சலம் வேண்டாமையா சதிருடன் எனை இழந்து
என் செய்ய போறோ மென்று ஏங்கியே இருக்க
வேண்டாம் உங்கள்
நெஞ்சினில் துயரம் தன்னை நீக்குவீரய்யா வென்று
மைந்தனும் தந்தை முன்னே மனம்தேற உரை
செய்தானே!

### வசனம்:

அகோ வாருங்களையா சுவாமி! பிரமதேவன் எழுதிய எழுத்துக்கு என்ன செயலாகும். மனத்தைத் தேற்றிக் கொண்டு என்னை அனுப்புங்ளையா சுவாமி!

## சபை விருத்தம் - 77

தேறியே இருப்பா யென்று சிறுவனும் உரைத்திடத்
துக்கம
ஆறிய தில்லை என்று அடிக்கடி ஏங்கி ஏங்கி
கூறிய நெஞ்சில் துக்கம் கொள்ளாமல் ஆங்காரத்தால்
மாரியே மகனே போய்வா வென்றுரைத்தார் அரசன்.

## அரவான் விருத்தம் : 78

புவிதனில் என்னை ஈன்ற புண்ணியா எந்தன் மீதில்
அதிகமாய்க் கவலை கொண்டு அடிக்கடி ஏங்க
வேண்டாம்
கவிபுகழ்க் கரியமாலின் கருணையின் படியே நீதான்
மதிதனைச் செலுத்தி என்னை வைகுண்ட பதவி
சேர்ப்பாயே!

### வசனம்:

அகோ வாருங்களையா அறம் முப்பத்திரெண்டிலும் நீதிநெறி தவறாத தந்தையே! ஏனையா என்னைப்

பற்றிய கவலைஅடைகிறீர். நமக்கு வரும் துன்பமாகிய பாவக்கடலை நீந்தி இன்பமாகிய மோட்சத்தைத் தரும் படியான கடவுளுடைய எண்ணப்படி மனம்தேறி தெளிந்து சாயுச்ச பதவிக்கு போகும்படிக்கு கிருபை செய்வார். தாங்கள் விசனப்படாமல் தாங்கள் உத்தரவு கொடுத்து அனுப்ப வேணுமையா சுவாமி!

## அர்ச்சுனன் தரு : 45

அர்ச்;- மகனே உனக்கிந்த மதிவந்த காரணம் சொல்லு. நீர்
சொல்லும் செக மாய்கை அற்பமென்ற நீதி தெரிந்த வகை சொல்லு.

அர:- சொல்ல வேணு மென்ற வல்லமை தெரிந்த என் கோவே
துரியா துரிய நீதம் சோதியால் தோன்றி நான் கேட்டேன்
அதை விண்டேன், கண்டு கொள்ளும் வகை
புண்டரீகக் கமலக் கண்ணன் உந்தன் கருத்தைத் திருத்தி
வேறாய் உருக்கமதாகச் செய்தாரே!
உருக்கமதாகவே சிறக்கத் தவங்கள் செய்தவர்க்கு இந்த உண்மையை வெளிப்படுத்தி நன்மை பெருகச் செய்வாரே

### வசனம்:

அடாவாடா என் அருமையாகிய பாலகா! உன்னுடைய விதிவசம் அப்படி இருக்கிற தாக்கும் யான் அறிகிலேன் சீக்கிரம் தம்பிமார்களுக்கு சரணம் செய்து கொண்டு போய் வாடா மகனே!

---

விசனம் - கவலை.

### அரவான் விருத்தம்: 79

மண்டலத் தோற்கெல்லாம் மன்னவா தந்தையே
வண்டணி நிறைத்தை யுள்ள மாயனார் கபடத் தாலே.
துண்டமாய் என் சிரசைத் துணித்திட வகுத்தாரிப்போ.
தொண்டன் நானுந்தன் பாதம் இணையடி சரணமையா.

### வசனம்:

அகோ வாருங்களையா சுவாமி! என்னுடைமாமன் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பாரத யுத்தம் முடிப்பதற்காகக் காளிதேவிக்கு முதல் பலியாகப்போக என்னை வகுப்பித்தார். தாங்கள் உத்தரவு கொடுத்து அனுப்புங்களையா சுவாமி என் தந்தையே!

### நகுலன் தரு: 46

என்ன வென்றுரைப்பேன் நல்லரவானே இந்தவிதி
வசத்தை இந்த
மண்டலத்தோர்க்கெல்லாம் அளவோர்க்கும் வசைக்கிட
மானேனே!
புத்திரன் வேண்டுமென்று தேவர்களை நித்தியம்
பூசைசெய்தோம் அந்த
சுத்த வீரனாம் தனஞ்செயன் பெற்றதோர் பாலகனே.
முன்னுள்ளோர் தீவினைகள் அய்யோ மூண்டதுவோ
என்ன செய்வேன் அந்த
அன்னையார் காளிக்கென்று ஆயனார் அபூதி
என்றுரைத்தார்.
சோதி முடியணியும் சிறந்த உன்னை துணிக்கவும்
ஆனேன்
ஆவி நடுங்குதய்யோ உலகில் அரும்பாவி என்பாரே

---

வண்டணி நிறம் - வண்டினது கருமை நிறம்.
அபூதி - ஆகூதி. யாகத்தில் இடும் பொருள்

வாலை வயதிலே தான் மகனே வாரிக் கொடுத்
திடுவேனோ இப்போ.
மாளவே போறாயோ மணிமுத்தம் தாராயோ
சொல் மொழி தவறாத பாலகனே சொர்ண
சௌந்தர்யனே-அந்த
மன்னன் துரியோ தனனால் உன்னை வதைக்கவு
மானே னடா
உன்னைக் கொன்று பட்டமாள ஆயனார் குறித்தாரே
என்ன செய்வேன் எனக்கு
எண்ணாததெல்லாம் எண்ணுதடா இப்போ எண்ணம்
குண்ணுதடா
மைந்தனே நல்லரவானே சிகாமணி ஆசையுள்ள மகனே
இப்போ
ஆயனார் தன்னிடத்தில் வரம்பெற்று போய் வாடா
கண்மணியே!

## நகுலன் விருத்தம் : 80

சரணமென்றடியில் வீழ்ந்த சற்குண மைந்தா கேளும்
சிறந்தன்னைக் காளியர்க்கீய செங்கண்மால் அருளிச்
செய்தார்
அரன் செயல் மூண்ட திப்போ அமைப்பிதற் கென்ன
செய்வேன்
வரம் செறி தம்பி தன்னை வணங்கியே போய்வாடா

### வசனம்:

அடாவடா என் அருமையாகிய பாலகா! பிர்ம தேவன் எழுதிய எழுத்தை எவராலும் வெல்லப்போமோ தம்பியர்க்கு சரணம் செய்து கொண்டு போய் வாடா மகனே!

---

வாலை வயது-இளம் வயது சொர்ண-சுவர்ண தங்கம் போன்ற.

## அரவான் விருத்தம் - 81

தேவ சாஸ்த்திரம் விளங்கும் வித்தகரே எந்தன் சுவாமி
நாதனார் புவியளந்த நாரணன் வஞ்சகத்தால்
பாதகத் காளிக் சென்னைப் பதறியே பலிபோ வென்றார்
போதனே என்னையனுப்பும் புண்ணியா சரணமையா.

### வசனம்

அகோ வாருங்களையா சுவாமி! என் மாமன் காளிகாதேவிக்குப் பலியாகப் போகும்படி நியமித்தார். தாங்கள் மனத்தில் வேறொன்றும் நினைக்காமல் உத்திரவு கொடுத்து அனுப்புங்களையா சுவாமி!

## சகாதேவன் புலம்பல் தரு - 47

என்ன செய்யப் போறேன் நல்லரவானே இந்த விதி
வசத்தை
அன்னாளில் உன்தலையில் பிர்மதேவன் அமைப்பிதுவோ
மகனே!
நீதியுள்ள மகனே உந்தனுக்கு சோதனைக் காலமோ
இந்த
ஆதிமூலமான திருமால் சோதனைத்தானிதுவோ!
மைந்தனே மகனே எந்தனுடைய சிந்தை நொந்துருகுதையா
சுந்தர கந்தன் தனை ஈன்ற ஈசர் திருவருள் காரணமோ
மகனே
ஆர் செய்த தீவினையோ ஐவருடைய பேர் சொல்லி
ஆளாமல் அந்த
மேருவின் கிரியில் வாழும் ஈசர் பாதம் வேண்டி நீ
போய்வாடா

---

வேத சாஸ்திரம் விளங்கும் வித்தகர் என்றது சகாதேவனைக் குறிக்கின்றது.

## சாகதேவன் விருத்தம்: 82

அருமறைப் பொருளே எங்கள் அய்யனே நல்லரவா
உருகுதே எனது சிந்தை உள்ளமும் பதறு தையோ
கருதியே உனையிழக்க கற்பித்தார் சிவனாரும் தான்
பொருதியே திருமால்பாதம் போற்றி நீ போய்வாடா.

### வசனம்:

அடாவாடா மகனே! பிரமதேவன் எழுதிய எழுத்தை எவராலும் வெல்லப் போமோ ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் பாதத்தை மனத்திலே தியானித்துக் காளிக்குப் பலியாகப் போய்வாடா மகனே.

## அரவான் விருத்தம்: 83

ஆதினாள் அபயம் காத்த கிருபை யாலே
பாதி நாள் தனிலே எனக்கு பரமனார் செயலிதானோ
நீதியாய் தந்தை தாயார் நீங்களும் சம்மதித்து
ஆதிகாளியர்க்குப் பூசைகள் அன்புடன் செய்வீரம்மா

### வசனம்:

அகோ வாருமம்மா தாயே! இந்த வயதிலேயே ரணபத்திரக் காளிக்குப் பலியாகப் போவாயென்று பிரம தேவன் எழுதியிருக்க தாங்கள் விசனப் பட காரியம் இல்லை என்னை சம்மாரம் (சம்ஹாரம்) பண்ணுமம்மா தாயே!

## சபை விருத்தம் அம்மன்: 84

அழுதிடும் கண்ணீரெல்லாம் ஆறுபோலே ஓடவே தான்
செழுமணி முத்துமாலை சிதறவே அற்று வீழ
பழுதிலா மகனே உன்னைப்பார் தனில் பிர்மதேவன்
எழுதிய எழுத்து வன்மை இப்படி இருந்ததய்யோ!

என்னுடைய நெஞ்சம் தேற செப்பிய பேருமில்லை
திக்கினி வேறு முண்டோ ஒப்பில்லாதவனே உன்
உயிர்தனைப் பலி கொடுத்து எப்படி பூமிதனில் இருப்பே
னென் நுரைத்தாள்

## அம்மன் தரு - 48

மைந்தனே நல்லரவானே இவ்விதிக்கு நான் என்ன
வென்று செய்வேனடா அன்பு மகனே! உனை
யீன்ற குறை இதுவோ பாண்டவர் பாலகா பதைக்குதே
என்மனம்
(மைந்தனே......)
கெண்டையைப் பழிக்கும் விழி சுழன்று பிதுங்குதே பெற்ற
மைந்தன் தனைக் கொல்ல மனது வருகுமோ தான்
(மைந்தனே......)
இன்று உன்னைக் கொடுத்து என்று மனம் தணிவேன்
என்னுடன் சொல்லடா உன் சொல் ஒருவசனம்
(மைந்தனே......)
அன்று அரன் உனக்கு அளித்த வயது மாச்சோ
மூண்டுதோ உந்தன் விதி பூத்தம் தாடா மகனே!
(மைந்தனே......)

## பத்யம் (அம்மன்)

அச்சுதானந்தனே லெட்சுமி சமேதரா
அகிலாண்ட கோடி பிர்மாண்ட நாயகா மச்ச கூர்ம
அவதாரா
மலையைக் குடையாய்ப் பிடித்த மாதவா அரிகிருஷ்ணா
கோதண்டபாணி
பட்சமுடன் ஐவரையும் ரட்சிக்க வந்தவா பாலாழி
மாயவா நீல வண்ணா

---

திக்கு+இனி - திக்கினி - செல்லும் வழி. கெண்டை என்பது கெண்டை எனும் மீனுக்காகி வந்தது. பால் + ஆழி - பாலாழி - பாற்கடல்.

உச்சிதமாகவே உலகினை அளந்தவா உரக அணை
மேல் வாழும் நாராயணா
நிச்சயமதாகவே காளியர்க்கு என்சுதனை பலி கொடு
என்று நீர் உரைத்தீர்
அச்சுதனே இவ்வசனம் உலகமுள்ள அளவும் அடுக்குமோ
யார்க்கும் இது ஆயனாரே!

**அம்மன் தரு : 49**

ஆயனே நான் என்ன செய்குவேன் ஸ்ரீபத்மநாபா
ஆயனே நான் என்ன செய்குவேன்
ஆதியான வேதனாதா ஆலிலையின் மேல் துயின்றவா
ஸ்ரீ பத்மநாபா
பாவி நான் பெண்ணாய்ப் பிறந்து யிந்த
பாரதத் திற்குக் காரணமாகி
பாலகனைக் கொல்ல லாச்சுதே! ஸ்ரீபத்மநாபா
தேவியாய் நான் ஐவருக்கும் திருப்பூட்டி வந்த நாளாய்
தீவினைக்கு ஆளுமானேனே ஸ்ரீபத்மநாபா
ஆவிநடுங்கு தய்யோ அரும்பாவி என்றுலகில்
அனைவரும் சொல்ல லானேனே! ஸ்ரீபத்மநாபா
துரோகி துரியோதனனால் சுதனைத் துணிக்கலானேன்
தோஷத்திற்கு என்னசெய்வேன் ஸ்ரீபத்மநாபா
தாவி மகனைக் கொல்ல தயங்குதே கைகள் இரண்டும்
சச்சிதானந்த வேதனே ஸ்ரீபத்மநாபா

**ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம் : 85**

என்ன தான் செய்வேன் என்று இயம்பினீர் அம்மா
கேளும்
மன்னவர் சபையில் சொன்ன வாதுகளுக்காக உந்தன்
வண்ணமாம் பாலன் தன்னை வஞ்சியர் காளிக்கு ஈந்தால்
உன்னுடைய சபதம் வென்று உலகமே ஆளுவீரம்மா

---

உரகம் - பாம்பு. திருப்பூட்டி - திருமாங்கல்யம் சூடி - திருமணம் செய்து கொண்டு. வாது - வார்த்தை.

**வசனம்:**

அகோ வாருமம்மா என் தங்கையாகிய சயனந்தரியே முன்னாளில் ராஜசபையில் சபாபருவ மண்டபத்திலே உன்னைக் கொண்டுவந்து நிறுத்தி மானபங்கம் பண்ணுகிற போது நீ சென்ன சபதம் இப்போதைக்கு நிறைவேற வேண்டுமேயானால் உன் மைந்தனாகிய நல்லரவானை பத்திரகாளிக்கு பலியாகக் கொடுத்தாக வேணுமம்மா என் தங்கையே!

**அம்மன் தரு: 50**

கொஞ்சிடும் மதலை தன்னை அஞ்சிடாமல் எந்தனையும்
கொய்திடச் சொல்லுவ துமக்கு தர்ம மாகுமோ அண்ணா

**வசனம்:**

அகோ வாருங்களண்ணா, முன்னாளில் ராம அவதாரத்தில சிறிய தாயாராகிய கைகேசி சொல்லைத் தட்டாமல் பதினான்கு வருஷம் வனம் போன மகானுபாவா! யாவராலும் கொஞ்சப்படாநின்ற மதலையை கொஞ்சமும் மனத்தில் அன்பும் பிரியமும் இல்லாமல் ஒரே ஒட்டாரமாக எந்தன் மதலையைக் கொய்யச் சொல்லுகிறது தர்ம்மாகுமோ அண்ணா! அரிகேசா!

**ஸ்ரீ கிருஷ்ணர் தரு: 51**

தர்ம மாகுமோ வென்றுரைத்தீர் தங்கை சயனந்தரியே உன்
சுதனைத் துணித்தக்கால் உலகாள்வீர் புவியெல்லாம்

**வசனம்:**

அகோ வாருமம்மா என் தங்கையாகிய மாதுசிரோன்மணியே! தர்மமோ வென்று மெத்தவும் நயந்து சொல்ல

ஒட்டாரம் - பிடிவாதம்.

வந்தாயே உன்னுடைய பாலகனாகிய நல்லரவானை பத்ரகாளிக்குப் பலி கொடுத்தால் இந்த சீமை பூமி நாடு நகரங்களும் உங்களுக்குக் கிடைக்குமம்மா என் தங்கையே!

## அம்மன் தரு : 52

புவியாள் வதற்காகப் பிள்ளையைக் கொல் வாரோ
அண்ணா!

ரவி குலம் விளங்க வந்தவரே நாரணரே! அண்ணா!

### வசனம்

அகோ வாருங்கள்ண்ணா கபட நாடக் சூஸ்திரதாரி புவி எல்லாம் ஆளுகிற நிமித்தம் பிள்ளையைக் கொல்லு வார்களோ! சூரியகுலம் விளங்கவந்த நாரணரே! அண்ணா.

## ஸ்ரீ கிருஷ்ணர் தரு அரிகேசவா : 53

நாரணரை ஏத்தி நொந்ததினால் பாரதம் முடியுமோதான்
நான் சொன்னபடி கேட்டால் நீ சொன்ன சொல்
வெல்லுவாய்:

### வசனம்

அகோ வாருமம்மா என்தங்கையாகிய சயன்ந்தரியே! நாரணரே! நாரணரே என்று எந்தநேரமும் முறையிட்டால் உலகத்தில் சொல்லப்பட்ட பாரதம் நிறைவேற வேணுமே. ஆனால் துரியோதனன் சபையிலே நீ சொன்ன சபதம் நிறைவேற வேணுமானால் நான் சொன்னபடிக்கு உன் பாலகனாகிய நல்லரவானை ரண பத்ர காளிக்குப் பலி மொடுமம்மா என் தங்கையே!

## அம்மன் தரு: 52

சபதம் தீருமென்றுரைத்தீர் தரணியோர் நகைத்திடாரோ
சரசகோபால கிருஷ்ண சுவாமி என்னாலே இல்லை.

### வசனம்:

அகோ வாருங்களண்ணா! ராம அவதாரத்திலே சீதாலட்சுமிக்காக இராவணனை சம்ஹாரம் செய்த மகானுபாவா! முன்னாளில் சொன்ன சபதத்திற்காகப் பிள்ளையைக் கொன்றால் பூலோகத்திலே இருக்கப்பட்டா நின்ற ஜனங்கள் எந்தக் காலத்திலும் ஒரே வசையாகச் சொல்லுவார்களே! அதற்கு நான் என்ன செய்வேன் அண்ணா அரிகேசவா!

## ஸ்ரீ கிருஷ்ணர் தரு: 52

மன்னன் துரியோதனன் முன் சொன்ன வார்த்தைக்
கென்னசெய்வாய்
மைந்தனை பலி கொடுத்தால் உந்தன் சபதம்
செல்லுவாய்.

### வசனம்:

அகோ வாரும்மா என் தங்கையாகிய சயனந்தரியே முன்னாளில் துரியோதனன் முன்பு சொன்ன சபதம் நிறைவேற வேண்டுமானால் உன் மைந்தனைப் பலி கொடுப்பாயம்மா என் தங்கையே!

## அம்மன் தரு: 52

அன்று துரியோதனன் முன் விண்ணுள்ளோர் அறியச்
சொன்னேன்
இன்று உன் பாதமலர் இணையடி சரணமைய்யா

### வசனம்:

அகோ வாருங்களண்ணா! பிரகலாதனுக்காக நரஸிம்ம அவதாரம் கொண்டு இரணியன் மார்பைப் பிளந்த மகானுபாவா! அன்றைய தினம் துரியோதனன் முன்பாக சொன்ன சபதம் நிசமே! அந்த சபதம் அண்டத்தில் இருக்கப்பட்ட தேவாதி தேவர்களுக்கும் தெரியும். என்றைக்கும் உங்கள் திருப் பொற்பாதமே சரணம் அண்ணா அரிகேசவா!

### ஸ்ரீ கிருஷ்ணர் தரு: 52

சரணமென்றடியில் வீழ்ந்த என் தங்கையே சொல்லக்
கேளாய்
அரனுடைய அமைப்பேயல்லால் அம்மா இதற் கென்ன
செய்வேன்

### வசனம்:

அகோ வாருமம்மா என் தங்கையாகிய மாது சிரோன்மணியே! சகலலோக கர்த்தாவாகிய பரமேஸ்வரனுடைய கற்பனைக்கும் பிர்மதேவருடைய அமைப்பிற்கும் நான் என்ன செய்யலாமம்மா என் தங்கையே!

### அம்மன் தரு: 52

அமைப்பிதற் கென்ன செய்வேன் என்றால் ஆதிமூல
வேத நாதர்
பதைத்து வருகுதிப்போ பாலகனைக் கொல்ல
அண்ணா!

---

மாது சிரோன்மணி - பெண்களில் உயர் இனமாகிய பத்மினி இனத்தவளே என்க.

**வசனம்:**

அகோ வாருங்களண்ணா அரிகேசவா! கரா வெனப் பட்ட முதலை கஜேந்திரன் எனப்பட்ட யானையை பிடித்துக் கொண்டு காளிங்க மடுவில் துன்பமடைந்து இருக்கையில் அநேக தெய்வங்களைத் ஸ்தோத்திரஞ் செய்து காக்காமல் போக, ஆதிமூலமே என்று கூப்பிட்ட மாத்திரத்தில் லெட்சுமி சமேதரனாக வந்து ரக்ஷித்தீரே! அப்படிக்கு என்னுடைய பாலகனையும் காக்காமல் துணிக்கச் சொல்லுவது அறமல்ல என் அண்ணா! என் நெஞ்சம் பதைக்குதே அண்ணா அரிகேசவா!

**ஸ்ரீ கிருஷ்ணர் தரு:**

பதைத்துப் வருகுது என்றீர் பாவிதுஷ்டத்துயூமன் உன்னை
நகைத்துப் பேசின பேரை ஜெயிக்க வேண்டாமோ அம்மா!

**வசனம்:**

அகோ வாருமம்மா என் தங்கையே! துரியோ தனனின் தம்பியாகிய துஷ்டத்துயூமன் முன்னே சொல்லிய சபதம் நிறைவேற வேணுமே! சத்துருவாதிகளை செயிக்க வேண்டாமோ அம்மா!

**அம்மன் தரு: 52**

நகைத்துப் பேசினவர்க்கும் செகத்திலுள்ளவர்க்கும்
சிரித்து முப்புறாதிகளை எரித்த ஈசர் துணை

**வசனம்:**

அகோ வாருங்க ளண்ணா! முன்னாளில் ஏழு சமுத்

திரங்களும் ஒரே பொங்காய் பொங்கி வருகிறபோது அதன் பேரில் மிதந்த மகானுபாவா! உலகத்தில் நகைத்துப்பேசினவர்களுக்கும் மானிடர்களுக்கும் செகத்தில் இருக்கப்பட்டவர்களுக்கும் தாம் பொதுவாய் இருக்கப்பட்ட, முப்புறாதிகளை எரித்த ஈசுவரன் இருக்கிறாரே அவர் கண்டித்துப் போவார் அண்ணா! அரிகேசவா!

## ஸ்ரீ கிருஷ்ணர் தரு: 52

முப்புறம் எரித்த ஈசர் கற்பனைக் கென்ன செய்வாயம்மா
அற்புதச் சுதனைக் காளிக்கு அன்புடன் அளித்திடம்மா!

## வசனம்:

அகோ வாருமம்மா என் தங்கையாகிய சயனந்தரியே! சகலலோக கர்த்தாவாகிய சாம்பசிவமூர்த்தி, உலகத்தில் நடக்கப்பட்ட காரியா காரியமும் அபகாரியமும் அவரவர்கள் நடத்தையையும் செய்கையையும் அறிந்துகண்டு இணைசெய்வார் உன்னுடைய பாலகனாகிய நல்லரவானை பத்ரகாளிக்குப் பலி கொடம்மா! எந்தன் தங்கையான சயனந்தரியே;

## அம்மன் விருத்தம்: 86

ஆதிநாள் விதிஇதோ அரனார் செயலிதோ அறியேன்
நான் இந்தவிதி ஆயனாரே!
நீதியாய்ப் புவிகளை நேசமாய் ஆளுகையில் நிந்தை
யாய்ப் பெரியோரை நிகழ்ந்தேனோ நான்
சோதி செந்தனலிலே தோகை நான் உதிக்கையில்
சுதனைத் துணிப்பேன் என்று சொன்னவாறோ
பாதிமதி புனலணியும் பரமனே என்ன செய்வேன்
பாவி யானேனே பாவை நானும்.
ஆவியும் நடுங்குதே ஆயனாரே அநியாய மானேனே
பாவையானும்

பாவி யென் வயிற்றில் பிறந்ததாலோ பாலகனே என்
மனது பதறுதடா.

## அம்மன் தரு: 53

அய்யனே என்ன செய்வேன் கண்மணியே நான்
ஆறுமற்ற பாவியானேன் கண்மணியே
மெய்யெல்லாம் நடுங்குதடா கண்மணியே மனம்
மெத்த மெலிவாகுதடா கண்மணியே!
தையலார் நகைக்க வடா கண்மணியே இவள்
பெற்றாள் என்ற சொல்லுக்குமாளானேன்
கண்மணியே
கை தனில் உனை வளர்த்துக் கண்மணியே இப்போ
காளியர்க்கு ஒப்படைத்தேன் கண்மணியே
ஐவருக்குக் கைகொடுத்துக் கண்மணியே இப்போ
அம்பலத்துக் காளுமானேன் கண்மணியே!
பஞ்சவர்க்குக் கை கொடுத்துக் கண்மணியே இப்போ
பாரதத்துக் காளுமானேன் கண்மணியே!

## அரவான் விருத்தம்: 87

என்தான் செய்வேனென்று ஏங்கி நீ அழலாமோ
கண்ணன் மால் செய்த சூது கபடத்துக் கென்ன
செய்வேன்
அன்னையே நீருமிப்போ அன்புடன் காளியர்க்கு
உன்னிதமாக என்னை உயிர் வதை செய்திடம்மா!

### வசனம்

வாருமம்மா என்னை ஈன்று அன்னங் கொடுத்து ஆடையளித்து அன்போடு அருமையாய் வளர்த்தெடுத்த

---

கைகொடுத்தல் - திருமணம் செய்துகொள்ளல். அம்பலம் - பொதுப் பேச்சு பொது இடம்.

ஏன் தாயே தாங்கள் இப்படி விசனப் படுவதற்கு நான் என்ன சொல்வேன் ஏக தத்துவ பராபரமாய் இருக்கப் படா நின்ற சிவசாம்ப மூர்த்தியினுடைய கற்பனைக்கும் பிர்மதேவருடைய அமைப்பிற்கும் அல்லது கபட நாடக சூத்திரதாரி செய்த செய்கை தானோ யான் அறிகிலேன்! நீங்கள் விசனப்பட வேண்டாம். முன்னாளில் தகப்பன் சொல்லைத் தட்டாமல் பரசுராமன் தன்னுடைய தாயைக் கொலை செய்யவில்லையா. இன்னமும் அருந்தவசில் மிகுந்த விசுவாமித்திரருடைய சொல்லைத்! தட்டாமல் ஸ்ரீ ராமர் தாடகையை சம்ஹாரம் செய்யவில்லையா அப்படிப் போலே உங்களுடைய இஷ்ட்ட தெய்வமாய் இருக்கப்படா நின்ற ஸ்ரீமன் நாராயண மூர்த்தியினுடைய சொல்லைத் தட்டாமல் ஒரே மனதாக எண்ணங்கொண்டு என்னுடைய சிரசை கொய்து போடுமம்மா தாயே!

**வசனம்:**

அடவாடோ மகனே! பழமொழியாகிய வார்த்தை எல்லாம் பேசி சிரசைக் கொய்யச் சொன்னால் நான் எப்படித் துணிப் பேனடா மகனே!

**அம்மன் விருத்தம் : 88**

சிரசையுங் கொய்யுமென்று சீக்கிரஞ் சொன்ன பாலா
அருமையாய் வளர்த்த தாயும் அறுப்பாரோ
மனந்துணிந்து
வரிசையாய் ஈன்ற தாயும் வதை செய்ய நீதி யுண்டோ
பெருமையாய் இந்த வார்த்தை புகழ்ந்து சொல்ல
வந்தாய்

**அம்மன் தரு : 54**

புகழ்ந்து சொல்ல வந்தாய் நல்லரவானே
புகழ்ந்து சொல்ல வந்தாய்

பொறுமையாக இவ்வார்த்தை அருமையும் பெருமையும்
ஆயனார் அறிவாரோ!
(புகழ்......)

**வசனம்:**

அட்வாடா மகனே நீ எந்தன் மனது தேறத்தக்கதாக எந்த வார்த்தை உரைத்தாலும் எந்தன் மனது தேறாதடா மகனே

**சபை விருத்தம்: 89**

தங்கை இப்படிச் சொல்லச் சதிருடன் எழுந்திருந்து
எங்கள் குற்றமில்லை ஈஸ்வரன் அமைப்பேயல்லாமல்
பங்கமாய் அமைத்திருக்க பிழைகள் சொல்ல வந்தாய்
மங்கை காளியர்க்கு உந்தன் மாமுடிதனைக் கொய்வாயே

**ஸ்ரீ கிருஷ்ணர் அம்மன் தர்க்கத்தரு:**

ஸ்ரீகிரு:- தங்கையே சயனந்தரியே சொல்லக்
கேளாய் அந்த
சதுர் முகனார் செய்த சூதுக் கென்ன செய்வேன்

அம்மன்: என்ன செய்வேன் என்றுரைத்தீர் மாதவனே-
உனக்கு
என் சுதன் மேல் எதிரியுண்டோ மாதவனே!

ஸ்ரீகிரு:- மாதவனே என்றுரைத்தால் தங்கயரே-அந்த
மகாதேவர் கற்பனைக்கு என்ன சொல்லுவேன்

அம்மன்: சொல்லுவேனோ வென்றுரைத்தீர் ராகவனே
உனக்கு
தோஷங்கள் ஏதுமுண்டோ ராகவனே!

---

*பொங்கமாய் - அழகாக.* *தோஷம் - குற்றம்.*

ஸ்ரீகிரு:- ராகவனே என்றுரைத்தால் தங்கையரே-அது
நம்மால் முடிந்த தல்ல தங்கையரே!

அம்மன்:- தங்கையரே என்றுரைத்தால் கேசவனே-மனம்
நயந்து ஒரு சேதி சொல்லும் ஆயனாரே!

ஸ்ரீகிரு:- ஆயனாரே என்றுரைத்தால் தங்கையே! பிர்மன்
அமைப்பை அழிக்கலாகுமோ தங்கையரே!

அம்மன்: அமைப்பை அழிக்கலாகும் மாதவனே முன்னாள்
அரன் கூட பொய் சொல்ல வில்லையோ கேசவனே

**அம்மன் விருத்தம் : 90**

வள்ளல் தன் கிருபை என்று வகுத்து நீர் சொன்னீர் ராமா
சொல்லுவதினி யாரெந்தன் துவாரகாபுரி வாசா
பிள்ளை யென்றுரைத்த போது என் உள்ளம் நொந்து உருகுதய்யா
தொல்லுல களந்த மூர்த்தி சுவாமி ராகவனே போற்றி!

**அம்மன் தரு : 56**

பாரி லுந்தனைப் போல் ஆரைக் காணுவேனடா மகனே - உன்னை
வாரிக்கொடுத்து மயங்கித் தவிப்பேனோ மகனே!
வானவர் ரிஷிகள் சொல்லும் வசைக்கிடமானே னடா மகனே
கடுங் கானகத்தில் வாழும் காக்கை போலே ஆனே னடா மகனே!
நெஞ்சம் உருகுதெந்தன் நினைவும் மறக்குதடா மகனே இப்போ
கொஞ்சும் மதலை தனைத் கொல்லவுமானேனடா மகனே!

இந்த விதிக்கெல்லாம் எந்தன் தலையோட்டில் மகனே
பிரமன் எழுதிவிட்டானிதை ஏதென்றறியேனடா மகனே!
என் செய்வேன் பாலா எங்களைவருக்கும் மகனே
இப்போ
எள்ளும் தண்ணீரும் இறைப்பாயே என்றிருந்தேனடா
மகனே!
அன்று வயதுனக்கு அழுத்தி எழுதாமல் மகனே-இப்போ
கொஞ்சம் வயதாய்க் குறித்தானோ பிர்மாவும் மகனே
பாலகனே உனைக் கொன்று பட்டமும் ஆள வாச்சோ
மகனே அந்த
ஆலகாலத்தை யுண்ட அரனார் செயலிதுவோ மகனே
கோலமாய் உன்னுடன் கொஞ்சாமல் பாவியானேன்
மகனே இப்போ
வாலைப் பிராயத்தில் மாளநாள் வந்ததோ மகனே
பாலனில்லாமல் வெகுநாளாய் தவமிருந்தேன் மகனே
இந்த
பாரினில் உன்னைப் போலே யாரைக் காண்பே
னடாமகனே.

## அம்மன் விருத்தம் (புலம்பல்) 91

என்ன செய்கு வேனடா இந்த விதிக்கு மகனே அடகண்
மணியே!
அன்னவாகன மேறும் ஆயன் விதித்துவோ மகனே
அடகண்மணியே
உன்னைப் பலி கொள்வதற்கோ இந்ததவம் செய்தேன்
மகனே அடகண்மணியே!
யாருக் கென்ன குறை செய்தாய் நீ இவ்விதிக்
காளானாய் மகனே அடகண்மணியே!

---

எள்ளும் தண்ணீரும் இறைத்தல் - இந்து மத நெறிப்படி மாண்டோர்க்கான ஈமக் கடன் செய்தல்.

அன்னவாகன மேறும் ஆயன் - பிர்மதேவன்

மன்னவர் உனக்கீடோ வானவர் உனக்கீடோ மகனே
அடகண்மணியே!
என்ன வென்று துணிப்பேனடா என்கை
வாளினாலே மகனே அடகண்மணியே!
முன்னுள்ளோர் செய்த வினையிதோ முக்கண்ணனார்
செயலீதோ மகனே அடஎன் கண்கணியே!

## அம்மன் விருத்தம்: 92

மதிமுகம் சோர்ந்து வாடி மாநிலம் தன்னில் வீழ்ந்து
அதிபதிக் கரசர் ஈன்ற அய்யனே உன்னை நான்
கொய்து
பதிதனை ஆளவேண்டி பார்தனில் மன்னர் ஏச
கதிர்தனை அணிந்த ஈசர் கற்பனை இதுவோ மைந்தா

## அம்மன் தரு - 57

வாலை வயதில் பாலன் மடிவது மல்லாமல் ஆயனாரே
என்னைப்
பாலன் தனைக் கொனற பாவி என்று உரைப்பாரே
ஆயனாரே!
சிந்தை கலங்கு தெந்தன் சித்தம் வேறாகுதே ஆயனாரே
-தில்லை
காளிக்குப்பலி கொடுக்க நியமித்திருந்தீரே ஆயனாரே!
திக்குகள் எட்டும் திசைபெற்ற என்மகன் ஆயனாரே -
உன்னுடைய
அக்கிரமத்தாலே அறுபடலாச்சுதே ஆயனாரே!
பஞ்சவர் குலம்தனை அஞ்சாமல் காத்தீரே ஆயனாரே
- இந்த
பாலன் உமக்கு என்ன நேரங்கள் செய்தானோ
ஆயனாரே!

---

பதி - நாடு நேரம் - தவறு.

பாலனைக் கொல்லென்று பாராமல் சொன்னீரே
ஆயனாரே! அன்று
காரானையை ரட்சித்த கருமுகில் வண்ணனே
ஆயனாரே!
தண்டைகள் இட்டுத்தடவி வளர்த்தேனே ஆயனாரே -
இப்போ
மண்டலத் தோர்க் கெல்லாம் வசைக்கிட மானேனே
ஆயனாரே
பால் பழம் அன்னம் பகர்ந்து வளர்த்தேனே ஆயானரே!
இப்போ
வாளுக்கிரையாக வைக்கத் துணியுமோ ஆயனாரே
மலர் மெத்தையின் மேலே வைத்து வளர்த்தேனே
ஆயனாரே
பலரும் நகைத்திடப் பாவியாகினேனே ஆயனாரே
கொஞ்சிய பாலகனை அஞ்சாமல் சொல்லென்றீர்
ஆயனாரே - இப்போ
தஞ்சம். உன்பாதம் சரணா கதி சுவாமி ஆயனாரே!

## ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம் : 93

சரண மென்றடி பணிந்த என் தங்கையே சொல்லக்
கேளாய்
அரன் செயல் இப்படி என்றெண்ணி அன்புள்ள பாலன்
தன்னை
சிரந் தன்னைத் துணித்தாயானால் தேவர்கள்
அறியவேதான்
அரசுடன் ஐவர் கூடி அன்புடன் சுபிட்சமாய் வாழ்வீர்

### வசனம்:

அகோ வாருமம்மா என் தங்கையே! உன் மைந்த னுக்கும் எனக்கும் யாதொரு விகல்பமுமில்லை. ஒரே

---

காரானை - கரிய யானை அன்னம் - வெண்சோறு
விகல்பம் - விரோதம்.

மனதாய் காளிக்குப் பலிவைத்து எதிர்த்த சத்ருவாதி களை வென்று பட்டாபிஷேகனாய் புவி யாள்வீர் களம்மா என் தங்கையே!

## அம்மன் தரு: 58

எந்தன் மீது இந்த மோடி ஏனய்யா அய்யா
இஷ்ட்டமான துவாரகை வாசனே
அந்தமாகிய நந்த கோபனே என்னய்யா அய்யா
அடியாளுக் கருள் புரிய வேணுமே
சிந்தை வாடி துடிக்குது என்னய்யா அய்யா
தசரத மகாராஜன் புதல்வரே கந்த மலரை அணிந்த
ராகவா என்னய்யா அய்யா
காக்கக் கடன் உமது பாரமே! தஞ்சமென்றிட்ட
குஞ்சரம் தனை
காளிங்க மடுவிலதனைக் காத்தாற் போலேஎன்சுதனைக்
காருமே!
மிஞ்சி வந்திடும் பத்மா சூரனை அவன் கரத்தாலேயே
எரித்து
விண்ணவர் தேவர்க்கு அபயம் காத்தோனே!
மன்னன் ஈன்ற மகிபன் தன்னைக் கண்ணே என்னய்யா
அய்யா
மரணமில்லாமல் காத்து ரக்ஷியும்.
அஞ்சித் தவித்திடும் கார்காலத்தில் கோவதைக்
காத்தாற்போலே
அண்ணலே நீர் என் சுதனைக் காத்திடும்.

## விருத்தம்: 94

காத்திடுமென் றுரைத்த கன்னியர்க் கரசியே கேளாய்
நாற்றிசை யாள் வதற்கு நன் மொழி தப்பிடாமல்

---

பட்டாபிஷேகன் - முடிசூட்டியவன் குஞ்சரம் - யானை.

பார்த்திப ராசனீன்ற பரிவுள்ள மைந்தன் தன்னை
சாற்றிட நிமிஷந்தன்னில் (சம்ஹரித்)
சங்கரித்திடுவீரம்மா.

**வசனம்:**

அகோ வாருமம்மா என் தங்கையே! உன் மைந்தனுடைய லப்பிதம் சரியாய்ப் போச்சுது ஒரே மனதாக எண்ணங் கொண்டு காளிக்கு பலி கொடம்மா என் தங்கையே!

**சபை விருத்தம்: (அம்மன்) 95**

ஐவர்க்கும் சுதனாய் வந்த அய்யனே உன்னை நானும்
தையல் காளியர்க்கு பூஜைதான் செய்வதற்கோ
ஈன்றேன்
தூய வெண் மதிபோல் என்முன் துலங்கிய பாலா
எந்தன்
அய்யனே என்று அலறியே வீழ்ந்தாளம்மன்.

**அம்மன் தரு - 59**

அய்யோ என் மகனே உனக்கமைப் பிதுவோ சுதனே
பையரவில் பள்ளி கொள்ளும் பரமன் செயலிதுவோ
கையால்ப் பிடித்துன்னை யறுக்க காலமென்ன கோலம்
மையல் விழி உமை பாகனார் வஞ்சகம் அறியேனே
பொய்யோ இந்த வாழ்வு மகனே புரிந்தோம் கலை
போலே
அய்யோ உனையறுக்க சிவன் அமைப்பிதுவோ மகனே
அருமைத்துரை மகனே உனை அறுத்து அரசாள அரனார்
திருச்செயல் இப்படியோ ஒன்றுமறியேன் நான்
பிள்ளையைக் கொல்லும் பாவி என்று எல்லோரும் இகழ

---

லப்பிதம் - பேறு கலை - விளையாடல்.

கல்லைப் பெண்ணாக்கி வைத்த காரணா பரிபூரணா
சதியாகவே உனையறுக்க விதியோ என்னவிதமோ
மதியரவம் புனல் சூடிய வள்ளலே என்ன செய்வேன்.
சோதிமுடியணியும் சிரந்தனைத் துணித்தோ உன்னை
ஆதிசபை நடம் செய்த அன்னை காளியர்க்கீவேன்!
கொடுமை என்ன கொடுமை இது கோலம் கலிகாலம்
கூ கூ உன்னைப் பலியாகக் கொடுக்க விதி வசமோ
என்ன செய்வேன் ஏது செய்வேன் மகனே சுதனே
கண்ணால் திருமுகத்தை என்று காண்பேனடா மகனே
உன்னைப் பலி கொடுத்து நாங்கள் உலகம் தன்னையாள
முன்னாள் பிரமன் எழுத்தின்படி முடிந்த தோடா
மகனே!

## அம்மன் விருத்தம்: 96

மாலினை நயந்து மின்னாள் மனங் களி கூறவே தான்
சீலனைத் துணி செய்யாமல் சிந்தையில் கிருபை
வைத்து
பாலன் மேல் பக்ஷம் வைத்து பஞ்சவரைக் காத்தாற்
போலே
ஆலின் மேல் பள்ளி கொண்ட ஆயனே ரக்ஷிப்பாயே!

## அம்மன் தரு :60

ஆயனாரே உமக்கு அறியாதாள் செய்தபிழை
எல்லாம் பொறுக்க வேணும் கோதண்ட பாணி
எல்லாம் பொறுத்து நீரும் அன்பாய்ப் பாலனைக்காரும்
அருமைப் பாலனை அறுக்கச் சொன்னதினாலே
அங்கம்] பதறுதே
அற்புதப் பாலனை எப்படித்துணித்து நான் இருப்பேன்
பூமிதன்னில்
(ஆயனே.....)

---

பக்ஷம் - அன்பு அங்கம் - உடல்.

சிறியோர் செய்த பிழையைப் பெரியோர் பொறுப்பார்
என்று
செப்பும் வேத ஸாஸ்திரம் ஒப்பு வார் உலகத்தில்
பிரியமாய் நின்ற சிறுவன் மேல் கிருபை வைத்து
கரிதனை ரக்ஷித்த கடவுளே இப்போ
சிரசைக் கொய்யுமென்று சீக்கிரம் சொல்ல
சிந்தை கலங்குதே மைந்தனைக் கொல்ல
வரிசையாகவே இப்படி வார்த்தைகள்
வாய்திறந்து ஒருசேதிசொல்லுவாயே
(ஆயனாரே......)

பாலனை வதைக்க பதைக்குதே எந்தன் மனம்
செல்லுவது தர்மமாகுமோ சுவாமி
சீலனே லோலனே சிங்கார மார்பனே
ரக்ஷகனே கூர்ம மச்ச அவதாரனே
பக்ஷமுடன் ஐவரையும் ரக்ஷித்த பாவனை போல்
(ஆயனாரே......)

மாதவனே உமக்கு மதலை செய்த குற்றம்
மன்னிப்புச் செய்யவேணும் கோதண்டபாணி
மரணம் செய்யச் சொன்ன வார்த்தையை நீக்கி மனம்
மகிழ்ச்சியடையச் சொல்லுவாய் கோதண்டபாணி
தயவு புரிந்து உத்தாரம் சொல்ல வேணும்
தயாள முள்ள இருதயங் குளிரக் கேள்
அருமைப் பாலனைத் துணி செய்யாமலே
அமர்ந்த வார்த்தை ஒரு சேதி சொல்லவேணும்
(ஆயனாரே......)

**சபை விருத்தம் ஸ்ரீ கிருஷ்ணர்: 97**

தங்கை இப்படிச் சொல்ல சதிருடன் எழுந்திருந்து
எங்கள் மேல் குற்றமில்லை ஈஸ்வரன் அமைப்பேயல்லால

---

உத்தாரம் - மறுமொழி மதலை - மகன்.
பங்கமாய் - குறையாய்.

பங்கமாய் அமைந்திருக்க பிழைகள் சொல்ல வந்தாய்
மங்கை காளியர்க்குன் மைந்தன் மாமுடிதனைக்
கொய்வாயே!

## வசனம்:

அகோ வாருமம்மா தங்கையே! உன் மைந்தனுக்கு ஈஸ்வரன் அமைத்தது சரியாய்ப்போச்சு ஆனதால் யாதொன்றும் நினையாமல் பத்ரகாளிக்கு பலி கொடுமம்மா என் தங்கையே!

பாலனைப் பலி கொடுத்து பார்புவியாள்வதற்கோ
காலமும் வருகுதென்று கானகம் வீட்டு வந்தோம்
சீலமான எனது புத்திர சிகாமணியின் விதியும்
இவ்வாறோ
ஆலின் இலைமேல் பள்ளிகொண்ட அண்ணாவே! எந்தன்
பாலனைக் கொல்ல மனது வரவில்லையே அதற்கு நான்
என்ன செய்வேன் என் அண்ணாவே!

## தரு - 61

மைந்தனே நான் உந்தனைப் பிரிந்தெந்த விதமாய்
மறப்பேனடா - என்
சிந்தையும் கலங்க உன் உயிர் மயங்க என்மதி தயங்கவும்
(மைந்தனே......)

ஆசா பாசங்கள் நீக்கி உன்னை அறுக்கவும் நாளாச்சுதே
- இந்த
தேசத்திலுள்ள பேர்கள் நகைக்க சிந்தை
நோகவுமாச்சுதே
எந்தன் மனமும் செந்தனலாய் வெந்துகனமாகி நீராகிப்
போகுதே
(மைந்தனே......)

வாடா எந்தன் மகனே முத்தம் தாடா தேடாப் பொருளாக
உந்தனை தேடிய பொருள்போல் வாடியே களைத்
தேனடா
(மைந்தனே......)

புத்தியும் ஞானசித்தியும் அருள்சத்தியும் நீ வெற்றி
பெற்றிடவும்
எத்தலத்திலும் உன்னைப் போலவே பக்தனை நான்
காணேன்
புத்திரனே அடா
(மைந்தனே......)

## அரவான் வெண்பா

மாதாவே என்னை மகிழ்ச்சியுடன் பெற்றிடுவாய்
வேதன் விதித்த விதிதானோ பூதலத்தில்
என்னையும் பலிகொடுத்து எம்பெருமான் சொற்படிக்கு
அன்னையே என்னை முன் அனுப்பு வாயே!

## அம்மன் விருத்தம் : 97

புத்திமிகுந்த மகனே உன்னை வெட்டப் புவிதனில்
கத்தி எடுத்து எதிராக நிற்க மனம் கலங்குதய்யோ
வைத்துப் பெருக உனை நாம் வளர்த்திருந் தோமே
மேதினியில்
நத்தி இருக்க மனம் வருமோ இனிஇந் நகர் தனிலே!

## அம்மன் அரவான் தர்க்கத் தரு: 62

அம்மன்: ஆசைக் குகந்த மகனே உன்னை நான் மோசம்
செய்யலாமோ இந்த

---

நத்தி - விரும்பி. காசினி - உலகம் பூமி
தூஷித்தல் - ஏளன வார்த்தை பேசுதல்.

காசியினிலுள்ளோர்கள் அஞ்சிடுவார் என்
கண்ணைப் பறி கொடுக்க என்னமாய் கூடும்
மனம்

(ஆசை......)

அரவான்: என்னமாத் துணிப்பே னென்று அன்னை நீ
சொல்ல வந்தாய்
ஏதேதும் நினைக்க வேண்டாம் மனம் தனிலே
வாதுகள் செய்ய வேண்டாம்

அம்மன்: செய்ய வேண்டாம் என்று மகனே நீ பைய
சொல்லலாமோ உன்னைக்
கைதனில் கிளிபோல் மெய்யாய் வளர்த்து
கன்னியர்க்கு
உன்னை என்னமாய்க் கொடுப்பேன்

(ஆசை......)

அரவான்: கொடுப்பேனோ என்னை யென்று
தடுத்திடுவாய் பேசவேண்டாம்
கூசாமல் தான் கொடுப்பீர் என்னம்மா தாயே
ஆசாபாசங்கள் நீக்கி என்னம்மா தாயே :

அம்மன்: ஆசாபாசங்கள் நீக்கிக் கொடுத்து நான்
பேசாதிருக்கலாமோ இந்த
தேசாதி தேசத்து ராசர்கள் ஏசவும் தூஷித்திட
வும் மனம் யோசிக்கு தென்ன செய்வேன்

(ஆசை......)

அரவான்: யோசிக்குதென்று சொல்லி யாசிக்க வேண்டாம்
அம்மா நீ
உறுதியாய்த் தான் கொடுப்பீர் காளியர்க்கு
பிரியமுடனேயிப்போ

அம்மன்: பிரியமுடனே இப்போ கொடுக்க உறுதியாக
வில்லையே

பாதி மதியணியும் சுருதி விலாசனே பாலன்
தன்னைக் கொல்ல மாலயன் விதித்தாரோ
(ஆசை......)

அரவன் மாலயன் விதித்தார் என்று 'கோலமும்
அறிந்திருந்தும்
ஏதும் நீ புலம்ப வேண்டாம் என்னம்மா தாயே
சூதுகள் நினைக்க வேண்டாம்

**வசனம்**

அடாவாடா மகனே! உந்தனுக்கு மகுடம் சூட்டி என் ,கண்ணாலே பார்க்காமல் இந்த ரண களத்தில் முதல்பலி கொடுக்க பிர்ம தேவன் விதித்தானோடா மகனே

## அரவான் வெண்பா

காரணனைப் பூசிதமாய்க் கண்டு தெளிந்து தினம்
பூரணத்தில் நல்மனத்தைப் பூட்டினால்
நாரணனுங்காண் அரிதான கரியுரித்தோன்
தன்னருளும் மனத்துள் அறிந்து சொல்.

**வசனம்:**

அகோ வாருங்களம்மா தாயே! தாங்கள் விசனப்படுகிறதற்கு நான் என்ன சொல்வேன் சாலோக சாமீப சாயுச்ச பதவி அடையும்படியாய் நான் முன் செய்த பூசா பலத்தினாலே சகலமும் கூடிய ரணகளத்திலே பலியாகப் போகவும், நேரிட்ட படியால் தாங்கள் மனம் தேறி வைகுண்டத்தில் போய் இருக்கும் படியாய் கிருபை செய்யவேணுமம்மா தாயே!

## அம்மன் வெண்பா

பாலனுக்கு முடி சூட்டிப் பார்க்கலாமென்றிருந்தேன்
காலங்களிப்படிக் கண்டேனே கோலமுடன்

உன்னைத் துணித்து உலகில் இருப்பதற்கு
என்னமாய்த் துணியும் மனம் இனி

**வசனம்:**

அடாவாடா மகனே! எந்தன் மனம் தேறுவதற்காக எத்தனை வார்த்தை சொன்னாலும் என்மனம் தேறாதடா மகனே!

**அரவான் வெண்பா**

ஆதிபிரான் அடிக்கு அன்புருகி தெண்டனிட்டால்
சோதிப் பர ஆகாச வெளி தோன்றுமே
ஓதிய நூல் வேத வழி கண்டால் மெய்ப் பொருளாம்
தற்பரத்தில்
சாதகமதாய்தான் அடையலாம்

**வசனம்:**

அகோ வாருமம்மா தாயே! கடவுளை ஒரு மனதாக எண்ணினால் மோட்ச பதவிக்கு அருள் செய்வானம்மா தாயே!

**தரு - 63**

என்ன செய்வேன் பாலா இவ்விதிக்கு நான் என்ன
செய்வேன்
என்ன செய்வேன் பாலா என்று ஈங்கி மனம் தளர்ந்து
முன் செய்த தீவினையோ முடிவாக ஆச்சுதடா பாலா
வானோர்கள் ஏசவும் அரசர் சபை தனிலே நானும்
பெற்றெடுத்த புதல்வனைத் துணிக்கலானேன்
(என்ன செய்வேன்)
மங்கையர் காளிக்கு தங்கமான மகனே

---

தெண்டனிடுதல் - வீழ்ந்து வணங்குதல்

இங்கித வார்த்தை நீக்கி எப்படித் துணிப்பேனடா
(என்ன......)

பாராளுவாயென்று பாலனே நானுனை வளர்த்தேன்
சீலா உனைத் துணிக்கச் சிந்தை கலங்குதடா

## அரவான் கலித்துறை

சத்திய மென்பதை நீங்கள் எந்நாளும் தவறாதபடி
நித்திய காயம் அநித்தியம் என்ற நிலையறிந்து
புத்தியும் சற்றும் அசையாமல் மால்தன்னைப் பூசை
செய்தால்
முத்திக்கு நல்வழி காட்டிடுவார் அம் முகுந்தனுமே!

## வசனம்:

அகோ வாருடம்மா தாயே! என்னுடைய மாமனான வர் இந்தக்குலங்கள் முழுதும் ஈடேற்ற வந்தபடியால் அவர் வார்த்தையைத் தடுத்துச் சொல்லாமல் நடவுங்களம் மாதாயே!

## அம்மன் கலித்துறை

பாலனை விட்டுநான் பிரிந்தாலும் பாசவினை
மேலாயிருந்து மெய்யும் தளர்ந்தது மனம் வேறுபட்டு
ஆலால முண்டோன் அருளாலே உன்னை அடிமை
கொள்ள
மாலாய்ப் பிறந்து உயிர் வாங்கிக் கொண்டார் இந்த
மாநிலத்தே!

## தரு : 64

முத்தே நவமணியே என்ன செய்வேன் நான் பெற்ற என்
கண்மணியே!

---

இங்கிதம் - இனிய.

இத்தலம் தன்னை யாள இருந்தாயேடா மகனே!
சுத்த ராசன் உம்மை யீன்று பெற்றிடும் சிகாமணியே
(முத்தே......)

என்னமாய் மகனே நான் ஈவேன் காளியர்க்கு
முன்னமே சொன்ன சபதம் சொன்னதற் கென்ன
செய்வேன்
(முத்தே......)

உந்தன் பெற்ற தாய் வயர் நொந்து உருகுதையா
சிந்தை கலங்கி மனம் வெந்து தணியுதடா
(முத்தே......)

ஆயனார் செய்திடும் மாயத்தை நானறியேன்
நேயமாய் என்னுடனே வாய்திறந்து சொல்லுவாயே
(முத்தே......)

அய்யனே உன்னை நான் தையல் காளியர்க்கு
மெய்யாகப் பலிவைக்க விதித்தானோ பிர்மதேவன்
(முத்தே......)

சிங்காரமான மகனே உன் சிரசைத்துணிக்கவே
அங்கம் பதறுதையோ ஆ...இதுக் கென்ன செய்வேன்
(முத்தே......)

சுந்தரமான முகம் செந்திரு வான விழி
சந்திரனைப் போலே ஒளி சுந்தரா என் மகனே!
பாவி ரண காளிக்கு தாவி மகனே கொல்ல
ஆவி கொதிக்குதய்யய்யோ அய்யா நான் என்ன
செய்வேன்
(முத்தே......)

**அம்மன் விருத்தம் - 98**

ஈசனே முறையோ ஈன்றவனே முறையோ
வாசமாம் துளபமாலை மார்பனே முறையோ

---

துளபமாலை - துளசி இலைகளால் ஆனமாலை.

காசினி தன்னையாள கற்பித்த பாலனுக்கு
மோசம் நானறியேன் அய்யய்யோ முனிவர்கள்
சாபம்தானோ!

## அம்மன் தரு - 65

வஞ்சகம் செய்தாரோ மாயவர் வார்த்தையைக் கேட்டு
வனத்தினில் வாழ்நாளை மாய்த்திடப் போறாயோ
மகனே!
அஞ்சவேண்டாமென்று யார் சொல்லப் போகிறார்கள்
மகனே அந்தத்
துரோகி துரியோதனனால் சுதனைத் துணிக்கலாச்சோ
மகனே!
விதிவசம் இப்படி விளைந்ததுவோடா மகனே உந்தன்
விசித்திர வதனத்தை என்று காண்பேனடா மகனே!

## விருத்தம் - 99

மைந்தனே மகனே நாங்கள் மாயனை வேண்டி யானும்
உந்தனைப் பெற்று நாங்கள் உரிமையாய் வளர்த்தோம்
பாலா - என்
சிந்தையும் கலங்கு தய்யா தீவினையுண்டதோடா என்று
கந்தார நெஞ்சம்வாடி கதறுவாள் பதறுவாளே!

## அம்மன் தரு - கட்டளைக் கலிப்பா

கந்தரா நெஞ்சம் வாடுதே உள்ளமும் நொந்து கலங்கி
மிகவும் சோருதே அடா பாலா
சுந்தரமான மகனே உந்தனைக் கொல்ல துயரம் மிகவும்
ஆனேனடா அய்யய்யோ பாலா
கந்த மலர் அணிவோன் ஈசன்றார் கபடம் அறியேன்
மகனே அடடா பாலா
சிந்தை யொரு வகையாகுதே அய்யய்யோ பாலா
தெய்வம் வகுத்த திப்படியோடா!

## அம்மன் விருத்தம் : 100

என்ன செய்வேன் மகனே உந்தனை இழந்து புவியை
யாள
முன் செய்த வினையோ மூவர கற்பனையோ மைந்தா
வஞ்சியர் காளியர்க்கு உன்னை வதைத்திட
வேணுமென்று
நஞ்சணி கண்டன் நாதனார் செயலிதானோ

## அம்மன் தரு: 66

பெற்ற வயர் நொந்து பற்றி எரியுதே மகனே என்றன்
புத்திரனைக் கொன்று பூமி யாளவோடா
கத்திக்கு உன்னைக் கருதி வளர்த் தேனடா மகனே
இப்போ
வெற்றி பெறாமலே வீணாகப் போறாயோ - மகனே -
உந்தன்
புத்திக்கும் வித்தைக்கும் புத்திரன் வேறுண்டோ மகனே
உங்கள்
சத்தியம் தப்பாத சந்திர குலம்தனில் மகனே
உச்சிக்கு எண்ணெயிட்டு உகந்து வளர்த்தேனடா மகனே
நம்மை
ரக்ஷிக்கும் தெய்வம் நெடுமால் கிருபையீதோ மகனே

## சபை - விருத்தம் - 101

மைந்தனைப் பார்த்து மாதா மயங்கியே தயங்கி நொந்து
சுந்தர முகங்களெல்லாம் சோர்ந்திட பூமியில் வீழ்ந்து
சந்திரசேகரரே என்று தயங்கியே மனதுவேறாய்
கந்தார் நெஞ்சம் வாடி கதறுவாள் பதறுவாளே!

## அம்மன் தரு: 67

அய்யகோ கயிலைதனில் வாழும் என் அண்ணாலே
கங்காதரா

பாஞ்சாலன் வேள்வியில்யான் பிறந்து வெகு பாபங்கள்
செய்தேனோ
பாதகன் துரியோதனனால் வெகு பாடெல்லாம் பட்டேன்
நான்
பஞ்சமா பாதகன் என்னைக் கொண்டுவந்து பார்சபை
தனிலே - என்னை
பங்கப்படுத்தினான் என் அங்கம் உருகிட பார்த்திருந்தார்
சபையோர்
(அய்யய்யோ ......)

வஞ்சகன் துரியோதனனால் வனத்தில் அலைந்தேனே
வஞ்சி சுபத்திரை சொல்லுக் கிசைந்து வணங்கி
நடந்தேனே
தன்னை வணங்கியே சேவித்த மன்னரைத்தாள்
பணியலானேன் - வெகு
தாட்டீகமாகவே கீசகனால் வெகு தாழ்மை எல்லாம்
பட்டேன்.
மனனன் துரியோதனனால் வாழும் மனை இல்லாது
வாழும் குறத்தியாக
வருத்தத்தினால் பிச்சை வாங்குவாய் என்று
வகுத்தாரே பிர்மதேவன்
மன்னர் மண்டலீகர் வாழும் ரண களத்தில் மைந்தன்
தனைநிறுத்தி அந்த
வஞ்சியர் காளிக்குக் கொஞ்சிய பாலகனை
வதை செய்ய நீதியுண்டோ
(அய்யய்யோ......)

தஞ்சம் உன்பாதம் சரணாகதியென்று தாழ்ந்து
பணிந்திருந்தேன் - இப்போ
மிஞ்சிய பாலனை வஞ்சியர்க்கீய விண்ணுள்ளோர்
மாய்கை ஈதோ
(அய்யய்யோ......)

பஞ்சவரைக் காப்பது போல் எந்தன் பாலனைக்
காக்காமல் - பைய
வஞ்சகம் செய்தீரே என் செய்வேன் ஈஸ்வரா வள்ளலே
லோகேசா

## அம்மன் விருத்தம் : 102

வள்ளலே என்ன செய்வேன் வந்துதோ காலம் இப்போ
அல்லதென் வினையோ முன்னாள் அமைப்பீதோ
அறியேன் நானும்
கல்லதைப் பெண்ணாய்ச் செய்த கரியமால்
கபடம் தானோ
நல்லதோர் கயிலை வாழும் நஞ்சணி கண்ட! நாதா!

## வசனம் :

அரகரா காலகண்டா! சதுர்ப்புயமும் திரிநேத்திர முமுடைய கயிலை வாசனே! உன் மைத்துனனாகிய ராகவன் செய்வது உனக்குச் சம்மதமோ சுவாமி!

## விருத்தம் (பைரவி)

வாராய் எனது குறைதீர வகையொன்று கூறாய்
அநேக விதம் சொல்லி சாஸ்திரம் கூறும் மொழி
நேராய் தெரிந்து நெஞ்சம் ஒன்றாக நிலைக்கவில்லை
தீராவினைக்குத் திருமால் மலர்ப்பதம் சேர்ப்பிப்பாயே!

## தரு - 68

அய்யனே என்ன செய்வேன் என் அருமைத்துரை மகனே!
உன்னைத்
தையலார் காளிக்கு மெய்யாய் பலி வைக்க தாண்டவ
மாடிய ஆண்டவர் மாய்கையோ!
(அய்யனே.....)

மகுடமுடி தரித்த என் மைந்தனே நல்லரவானே என்
உடலுக்குயிராகிய உண்மையாகிய பாலா அட கெடு
செய்தானோ ஆதிமூலநாதன்
(மகுடமுடி......)

சிந்தை உருதய்யோ மனம் வெந்து உருகுதய்யோ அந்த
சந்திரன் வாழ்கின்ற நந்தி மேலேறிய அய்யனே சங்கரா
மெய்யனே என் செய்வேன்
(சிந்தை......)

கூற்றை உதைத் தோனே திருக்கடல் ஆற்றை அடைத்
தோனே - என்னை
வேற்றுமையாக்காதே நாற்றிசையோர் பேச
ஆத்தியினடியில் அமர்ந்திடும் ஈசனே
(கூற்றை......)

மன்னர்க்கு மன்னர் அரசே மணிவண்ணற்கு மால்மருகா
விண்ணோற்கும் தேவர்க்கும் உன்னிதமாகிய மன்னர்
ஈன்றிடும் மகிபனே என்செய்வேன்
(மன்னர்......)

ஆலத்தை உண்ட ஈசா ஞாலத்தை வென்றநேசா
உந்தன்
கோலத்தினால் எந்தன்பாலனை அறுத்திடக்
கொள்ளுமோ என்மனம் வள்ளலே என் செய்வேன்
(ஆலத்தை......)

அன்று அரன் கொடுத்த வயதும் ஆச்சுதோ என்மகனே
விண்டுதோ உன்னைநான் விட்டுப் பிரியவும்
கண்டவர் நகைத்திடக்கர்ம விதி தானோ!

## அம்மன் வெண்பா:

கண்ட கண்ட கோவிலெல்லாம் கைகுவித்து
தெண்டனிட்டு நின்று தவம்புரிந்தேன் நேர்மையுடன்

தொண்டு செய்து பெற்றபலனால் பெருமையாய்
வந்துதித்தித்தாய் புத்திரனாய் நல்லரவர இப்போது

## அம்மன் தரு: 69

அய்யோ நான் என்ன செய்வேன் கைலாச வாசா
அய்யோ நான் என்ன செய்வேன்
அருமைப் பாலனைக் கொல்ல ஆகுமோ என்னால்
அய்யய்யோ கைலாச வாசா
சோதி சுந்தர நாதனே கயிலை வாழும்
ஆதியாகிய வேதனே பாதிமதி யணியும் பரமனே இன்று
பாவங்கள் என்ன செய்தேனோ கைலாச வாசா
எங்கும் சோதியாய் நின்றோனே இமையோர்கள் பேச
மங்கை இடப்பாகம் வைத்தோனே அங்கம் உருகுதய்யோ
அருமைப் பாலனைக் கொல்ல அய்யோ நான்
என்ன செய்வேன் கயிலாச வாசா
திரிபுரம் எரித்த சோதியே அரிஅயனுந் தேடிய
அரிதான வேதனே குருகுலம் தன்னை ஆள்வும் கொடுத்த
பாலர்க்கு
கொடுமைகள் என்ன செய்தேனோ - கயிலாச வாசா -
திங்களும் கங்கையும் சூடிய கரியுறித்த பிஞ்ஞகன்
பூதநாதனே
மங்கை உருகுறேனே வங்கையோ உமக்கிது வையகம்
பேசவானேன் - கயிலாசவாசா
அண்டம் நிறைந்த ருபனே உமை பூசித்த
தொண்டர்க்கருள் புரிவோனே
கண்டவர் என்னை ஏச மண்டலத்தோர் நகைக்க
கன்னியும் ஆனேன் அய்யய்யோ கயிலாசவாசா
வெள்ளியம் கிரியின் வாசனே விடையிலேறும் வள்ளலே

---

வங்கை - சம்மதம் ஒப்புதல்.

அள்ளியே நஞ்சையுண்ட அண்ணலே உமக்கு நான்
அப சாரம் என்ன செய்தேனோ கயிலைவாசா
பரப்பிர்ம ஸ்வரூபமானவா உமைபங்காளா
பாவியாகினேன் அய்யய்யோ அரகரா மகாதேவா
அற்புதமான ஈசா அண்ணலே என்னைக் காத்திடும்
கயிலைவாசா

## அம்மன் விருத்தம் : 103

அண்ணலே அமரர் கோவே ஆலமுதுண்ட ஈசா என்
கண்ணெல்லாம் மிகவும் நொந்து கருகியே உருகி உள்ளம்
முன்னவர் செய்த கர்மமும் முடிந்ததோ அறியேன்யானும்
நன்னகரார் நகைக்கவானேன் சதாசிவப் பொருளே
சம்போ!

## வசனம்:

அரகரா சம்போ மகாதேவா! அடியாளை ரக்ஷித் தருள வேணுமையா.

## அம்மன் சபை விருத்தம் : 104

மதலையை மடியில் வைத்து மனம் கொள்ளாக்
கிலேசத்தோடே
பசலை போலே ஏங்கிஏங்கி பைந்தொடி மாது தானும்
குவளைத் தண்ணீர் அருந்த குரலோசை விட்டேங்கிட
பிழைகள் தான் வந்தடுத்ததென்று பெண் கொடியாள்
ஏங்கலுற்றாள்

## அம்மன் தரு: 70

என்ன செய்வேனடா என்மகனே! எப்படி உனையறுப்
பேன்
கையால் பிடித்துனையறுக்கக் காலம் வந்து நேர்ந்து
தோடா!

மெய்யெலாம் நடுங்குதடா மனம்மெத்த கிலேச
மாகுதடா
மாயன் செய்த கபடந்தானோ மகாதேவர்
கற்பனையோ
பிர்மதேவன் எழுத்தின் குறையோ பிழைகள்
வந்து நேர்ந்ததய்யோ
பிள்ளையைக் கொல்லும் பாவி என்று பேர் எடுக்கவும்
ஆனேனடா
கள்ளி யென்று பேரெடுக்க காலமும் வந்து நேர்ந்து
தோடா
எப்படி நான் துணிந்து என்னவென்று அறுப்பேனடா
எந்தன் மனம் தேறவும் தான்எதிர் வார்த்தை
உரைக்கலாகாதோ
கல்லோடா உன்மனது சிவன் கற்பனைக்கு நான்
என்ன செய்வேன்
(என்ன செய்வேன்......)

## அம்மன் விருத்தம் : 14

ஈசன் மால் அயன் எனும் தேவர் இன்பமாய்
எனக்களித்து
வாசமாய் இருக்க எந்தன் மைந்தனைஅறுத்து நானும்
தேசமே ஆளவேண்டி சிவனடியாளுக்கு நான்
நேசமாய்ப் பலி கொடுத்து நீலியென்றுரைக்கலானேன்.
தேறியே மனம் தாளுதில்லையே சிவனே என் செய்வேன்
அய்யோ மகனே என் செய்வேன்
பாவிகாளிக்குத் தான் பலி கொடுக்க
ஆவி நடுங்குதே அய்யோ மகனே என்ன செய்வேன்
வீரியமான சந்திர குலந் தன்னி லுதித்த பாலகா நான்
கொல்லவும் ஆனேனே
மைந்தனைப் பலி கொடுத்தரசாள வருமோ மனது
மாபாவி என்பாரே அசல் மாதர்களெல்லோரும்

பாரில் உந்தனைப் போல் யாரைக் காணுவேன் பழி
பாவி யாகினேனே!
சிந்தை வாடி துடிக்குதே எந்தன் மகனை அறுத்திட
என் முன்வினையோ அறியேன்
கந்த மலரை அணிந்த தாருகா வனன் கற்பனையோ
அறியேன் முன்செய்வினையே அறியேன்
கையில் மானும் மழுவும் தரித்த ஈசனே
மெய்யெல்லாம் நடுங்குதே கயிலாச வாசனே!
இமையோர்கள் போசனே!
நேசமுடனே ஈன்ற பாலர்க்கு நாசம் வர விதியோ!
நெடுமால் தன் கிருபையோ அடியாள் செய்வினையோ
எந்தன் ஆவி துடிக்குதய்யய்யோ.
ஈசனே முறையோ இறையோனே முறையோ

## அரவான் விருத்தம் : 105

எந்தனைப்பெற்ற தாயே உந்தனுக் கிந்த துக்கம்
வேண்டாம்
முந்தி ராகவனிடத்தில் மொழிந்ததற் கிரண்டு முண்டோ
இந்த லோகத்தில் நானும் இருப்பதும் இல்லை
கண்டாய்
சிந்தையும் தெளிந்து தேறி செல்வனை அறுத்திடம்மா!

### வசனம்:

அகோ வாருமம்மா தாயே முன்னாளில் ராகவ னிடத்தில் சொன்னதற் கிரண்டுமுண்டோ. சம்மாரம் பண்ணுமம்மா தாயே!

---

அசல் மாதர் - உண்மையானப் பத்தினிப் பெண்கள்.
முந்தி - முதலில்.

## அம்மன் அரவான் தர்க்கத் தரு: 72

அம்மன்: என்செய்வேன் மகனே அஞ்சுதே கரங்கள்
ஏகியே உனை யறுக்க அந்த
நஞ்சணி கண்டர் வஞ்சத்தாலே நானுன்னை
அறுப்பேனோ!

அரவா: அறுப்பேனோ வென்று என்மேல் விருப்பமாய்
அழுதிட வேண்டாமம்மா! - அந்த
அரனுடைய அமைப்பை தயவினால் வெல்ல
நிற்குமோ இது ஞாயமோ!

அம்மன்: ஞாயமோ உந்தனை நேயமாய் அறுத்து
நாரியர் காளிக்கீய
நான் மறை வேதம் மேதினியோர்கள்
நகைத்திடப் பாவியானேன்!

அரவா: பாவியாகினேன் எனப் பகர்ந்திடும் மொழியை
அந்தப் பங்கயன் அறிந்தால் அந்தப்
பரப்பிர்மமாகிய அரனாருனை பழித்திடுவார்
தாயே!

அம்மன்: பழித்திடும் மொழியை செழித்திட எந்தனுக்கு
பகர்ந்திடுவாய் மகனே ஈசன்
பரம ரகசியம் பூர்வக்யானம் பாலனே
அறிவாயே!

அரவா: அறிவாயோ வென்ற தெரிவையர்க்கரசே
ஆகமம் தனைக்கேட்டால் நான்
அறிந்ததைக் கெந்தனால் தெரிந்ததைச்
சொல்லுகிறேன் அன்னையே கேளுமம்மா

அம்மன்: கேளுமம்மா வென்று சொன்ன வேள்
தன்னைப் பழித்திடும்
கீர்த்தியான மைந்தனே நன்றாய்
வாழும் மன்னர்கள் நாற்றிசையோர் கள்
வகைதெரிந்திட உரைப்பாயே

அரவா: உரைக்கிறேன் கேளுமம்மா பரப்பிர்மஸ்வரூபம்
உங்களிடத்தில் இருந்து
உதவிபோல் வந்து வதை செய்ய வந்தது
ஓங்கும் திகரியல்லவோ.

## அரவான் விருத்தம்: 106

இன்னார்க் கின்னபடி யென்று சிரசோட்டில்
முன்னால் எழுதியவன் மூடனோ
அன்னாளில் சுழித் தெழுதும் அட்சரத்தைத்
தொட்டெழுதி விட்டபின் அழித்தெழுதப் போறானோ
அயன்

## வசனம்:

அகோ வாருமம்மா! என் சிரசோட்டில் காளிகா தேவிக்குப் பலியாகிப் போவாயென்று எழுதியிருப்ப தினாலே எந்தன் மாமன் சொல்லுகிறாரம் மா தாயே!

## அம்மன் தரு - 72

மகனே விதிவசமோ அப்பா மகனே உன்னை
வாளால் அறுக்கவும் நாள் வந்ததோ
என்ன நான் செய்வேனடா பாலா எப்பிறப்பில் உன்னைக்
காண்பேனடா
முன்செய்த தீவினையோ முனிவருடைய் சாபமிப்போ
வந்ததோ
சின்னஞ்சிறு வயதில் உந்தனுக்கு வாழும் வயதில்
மடியவும்தான் உந்தன்
சிங்கார முகத்தை என்று காண்பேனடா
மன்னர் சபைதனிலே மகுடமுடிதானும் சூடாமல்
பெண்ணாள் காளியர்க்குப் பலியாகப் போகவும் நாள்
வந்ததோ!

என்ன நான் செய்வேனடா நான் எந்த விதமாய்த்
தெளிவேனடா மகனே விதிவசமோ!

## அரவான் விருத்தம்: 107

திகிரியைக் கரத்திலேந்தும் ஜெகமெல்லாம் அளந்த
மாயன்
பகிரதி பாகனான பரமனார் அருளினாலே
மகிபன் மன்னவர்கள் சேனை மதகரி பரி களெல்லாம்
திகிரியால் அதம் செய்து சேர்வது தெய்வலோகம்

## வசனம்:

அகோ வாரும்மா தாயே அந்தப்பரப்பிர்ம சொருப மாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய திகரியாகிய சக்கரம் இந்தப் பூமிபாரம் நீக்குவதற்காக வந்திருக்கிற படியால் விதி யாரை விட்டது என்னை முன்னாலே அனுப்பினால் இந்த சேனாதிபதிகளுக்கு இடம் பார்த்து வைக்கிறேன் என்னை அனுப்புமம்மா தாயே!

## அம்மன் தரு: 73

அய்யோ மகனே நல்லரவானே அரிவை காளியர்க்கு
மெய்யாய் பலிவைக்க விதித்தானோ பிர்மதேவன்
பையரவிற் றுயிலும் பரமனார் உன் தலையில்
பாராமல் எழுதியதை யாரறிவார் மகனே!
அருமையாய் உனை வளர்த்து அன்னை காளியர்க்கீய
அரும்பாவியானேனடா மகனே என் மகனே
கருவிழி மணிபோலே கரிசனமாக உன்னை
கண்ணுள்ளே வளர்த்தேனடா என்மகனே மகனே!

---

''திகிரி'' என்னும் இச்சொல் 'முத்தைத் தரு பத்தித் திருநகை' எனும் திருப்புகழில் வருவது காண்க. கரிசனம் - பொறுப்பு.

முன் னுள்ளோர் வினையீதோ முக்கண்ணனார்
செயலீதோ
மோசம் நான் அறியேனடா மகனே என்மகனே!
பாவி துரியோதனனால் பாலன் தனைத்துணிக்க வென்று
பரமன் எழுதி வைத்ததைப் பாவி நான் அறியேனடா
என்னாலே உன் உயிர் எமலோகம் சேர வென்று
முன்னோர்கள் சொன்னபடி முடிந்த தோடா மகனே
மண்ணாள் வதற்காக உன்னைப் பலி வைக்க
வஞ்சகமாக ஆயன் வைத்த சூது அறியேனடா!

## அம்மன் விருத்தம்: 107

கற்பனை இதுவோ மைந்தா கடவுளர் அருளோ அய்யா
சற்பினையாக மாயன் சங்கரி காளிக்குன்னை
அற்புதம் செய்ய வேண்டி அறுத்திடும் போதுனக்கு
நற்பதம் தருவரோ மைந்தா நான்முகன்
செயலிதானோ!

## அம்மன் தரு: 74

காலனாரைப் போல் ஆகினேனே சபையோர்களே நான்
காலனாரைப் போல் ஆகினேனே!
காலனாகி வதைக்கத் தானும் கர்த்தாவும் விதித்திருக்க
சூலமும் கரத்தில் கொண்டு சுதனைத் துணிக்க லானேன்
(காலனாரை......)
மண்ணில் உள்ள அரசர்களே கேளும் மாபாவி யானேன்
மகனையே நான் துணிக்கலானேன்
என்னைப் போல பாவி எங்கும் கண்டதுண்டோ
ராசர்களே!
(காலனாரை......)

---

காலனார் - எமன்.

இந்த பாலகன் என்ன பிழைகள் செய்தானோ
அந்த மாயவன் தான் பட்சமாய் வதைக்கச் சொல்லவே
சீலமாய் வனத்திலென்னைச் சிதற விடாமல் காத்தார்
(காலனாரை......)

என்னமாய் மனம் வருமோ பெற்ற பாலனைத் துணிக்க
எப்படி மனமும் கூறுமோ அன்னை வாளாலே அறுக்க
விதித்தாரோ சிவன்
(காலனாரை......)

**வெண்பா: (அம்மன்)**

கற்பகமே சொற்புலமைக் கற்றோனே
நற்குமரா நாக கன்னி அரும் பாலா
இப்புவியில் எல்லோரும் போற்ற
எழிலான சுந்தரனே நல்லோனே முன் போய் நட

**வசனம்:**

அகோ வாரும்பிள்ளாய் நல்லரவானே! யுத்தம் புரிய நாள் வைத்த லக்கினம் தவறிப்போய் விடும் ஆதலால் இனி தாமதப் படுத்த வேண்டாம். சீக்கிரத்தில் காளிகா தேவிக்குப் பலியாகப்போய், பதினெட்டு நாள் பாரத யுத்தம் பார்த்த பின்பு வைகுண்டத்திற்கு வந்து சேரும் பிள்ளாய் நல்லரவானே!

**சபை விருத்தம்: 109**

சதிர் பெறு மறை விளங்க தர்ம மேன்மையும் ஓங்க
மதிமனு நீதி செல்வ மாதம் மும்மாரி பெய்ய
பதிதரும் உலகம் வாழ மன்னர் செங்கோல் தழைக்க
துதிபெரும் ஆதிமூலம் துணையடி போற்றி போற்றி.

---

பட்சம் - விருப்பம். லக்கினம் - குறித்த, நற்காலம்.

**வசனம்.**

அகோ வாருமம்மா தாயே! என் மனதில் கோரிய படிக்கு வைகுண்டத்திற்குப் போகும் படிக்கு என்னை சம்மாரம் பண்ணுமம்மா தாயே!

**சபை விருத்தம் - 110**

இப்படி உரைக்க அம்மன் இருதயத்தினில் புகுந்து
கைப்பிடியாக பாலன் கழுத்தையும் அறுத்து அம்மன்
அப்பணிச் சடையன் அரனாருடன் வாழும் காளிக்கு
ஒப்பியே பலி கொடுத்து உக்கிரமாய் விளங்கினாளே!

**சபை விருத்தம் : 111**

கண்மணி நல்லரவான் தன்னைக் களப்பலியும் வைத்து
தின்மை செய்து அரசன் தன்னைத் திருமுடி துணித்த பின்பு
நன்மை செய்தவர்க்கெல்லாம் நற்பதவியும் அளிக்க
மன்னவர் சபையில் விரித்தமயிர் முடிக்க ஏகினாளே!

**அரவான் விருத்தம் - 112**

பதினெட்டு நாளைப் போரில் பதறியே மடிந்த மன்னர்
விதிகெட்டு மாண்டோர் தம்மை விபரமாய் எந்தனுக்கு
மதிகெட்ட துரியோதனனாலே மாண்டிடும் மன்னரெல்லாம்
சதிருடன் எந்தனுக்கு சாற்றிடீர் சரணமையா!

**வசனம்:**

அகோ வாருமையா சுவாமி வேத வேதாந்த மூர்த்தியே! அந்நப் பதினெட்டு நாள்ப் போர்க்களத்தில்

---

உக்கிரமாய் - கோரமாய், கோரமாக.

மடிந்த மன்னர்கள் ரதகஜ துரக பதாதிகளை எனக்குத் தெரியும் படியாக அனுக்கிரகம் செய்ய வேணுமையா சுவாமி!

## ஸ்ரீ கிருஷ்ணர் அம்மன் தரு: 75

அம்மன்: ஆரு பட்ட படுகளந்தான் அண்ணாவே
சொல்லுமையா!

ஸ்ரீகிரு: முதல் நாளைப் போர்க் களத்தில் முன்னே
வந்த சேனாதிபதி
லாட ராசன் ஈன்றெடுத்த வீரமுள்ள ருத்திர
குமாரன்
அதிக பல வீரமுள்ள அரசன் பட்ட படுகளந்தான்

அம்மன்: இரண்டாம் நாற்போர்க்களத்தில் நீறு
பொடியான பேரை
வண்டணி துளபமாலை மாயவனே
சொல்லுமையா

ஸ்ரீகிரு: அண்டர்கோன் மைந்தன். தேவி அரிவையரே
சொல்லக்கேளும்
துண்டரீகமாக வந்த சுவேதராசன்
பட்டானம்மா

அம்மன்: மூன்றாம் நாளைப் போர்க்களத்தில் முடிந்த
பேரைச் சொல்லுமையா

ஸ்ரீகிரு: அக்கியான ஒரு வருஷம் அமுதளித்த
லாடராசன்
மிக்கான சேனை கூட வீணாக மடிந்தானம்மா

அம்மன்: அந்த நாள் சென்ற பின்பு ஆரு பட்டார்
சொல்லுமையா

ஸ்ரீகிரு: முந்தவே சீமை பூமி இல்லை என்ற அந்தகன்
ஈன்ற

---

அந்தகன் குருடனாகிய திருதராட்டிரன்.

மைந்தன் அரவக் கொடியோன் தம்பி
சந்தமுள்ள
ராசன் சல்லா சந்தன் (சரா சந்தன்)
பட்டானம்மா

அம்மன்: ஐந்தாம் நாளில் பட்டதொரு அரசர் மன்னர்
சொல்லுமையா

ஸ்ரீகிரு: வஞ்சகம் செய்து பட்ட மன்னன் தம்பி விகர்ணன்
பட்டானம்மா

அம்மன்: ஆறாம் நாளைப் போர்க்களத்தில் ஆருபட்டார்
சொல்லுமையா?

ஸ்ரீகிரு: தூராய் உன்னை மயிர் பிடித்து இழுத்த
துச்சாதனன் பட்டானம்மா

அம்மன்: ஏழாம் நாளில் பட்ட மன்னர் எனக்குச்
சொல்லுமையா

ஸ்ரீகிரு: தேராளி மன்னர் சூழ்திசை எங்கும் கீர்த்தியே
பெற்ற
பாராளும் வண்ணமகன் பகா தத்தன்
பட்டானம்மா

அம்மன்: ஐந்து மூன்று நாளைப் போரில் அதமான
மன்னர்களைக்
கஞ்சனை வதைத்த மாலே காரணனே
சொல்லு மண்ணா!

ஸ்ரீகிரு: மிஞ்சு புகழ் படைத்த விசயனுக்கு பகையாய்
வந்த
தந்திரமாய் பேர் பெற்ற ராதத்தன்
(ஜராசந்தன்) பட்டானம்மா!

அம்மன்: ஒன்பதாம் நாட் போரில் வம்பு செய்து மாண்ட
பேரை
செம்பொன் முடி தரித்த ஸ்ரீராமா சொல்லு
மையா!

ஸ்ரீகிரு: சிங்கள தேசம்தன்னையாளும் செல்ல ராசன்
ஆனை சேனை
எல்லாம் ஒருமிக்க கூடி எமலோகம் சேர்ந்
தாரம்மா!

அம்: ஈரைந்து நாளைப் போரிலே எதிர் மடிந்த
பேரை நான்
அஞ்சிடாமல் மானம் காத்த நாரணரே
சொல்லு மண்ணே!

ஸ்ரீகிரு: பாரஞ்சிடக் கீர்த்தி பெற்ற பாட்டன் உங்கள்
வீடுமாச்சாரி
மேரஞ்சிடப் பிராணன் தன்னை விட்டார்
களம்மா பத்தாம் நாளில்

அம்: எட்டு மூன்று நாளைப் போரில் மட்டுமே
மடிந்தபேரை
வட்டமிடுங் கெருடனேறும் மாயவனே
சொல்லுமண்ணே!

ஸ்ரீகிரு: அஷ்டதிசை கீர்த்தி பெற்ற அரசன் கர்ணன்
ஈன்ற பாலன்
துஷ்ட விகர்ணராசன் துரந்திரன்
மடிந்தானம்மா

அம்மன்: ஈராறு நாளைப் போரில் இருந்து மடிந்தபேரை
கார்மேக நீலவண்ணக் காரணரே சொல்லு
மண்ணே!

ஸ்ரீகிரு: பார்புகழ் ஆனைசேனை படைமன்னர் ஒன்றாய்
கூடி
வேறோடு மடிந்ததளம் வேணதம்மா ரண
களத்தில்

அம்மன்: பத்து மூன்று நாளைப் போரில் படுகளத்தில்
பட்டபேரை

வெற்றிச் சங்கம் தன்னையேந்தும் விமலரே
சொல்லு மண்ணே!

ஸ்ரீகிரு: சுற்றிடும் யுகத்தினுள்ளே சூதாகவேதான்
மடிந்த
அத்திசூழ் உலகோர் மெச்சும் அபிமன்யு
மாண்டானம்மா

அம்மன்: ஈரேழு நாளைப்போரில் எவர்பட்டார்
சண்டையிலே
காரா தன்னைக் காத்த கரியமாலே சொல்லு
மண்ணே!

ஸ்ரீகிரு: சீரானை மார்பொருதும் செயவீமராசன் பெற்ற
பேரான கடோத்கஜன் தூராக மடிந்தானம்மா

அம்மன்: மூவைந்து நாளைப் போரில் முடிந்த மன்னர்
சொல்லுமையா

ஸ்ரீகிரு: தேர் ஐந்துடைய மனனர் செயவீரதீரனான
வீரமுள்ள
துரோணாச்சாரி பாரமாய் மடிந்தாரம்மா

அம்மன்: ஈரெட்டு நாளைப் போரில் இறந்த மன்னர்
சொல்லுமையா

ஸ்ரீகிரு: திசை எட்டும் கீர்த்திபெற்ற தீரதுஷ்டத்துய்மன்
பட்டான்

அம்மன்: பதினேழாம் நாளைப் போரில் பார் மன்னர்
பட்டபேரை

---

விமலன் - குற்றமற்றவன். அண்ணே - அண்ணு என்பதன் திரிபு (விளித்தல்) ஐயா - ஐயே! என்பது போல.

அத்தி சூழ் உலகோர்: அத்தி - யானை. அட்டதிக்கஜங்கள் யானைகளால் சூழப் பெற்று தாங்கப் பெறுவதாகிய உலகத்தில் உள்ளோர்.

சதிராக எந்தனுக்குச் சாற்றிடீர் எந்தன்
கோவே!

ஸ்ரீகிரு: சாற்றிடீரென்றுரைத்த தங்கையரே சொல்லக்
கேளும்
கீர்த்தி பெற்ற கர்ணராசன் கிளையுடன்
மடிந்தானம்மா!

அம்மன்: பதினெட்டாம் நாளைப் போரிலே தான்
பட்டமன்னர் சொல்லுமையா!

ஸ்ரீகிரு: கதிரொளி மகுடஞ்சூட்டும் கசடன்
துரியோதனனும்.
மகுடமுடி பூமியில் வீழ மரண பூமிதான்
வீழ்ந்தான்!

### அம்மன் விருத்தம்: 112

மரணமாய் பூமியில் வீழ்ந்த டன்னர்கள் மற்றுமுள்ளோர்
சரண மென்றடைந்த வேதர் சதுரங்க ஆனை சேனை
திரளத் தான் வந்து மூண்ட சிகரம் உள்ளோர்க் கெல்லாம்
அரனடி பாதம் போற்றும் அனுக்கிரகம் செய்யு மய்யா.

### வசனம்:

அகோ வாருங்களையா சுவாமி இந்த பார்த யுத்தத்திலே மடிந்த யுகாதிபதிகளுக்கும் சேனா சமுத் திரத்திற்கும் அந்தக் கயிலாச வாசனாகிய நீலகண்ட ருடைய பாதம் அடையும்படி ரக்ஷித்தருள வேண்டுமய்யா சுவாமி!

### ஸ்ரீ கிருஷ்ணர் விருத்தம்: 113

பாரதப் போரில் மாண்ட படை மன்னர் ஆனை சேனை
பேரணி உள்ள தெல்லாம் பெருகிய குருக்கள் மாரும்

வீரத்தால் மாண்டோர்க் கெல்லாம் விண்ணவர்
அறியத்தானே
சீருடன் அரனார் பாதம் சேர்ந்திட வரமே தந்தோம்

**வசனம்:**

அகோ வாரும் என் தங்கையாகிய மாது சிரோன் மணியே! உன் மனத்தின் படியே இந்த பதினெட்டு நாளைப் போரில் மாண்ட ராச ராசர்கள் சேனைப் பரிவாரங்கள் அத்தனையும் அந்த திருநீலகண்டனாகிய பரமேஸ்வரர் பாதம் அடையும்படி கிருபை செய்தோம் நீயும் விரித்த கூந்தல் முடித்துக் கொண்டுப் பட்டாபி ஷேகராய் சுகமே இருமம்மா என் தங்கையே!

**சபை விருத்தம்:**

மாந்தளிர் மெல்லியாள் மாது மங்கை திரௌபதியாள்
தானும்
கூந்தல் முடித்துக் கொண்டுக் குவலயம் தன்னையாளும்
வேந்தரெல்லோர்க்கும் அம்மன் மிகவுமே வரங்கள்
கொடுத்து
பூந்தளிர் மாலை மார்பன் பொன்னடி வணங்கி நின்றாள்

**வாழி விருத்தம்:**

வாழி வாழி நல்ல வாழி வாழி!
ஆதிமூல நல்ல வாழி!
அய்யன் ஐயர் பஞ்சபாண்டவர் வாழி அம்மன் வாழி!
காளியுடன் நடம் புரிந்த ஈசர் வாழி கானகத்திருந்து
வந்த ஐவர் வாழி!
வாகனத்தின் வாழும் காளி வாழி வாழி
அன்று அவிழ்ந்த கூந்தல் குழல் முடித்த அம்மன் வாழி!

தேவர் முனிவரும் வாழி புவிதனில் பிர்ம தேவர்
வாழி இந்த-
பாரதம் மொழிந்தோர் வாழி பார்த்தோர் வாழி - நல்ல
பாவலன் வையா புரி யெனும் சித்தர் வாழி வாழி!

**குருபாதமே துணை!**

— முற்றிற்று —

**காளி வருகிற காட்சி - இணைப்பு**

நாடகம் முற்றிலும் முடிவடைந்த பின்னர் தனியாக ஒன்று, இரண்டு என இலக்கமிட்ட இரண்டு ஏடுகள் (சுவடி) இணைக்கப் பெற்றுள்ளன. இவைகளில் உள்ள கையெழுத்து வேறுபாடாய் உள்ளது. இதில்:

**விருத்தம் :**

உலகமெல்லாம் புகழ் படைத்த சக்தி தானும்
உமையவளாம் அவதாரக் காளியாகி
நிலமை பெரும் பாண்டவர்கள் வனம் செல்காலம்
நேர் வாகை மரத்தில் வைத்த ஆயுதத்தை
நலமுடனே பதிமூன்று வருஷம் காத்து
நாடி எடுக்கும் வேளை சமயம் பார்த்து
குலமதனில் பழுதிலா அரவானை பலிதான் கொள்ள
குடிகொண்டாள் குருதிசிந்த கெடி கொண்டாளே!

**தரு :**

காளி வந்தாளே சபைதனில் காளி வந்து தோணினாளே
காளி வந்தாள் கபாலமேந்தி கிருபாலி நீலி
சூலமேந்தியே!
(காளி .....)

தில்லை நடம் புரி தில்லை காளியோ
தேவரும் புகழ்ந் தேத்தும் காளியோ
எல்லவரும் புகழ்ந் தேத்தும் காளியோ
ஈசனோ டெதிர் பேசுங் காளியோ!
(காளி......)

அருச்சுனா புரத் திருக்குங் காளியோ
அய்வர் ஆயுதம் காக்கும் காளியோ
ஒருத்தரையும் மதிக்காத காளி என்று
உடைமைக் கா ரனிடம் உதவு வேணெனும் காளியோ
(காளி......)

ஆரடா உன் பேரடா சொல்லக் கேளடா - எந்தன்
நேரடா கண்ணால் பாரடா மொழி கூறடா
நெழுப்பாரடா வழிதேடிக் கொள்ளடா!
(காளி......)

**வசனம்:**

அகோ வாரும் மானிடர்களே! பஞ்ச பாண்டவர்கள் ஐவரும் வனத்துக்குப் போய் வெகுநாளாச்சுது அவர்கள் ஆயுதங்களை என்னிடத்தில் வைத்துவிட்டுப் போனார் கள். இத்தனை நாளும் வந்திருக்கலாம். அவர்களுக்கு நல்லகாலம் பிறந்துவிட்டது. எனக்கு அவர்கள் வாக்கு பொன்னபடிக்கு தகுந்த பலி கொடுத்து ஆயுதங்களை எடுத்துக் கொள்ளச் சொல்லுங்கள் மானிடர்களே! என உள்ளது.

இப்பாடல் கூறும் வசனப் பகுதியின் மூலம் பாண்ட வர்கள் வனவாசமாகப் புறப்பட்டபோது தங்களிட

மிருந்த ஆயுதங்களை வாகை மரப் பொந்து ஒன்றில் வைத்துவிட்டு அதற்கு காவலாக இருக்கும்படி காளி தேவியை வேண்டிக்கொண்டு பதின்மூன்று ஆண்டுகள் கழித்துத் திரும்பவும் வந்து வாங்கிக் கொள்வதாகக் கூறிச் சென்றார்கள் எனவும் குறிப்பிட்ட காலம் கடந்தும் பாண்டவர்கள் வராத காரணத்தால் காளிதேவியானவள் தன்னெதிர்ப்பட்ட மானிடர்களைப் பார்த்து பாண்டவர்களிடம் போய் ஆயுதங்களை எடுத்துக் கொள்ளச் சொல்லும்படி சொல்வதாக அமைகிறது. மேலும் தனக்குரிய பலியையும் கொடுக்க வேண்டுமென காளி தேவி வேண்டுவதும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இது நாடக ஆசிரியரின் கற்பனைத் திறத்தைக் காட்டுகிறது.

**காளியிடம் ஆயுதங்கள் ஒப்படைத்த கதை:**

வில்லிபாரதத்தின் விராடபருவத்தின் நாடுகரந்துறைச் சருக்கத்தில் (8, 9, 10 பாடல்கள்)

> "விராடன் மாநகரி யெல்லை, புக்கு ஒருபான்மையான பூமியினிடை விரவா யாமள மறையால் யாவரும் பணிவான் எழுவயைகத் தாயரி லொருத்தி, சாமள வடிவோடு அங்கசுர் வாழ்வாள், சங்கு தண்டம் கையிற் றரிப்பாள், கோமள வள்ளிக் கொடிநிகர்க் காளி கோயிலின் முன்னர் ஓர் வன்னி நாமளவிடுதற் கரிய பல்கிளையான் நலம் பெறு பாதவ நண்ணா-தத்தம் படையும் கவசமும் அனைத்தும் தனித்தனி ஐவரும் தரித்த மெய்த்திறலுடைய யாவும் அத்தருவின் கோடரத் தொளித்து ஒரு விரகால் வைத்தனராகி யாவரும் உணராவகை யருமறைகளும் பயிற்றி, முத்தலை வடிவேற் காளியை வணங்கி முன்னினார் புரி தொழின் முற்றும்."

என்ற வரிகளின் மூலம் பாண்டவர்கள் தங்களின் படைக்கலன்களை ஒரு வன்னிமரப் பொந்தின் கண் வைத்து மறைத்துப் பின்னும் அது பிரிதெவர்

கண்ணுக்கும் தெரியாதிருக்க ஆயின மந்திரங்கள் சொல்லி அவ்விடத் திருந்த காளி தேவியையும் வணங்கிச் சென்றனர் என்பது தெளிவாகிறது. இங்கும் யாமளம் என்னும் நூல்பற்றிக் கூறப்பெறுகிறது. இது காளிதேவியின் வழிபாட்டிற்குரிய நெறிகளைக் கூறுவதெனவும் தெளிவாகிறது. நூல்வழிச்செய்தி இவ்வாறிருக்க, தனித்துக் கிடைத்துள்ளச் சுவடியில் பாண்டவர்கள் தங்கள் ஆயுதங்களை ஓர் வாகை மரத்தின்கண் ஒளித்து அவ்வாயுதங்களைத் தாங்கள் வரும் வரை யாரும் எடுத்துச் சென்றுவிடாவண்ணம் காவல் காத்து நிற்கும்படி காளியை வேண்டிச் சென்றனர் என வருகிறது.

## தனி

கந்தப்பா மயில் சொந்தப்பா சொலும்
இந்தப்பா முறையே கருதியே
இந்தப்பா மீது வந்தப்பா வரம் தந்தப்பா நிதியே-வர
முந்தப்பா மிக அந்தப்பா அரவிந்தப்பா தந்துணையே!

## தொகையறா

எமபாசம் எனை வந்து சூழ்ந்திடில் முருகனே
ஈராறு கரம் ஆறுமுகமொடு வேலுடனே எதிர்வாரும்.
சங்கப்பா கோவிலங்கப்பா தோணி முழங்கப்பா
நிதமேகவி
எங்கப்பா குரு சின்னப்பா சொலுமிங்கப்பா கணமே!
(என்ற ஒரு பகுதி அட்டவணையில் உள்ளது)

# 14. அரவான் களப்பலி: பாத்திரப் படைப்பு

மிகக் குறைவான அளவில் பாத்திரங்கள் படைக்கப் பெற்று அவலச்சுவை யெனும் சோகரசம் நாடக முற்றி லும் அமைந்திருக்கும்படி இயற்றப் பெற்றுள்ளது. குருக்கள், கட்டியக்காரன் - தருமர், வீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன், பாஞ்சாலி, அரவான், ஸ்ரீகிருஷ்ணன் ஆகிய ஒன்பது பாத்திரங்கள் மட்டுமே உள்ளனர், மேலும் பாண்டவர்கள் ஐவரிடத்தும் கிருஷ் ணனால் கேட்கப்படும் கேள்விகளும் அவ்வைவரும் கூறும் பதில்களும் ஒரே மாதிரியானவை, அதாவது போர் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இதற்கான களப்பலியாக அரவானைக் கொடுத்தால் வெற்றி நிச்சயம். தாங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதாக தனித்தனியே ஐவரி டத்தும் ஸ்ரீகிருஷ்ணனால் கேட்கப் பெறுகிறது. இவ் வைவரும் தனித்தனியாக கூறும் பதில்களும் ஒரே மாதிரி யானதேயாகும். பிள்ளையைக் கொன்று நாடாளத் தேவையில்லை. அதற்குப் பதிலாக நாங்கள் முன் போலவே காட்டிற்கே சென்றுவிடுகிறோம் என்பதாகும். எனவே நாடகத் துவக்கம் முதல் பாதிவரை இவ்வாறு தனித்தனிப் பாத்திரப் பிரவேசமும் ஸ்ரீகிருஷ்ணனுட னான வாதமுமாக கழிகிறது, பின்னர் பாஞ்சாலியின் பாத்திரப் பிரவேசம் ஆகிறது. இப்போதும் அதேகேள்வி அதே பதில்தான். அன்னையென்ற வகையில் பாஞ்சாலி வெளியிடும் சோகநிலை மிக அதிகமாக அளிக்கப் பெற்றுள்ளது. பின்னர் அரவான் பாத்திரப் பிரவேசம் ஸ்ரீகிருஷ்ணனுடன் பேசி தனது முழு சம்மதத்துடன் பலியாகப்போக விழைந்த பின் தனித்தனியே ஐந்து தந்தைகளிடத்தும் தாயாரிடத்தும் விடைப்பெற்று வருதல் என காட்சிகள் ஒரு குறிப்பிட்ட கருத்தையும் சுவை யையும் மையமகக் கொண்டு வெகு நீண்ட நேரம்

இயக்கப் பெறுகிறது. எனவே நாடக இயலுக்குரிய வேறு சுவைகள் இடம்பெற வாய்ப்பில்லாமல் உள்ளது. எனவே நாடகம் நடத்துபவர்கள் தனியான சிரிப்புக் காட்சியை உள்ளூர் நடிகர்களைக் கொண்டு மிகவும் சிறப்பாக காலத்திற்கேற்ற முறையில் நடத்திப் பார்வை யாளர்களைச் சிரிக்கச் செய்கின்றனர். இதுமிக அவசிய மானதாக உள்ளது.

கடைசியில் காளி தோன்றி அம்மனால் அளிக்கப் பெற்ற பலியை ஏற்றுக் கொள்வதாக நாடகம் நடத்த பெறுவதில் காட்டுகிறார்கள் ஆனால் நூ லி ல் அவ் வாறான காளியின் தோற்றமும் பாத்திரப் பிரவேசமும் இடம் பெறவில்லை.

## 14. கோணங்கி

நாடகத் துவக்கத்தில் கோணங்கி பாத்திரப் பிர வேசம் நடைபெறுகிறது. இது பாகவத மேளா நாடகங் களில் இடம் பெறும் ஒரு நிகழ்ச்சியாக உள்ளது. இந் நாடகத்தைக்காணும் போது இக்கோணங்கிப் பாத்திரப் பிரவேசம் பாகவத மேளாவினின்றும் எடுத்துக் கொள்ளப் பெற்றது எனக்கூறுவதைவிட இத்தமிழ் நாடகத் தினின்றும் ஆந்திர நடிகர்களும் நாடகம் படைத்தோரும் இப்பகுதியைத் தங்கள் நாடகத்திலும் இணைத்துக் கொண்டனர் என்றும் கூறும் வகையில் புராணக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தமிழில் திரு மாலின் அவதாரப் பெருமைகளைக் கூறும் படியான பாடல்கள் அமைக்கப் பெற்றிருப்பது மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

திருமால், ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் தன்னை அவ மதித்த சிசுபாலனைக் கொல்வதற்கு முனைந்த போது

அவனது நண்பனாகிய வக்கிரதந்தன் அல்லது தந்த வக்கிரன் என்பவன் திருமாலால் ஏவப்பட்ட சக்கராயுதத்தைத்தன்னுடைய பற்களில் கடித்துக் கொண்டான் எனவும். இனி இவ்வக்கிர தந்தனுடன் மற்போர் செய்து பயனில்லை. பற்களால் கடித்துப் பிடித்துக் கொள்ளப் பட்டிருக்கும் சக்கராயுதத்தை விடுவிக்க அவனைச்சிரிக்கச் செய்வதே சிறந்தது என எண்ணிய ஸ்ரீ கிருஷ்ணர் உடனே தனது உருவத்தை கோணங்கி எனும் ஒரு நகைப்பிற்கிடமான உருவமாக மாற்றிக் கொண்டு சிரிப்பை உண்டாக்கும் வகையில் ஆடத்துவங்கினார் எனவும், இதனைக்கண்ட வக்கிரதந்தன் தன்னை மறந்து சிரிக்க, பல்லிடுக்கில் சிக்கி இருந்த சக்காரயுதம் வெளிப் பட்டு அவனை வதைத்ததாகவும் கூறுவர். பாகவதத்தில் வக்கிரதந்தன் மற்போரில் கொல்லப்பட்டதாகத் தான் கூறப்பெற்றுள்ளது ஆயினும் நாயக்கர் காலத்தில் தான் இக்கோணங்கிக் கதை உருவாகி இருக்கக் கூடும் என ஆய்வின் மூலம் தெரிய வருகிறது. காஞ்சிபுரம் வரதாஜப் பெருமாள் கோயில் கோபுரச் சிற்பங்களிலும், ஸ்ரீ ரெங்கம் கோயிலில் மிக ஆபாசமான ஒரு கோணங்கியின் கருங்கற் கல்வெட்டு அமைப்பும், தஞ்சை அரண்மனை மராட்டியர் தர்பாரில் உள்ள தூண்களில் மேற்பகுதியில் அமைந்துள்ள சுதைச்சிற்பங்களும் இக்கூற்றை ஓரளவு உறுதிப் படுத்தியுள்ளன. தவிர ஹரிகதை சொல்லும் பலரும் தமது வைணவம் சார்ந்த கதைப்பகுதிகளில் இதனை உபகதையாகக் கூறுவர். ஆகவே இக்கோணங்கிப் பாத்திரப் படைப்பு இந்நாடக ஆசிரியரின் ஒரு சிறப்பு மிக்கப்படைப்பாக பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

---

சைவம் ஓங்கிய காலத்து நரஸிம்ம மூர்த்தியை விட சக்தி வாய்ந்த தெய்வம் என்பதாக சரபமூர்த்தி படைக்கப் பெற்றதை ஒப்பு நோக்குக.

# 16. மெலட்டூர்

திரு வையாபுரிக் கவிஞரால் இயற்றப்பெற்ற இந் நாடகம் திரௌபதியம்மன் கோவில் திருவிழாவின் ஒரு பகுதியாக மெலட்டூரை அடுத்த கோடுகிழி, கரம்பை, ஏர்வாடி, மெலட்டூர் ஆகிய நான்கு ஊர்களில் ஆண்டு தோறும் தவறாமல் நடத்தப்பெறுகிறது. சில சமயங்களில் ஓரிரு ஆண்டுகள் தடைப்பட்டாலும் பெரியோர்கள் முயற்சி செய்து தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

சுமார் 200 ஆண்டுகளாக இந்நாடகம் நடத்தப் பெறுவதாக இவ்வூர்களைச் சார்ந்தோர் கூறிய போதும் குறைந்த பட்சம் 150 ஆண்டுகளுக்கும் குறை வில்லாத அளவு முற்பட்டதாக இந்நாடகம் அமைந்து உள்ளது.

இந் நிலையில் மெலட்டூர் என்றாலே நாடகக் கலைஞர்களுக்கு நினைவில் தோன்றுவது பிராம்மண சமூகத்தினர் ஆண்டுதோறும் நடத்தி வரும் பாகவத மேளா நாடகங்கள் என்பது யாவரும் அறிந்ததே மெலட்டூர் பாகவத மேளா நாடகங்களில் இவர்களால் நடத்தப்பெறும் நாடகங்கள் வெங்கடராம சாஸ்த்திரி என்பவரால் இயற்றப் பட்டவையாகும். இவர் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். சங்கீத மும் மூர்த்திகளில் ஒருவரான திருவையாறு தியாகராஜ சுவாமிகளுக்கும் முற்பட்டவர் ஆகவே. இவரது நாடகத்தின் இசை கர்னாடக இசையின் பழமையை மேலும் சிறப்பிப்பதாகும். குறிப்பாக ஜதிகளும், ஜக்கனி தரு என்ற ஒருவகை தருவும் இசை அறிஞர்களால் விரும்பப் பெறுவதாகும்.

இதே முறையில் இந்த அ ர வ ா ன் களப்பலி நாடகத்தில் பாடல்களுக்குறிய இராகங்கள் மூலச் சுவடியில் குறிப்பிடாப்படா விட்டாலும் காலம் காலமாக இவர்கள் பா டி வ ரு வ தை த நேரில் கேட்டபோது, நாட்டை, தோடி, கல்யாணி, தேவகாந்தாரி, மோகனம் ஹரிகாம்போதி, ய து கு ல கா ம் போ தி, அடாணா, புன்னாகவராளி காவேரி முகாரி, கேதார கௌளம் மத்யமாவதி ஆகியவை முக்கியமாக பல இடங்களில் கையாளப் பெறுகின்றன. தாளவகையில் ஆதி, ரூபகம், அடதாளம், சாப்புதாளம் ஆகியவை பயன்படுத்தப் பெறுகின்றன. இவைகளுக் கேற்ப காலடிகளில் சலங்கை ஒலிக்கும் படி நடிகர்கள் ஆடுவதும், மேடையை முழுவது மாகப் பயன்படுத்தி நாற்புறமும் திரும்பி நின்று பேசியும் அபிநயம் செய்தும் நடிக்கும் போது மிகவும் சிறப்பாக உள்ளது.

## 17. இராகங்களும் தாளஜதிகளும்

1. திக்கு தக ததிங்கிண தோம்
   தக ஜொனு ததிங்கிண தோம்
2. தளாங்கு தக தொகி தகு ததிங்கிண தோம்
3. தித் தளாங்கு தகதிமி ததிங்கிண தோம்

என்ற வகையான ஜதிகளை தாளத்தோடுகூட அந்திய ஜதியாகவும் முகஜதியாகவும் பயன்படுத்து கின்றனர்.

தத்தோம் தகதோம் ஜதியையும் பயன் படுத்துகின்றனர்.

(பாடல் துவக்கத்தில் சொல்லப்படும் ஜதிக்கு முகஜதி எனவும் பாடல் முடிவுற்ற பின் காலடவுக்காக கூறப்படும்

முத்தாய்ப்பு ஜதிக்கு அந்தியஜதி எனவும் பெயர் - இது பாகவத மேளா நாட்டிய நாடகத்தில் பயன் படுத்தப் பெறுவது - தருவுக்கு இடையே கூட ஜதிகள் வருகின்றன தரு எண் 3, விநாயகர் - தரு எண் 6 - மோகினி எனும் நாட்டியப் பெண்கள் வருவது - தருமர் வருகிற தரு எண் 9 ஆகியவைகளைக் காண்க.)
(நகுலன் வருகிற தரு (21)ம் காண்க)

மெலட்டூரைச் சுற்றியுள்ள கிராமங்களாக இருப்ப தால் இவர்களும் இசைஞானமும் தாளஞானமும் நாட்டி யத்தில் ஓரளவு பயிற்சியும் உடையவர்களாக உள்ளனர்.

## 17-அ. நாடக மேடை

நாடகம் நடத்தப்படும் இடம் கோயிலின் முன்புற முள்ள திறந்தவெளி. கீற்றுப் பந்தலில் பலகை போடப் பட்டுள்ளது. இதில் பின்பாட்டுப் பாடுவோரும் பக்க வாத்தியம் வாசிப்போரும் அமர்ந்துகொண்டு பாடுகின்ற னர். சமதரையில் சுத்தம் செய்யப் பெற்ற இடத்தில் மூன்று புறமும் திறந்துள்ள பகுதியில் நடிகர்கள் ஆடு கின்றனர். அருகில் உள்ள கோயிலில் வேடமணிந்து கொண்டு முகத்தைத் துணியால் மூடிக்கொண்டபடி மேடைக்கருகில் வந்து முகத் திரையை நீக்கிவிட்டு நாடகம் நடத்தப்படுமிடத்திற்குச் செல்கின்றனர். ஒரு குறிப்பிட்ட வேடத்தை ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் செய் கின்றனர். அதாவது ஸ்ரீகிருஷ்ணர் வேடத்தை முன் பகுதியில் ஒருவர் ஏற்று நடித்தார் நாடகத்தின் பிற் பகுதியில் வேறொருவர் அப்பாத்திரத்தை ஏற்று நடித் தார். மேலும் இடைவேளையின்போது உள்ளூர் இளைஞர்களால் குறவன் குறத்தி சிரிப்பு நிகழ்ச்சி நடத்தப்பெற்றது. உடையலங்காரம் மற்றும் ஒப்பனைகள்

இருபதாம் நூற்றாண்டுக்கு ஏற்ற வகையில் அமைந்திருந்தது. பக்கவாத்தியமாக ஒரு ஹார் மோனியமும் டோலக்தபலாவும் பயன்படுத்தப்பெற்றன. அட்டவணை எனும் நாடக கைப்பிரதியை வைத்துக் கொண்டு ஒருவர் அவ்வப்போது பாடல் வரிகளைப் பாடுவோர்க்கு நினைவு படுத்திக் கொண்டிருந்தார். முன்திரையோ பக்கவாட்டுத் திரைகளோ ஏதும் பயன்படுத்தப் பெறுவதில்லை. தெருக் கூத்து நாடகத்தில் வழக்கமாகப் பயன்படுத்தப் படக் கூடிய வெள்ளைத் துணியை பாத்திரப் பிரவேசத்தின் போது முன்திரையாமப் பயன்படுத்தும் முறை கடைப் பிடிக்கப்பெறுகிறது இரவு சுமார் பத்து மணிக்கு துவங்கிய நாடகம் காலை எட்டு மணி வரை நீடித்து முடிவுறுகிறது.

# 18. கோயிலும் விழாக்களும்

**திரௌபதியம்மன் கோவில்:**

கிராம தேவதைகளின் கோயில்களை ஊரின் வெளிப் புறத்தே அமைப்பது போல் அல்லாது இத்திரௌபதி அம்மன் கோவில்கள் ஊரின் வாழ்புறத்தே அமைக்கப் பெறுகின்றன. பெரும்பாலும் தமிழகத்தில் உள்ள கோயில்கள் சுற்றுச்சுவர், கற்றளித் திருப்பணி போன்ற பெரிய அளவினதாக இல்லாது மிகவும் சிறிய கோயில் களாகவே அமைக்கப் பெற்றுள்ளன. சில இடங்களில் ஓடு வேய்ந்த சிறு வீடுபோலவும் அமைக்கப் பெற்றுள் ளன. பெருமளவில் சொத்துக்களை உடைய கோயில் களும் அதிகம் இல்லை. ஆக இந்த திரௌபதி அம்மன் வழிபாடு என்பது எளிய மக்களின் அன்றாட வழிபாட்டில் அமைந்த ஒன்றாக நாடுமுழுவதும் பரவியுள்ளது. இத் தெய்வத்தின் சிறப்பு வழிபாட்டிற்கு உகந்த நாள் திங்கட்

கிழமையாகும். ஆடு, மாடு, கோழி பலியிடுதல் போன்ற கொடுஞ் செயல் ஏதும் இத் தெய்வத்திற்கு ஏற்புடைய தன்று. கோயிலின் உட்புறத்தே தனித்த அம்மன் சிலையும் பஞ்சபாண்டவர்கள் சிலைகளும் கிருஷ்ணர் சிலைகளும் இருக்கும் உற்சவர் அம்மன் மட்டுமே வாகனம்-அன்னப்பறவை.

கோயில்களின் உட்புறத்தோ வெளிப்புறத்தோ, அரவானின் தலை என்பதாக ஒரு பெரிய உருவினதாக தலை சுதை வேலையால் செய்யப்பெற்றதாக வைக்கப் பெற்றிருப்பதைக் காணலாம். கோயிலின் முன்புறத்தே கதை மேடை என்பதாக நிரந்தரமாக அமைக்கப் பெற்ற் சுமார் நான்கு பேர் அமர்வதற்கேற்ற மேடை ஒன்று இருக்கக் காணலாம். சில ஊர்களில் தற்காலிகமாக பலகைகளைக்கொண்டு அவ்வப்போது மேடை அமைத்து கொள்கின்றனர்.

தீமிதி உற்சவம் என்பது இவ் வழிபாட்டின் உயர்வான ஒன்றாகும். தனியான ஒருநாள் விழாவாக இதனைச் செய்வதும் உண்டு. பாரதக் கதையை பல நாட்கள் கூறச் செய்து கடைசி நாள் விழா நிகழ்ச்சியாகவும் இதனைச் செய்வர்.

## 18-ஆ பாரதக் கதை சொல்லுதல்

திரௌபதியம்மன் கோயில்களில் ஆண்டுக்கொரு முறையோ ஓரிரண்டாண்டுகள் இடைவெளியிட்டோ, பாரதக் கதை பாட செய்யும் நிகழ்ச்சி நடத்தப் பெறுகிறது. ஒரு குறிப்பிட்ட நாளில் இத் திரௌபதியம்மன் வழிபாட்டில் ஈடுபாடுடையோர் கூடி, (நாட்டாண்மை அல்லது விழாக் குழுவினர்) விழா நடத்துவது குறித்து

திட்டமிட்டு, ஒருகுறிப்பிட்ட திங்கட்கிழமையன்று, காப்பு கட்டி கொடியேற்றுகின்றனர்.

(இந்த கொடி மஞ்சள் நிறத்துணியில் அனுமானின் உருவம் காவியால் வரையப் பெற்றிருக்கும். இவ்வாறு கொடியேற்றப்பட்ட பின் வெளியூர் சென்றாலும் கூட இரவு தாங்காது இவ்வூர் மக்கள் வீடு திரும்பிவிடுவர் என்பது மரபாகும்.)

பின்னர் நாள் தோறும் இரவில் சுமார் ஒன்பது மணி முதல் ஒருமணி வரை மகாபாரதக் கதையை தகுந்த இசை விரிவுரையாளர்களைக் கொண்டு சொல்லச் செய்கின்றனர். இது அந்தந்த ஊரின் பொருளாதார வசதிக்கேற்ப ஒரு வாரமுதல் மூன்று மாதம் வரை கூட நடத்தப் பெறுவது உண்டு.

---

கும்பகோணத்தை அடுத்த கடிச்சம்பாடி எனும் கிராமத்தைச் சேர்ந்த G. ராமச்சந்திர பாரதி என்பவர் - காஞ்சி காம கோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரியாரால் நடத்தப் பெற்ற மகாபாரதம் சம்பந்தமான 'வித்வத் சதசில்' ஆறு ஆண்டுகள் தொடர்ந்து கலந்து கொண்டவர். தஞ்சை மாவட்டம் பட்டீஸ்வரம் திருவாளர்கள் ரெங்கையா மாவெட்டியார், வைரக்கண்ணு மாவெட்டியார் ஆகியோரின் சிஷ்யர். காஞ்சிப் பெரியவரால் பாரதி பட்டம் அளிககப் பெற்றவரான திரு. ராமச்சந்திர பாரதியவர்களின் நிகழ்ச்சிகள் சென்னைத் தொலைக் காட்சியிலும் திருச்சி வானொலி நிலையத்திலும் பல முறை ஒளி, ஒலி பரப்புகள் ஆகியுள்ளன. பெரும் புலவர்களும் வியக்கும் வண்ணம் மட்டுமில்லாது பாமரர்களும் ரசிக்கும்படி எளிமையாகக் கதையைக் கூறவல்லவர் - வில்லியை முற்றுமாக மனப் பாடமாக உடையவர் இங்கு கூறப் பெற்றுள்ள செய்திகளில் பல இவர் மூலம் அறிந்து அளிக்கப் பெறுகிறது.

# 18-இ பாரதக் கதை சொல்லும் முறை

தமிழ் நாட்டில் இந்த பாரதக் கதையை இசையுடன் கூட உரையாடலோடு நயம் படக் கூறவல்லவர் நூற்றுக் கணக்கில் உள்ளனர்.

இவர்கள் ஏதேனும் ஒரு குருவினிடத்திருந்துப் பின் பாட்டுக் காரராகச் சேர்ந்து நன்கு பல ஆண்டுகள் பயிற்சி பெற்று, பாரதம் சார்ந்த கதைகளை சிறப்பாக அறிந்து கொள்வதோடு நயம்படச் சொல்லும் முறைகளையும் கற்றுக் கொள்வதோடு, இசையிலும் ஓரளவு பயிற்சி உடையவர்களாக உள்ளனர். கற்பனை வளமிக்க பாரதம் சார்ந்த பலகதைகளையும் இவர்கள் அறிந்திருப்பர்.

இப்பாரதக் கதையை கூறும்போது இடை இடையே பாடுவதற்குரிய சில குறிப்பிட்ட பாடல்களும் இவர்களிடத்தில் உள்ளன. (உதாரணமாக, கண்ணனை வேண்ட வேண்டும் போது ''காக்க நீ வருவாயே கருடனேறி காக்க நீ வருவாயே'' என்பது போன்றும் போர்க் காட்சியை விவரிக்கும்போது ''அந்த ரண களத்திலே, போர்க்களத்திலே, சமர்க்களத்திலே, அமர்க்களத்திலே. ரண ரங்க குருக்ஷேத்திரத்திலே, யானையோட யானை எதிர்க்குதாம், அங்கே குதிரையோட குதிரை எதிர்க்குதாம்'' என்பன போன்ற பாடல்களைக் கூறலாம்) திரௌபதியம்மன் கோயில் அமைந்த ஊர் மக்களின் பெரும்பாலோர்க்கும் இப்பாடல்களை ஆண்டுதோறும் கேட்கின்ற காரணத்தால் மனதில் பதிந்திருக்கும். மேலும் கதையைச் சாராத துண்டுக் கதைகளாக நகைச் சுவைக் கதைகள் சிலவும் இப்பாரதக் கதை கூறுவோர் வசம் உண்டு (தவக்களைக் கதை, பாகற்காய் கதை, மாமியார் மருமகள் கதை, போன்றவைகள்.)

மூலக்கதையைக் கூறும்போது கேட்போர் உற்சாகம் பெற வேண்டி தேவையான இடங்களில் இத்துண்டுக் கதைகளைக் கூறிக்கொள்வர் சில சமயங்களில் 'நேயர் விருப்பமாகக்' கூட இதனைக் கூறுவர்.

இப்பாரதக் கதையைக் கூறும் அனைவரும் தங்களின் கதைக்கு ஆதாரமாக வில்லிபுத்தூராழ்வாரின் மகாபாரதத்தையே பயன்படுத்துகின்றனர். கதைமேடையில் புத்தகம் தாங்கியில் இதனை வைத்துக்கொண்டே தான் கதையைக் கூறுவர். வில்லிபாரதப் பாடல்களை இசையுடன் கூட முதலில் கூறிப் பின் பொருள் கூறுவர். துணைக்கு "ஆமாம்" "ஆஹா" "அப்படியா", என்பது போன்று கூறிக்கொண்டு ஒருவர் கதை சொல்வோரின் எதிரில் மேடையில், அமர்ந்திருப்பார். இவரைப் பின் பாட்டுக்காரர் எனவும், எதிர் பாட்டுக்காரர் எனவும் கூறுவர். இவரும் கதைக்கேற்ற வகையில், கதையின் போக்கை வளர்த்தும் உரையாடவும், கதையைத் திருப்பிச் சொல்லவும், இடையே தனிப்பாடல்கள் சில பாடவும் வல்லவராக இருப்பார். இவ்விருவரையும் தவிர பம்பைக்காரர் என ஒருவர் இக்குழுவில் உண்டு (இவர் பம்பை வாசிப்பவர். இந்த பம்பை என்பது தோற் கருவியை வலப்புறம் கைவிரல்களாலும் இடப்புறம் நீண்டு சற்று முனை வளைந்த பிரம்புக் குச்சியாலும் வாசிக்கும் ஒருவகைத்தோல் வாத்தியம். மேலே உள்ள உருளையான தோல் வாத்தியம் உலோகத்திலும் கீழே உள்ளது மரத்தினாலும் செய்யப்பட்டிருக்கும். மூடித் தோல்கள் நூல்கயிற்றினால் முடிந்து இறுக்கப் பெற்றிருக்கும். நையாண்டி மேளத்திலும் இதனைப் பயன் படுத்துவர் உருமி என்பதற்கும் வேறுபட்ட ஒரு கருவி இதாகும்.) பாடல்கள் பாடப் பெறும்போது பம்பையை வாசித்தப்படி பாட்டு பாடுவார். சிலதேவையான சமயங்களில் உரையாடலிலும் நகைச்சுவையிலும் கலந்து

கொள்ளுவார். ஆக இப்பாரதக் கதை சொல்லும் குழு மூவர் அடங்கிய ஒன்றாகும். மோகனமும் முகாரியும் புன்னாகவராளியும் இவர்கள் பெருமளவில் பயன் படுத்தும் இராகங்களாகும்.

ஒவ்வொரு நாளும் கதை துவக்கப்படுவதற்கு ஒரு மணி நேரம் முன்னதாக இப்பம்பையை சற்று நேரம் வாசித்து ஒலியெழுப்புவதன் மூலம் அன்றைதினம் கதை சொல்லும் நிகழ்ச்சி உண்டு என உறுதி செய்யப்படுகிறது; பாரதக் கதையைக் கூறிக் கொண்டிருக்கும் போது கதைக்குழுவினருக்கு கதையைக் கேட்க வந்தோர், பணமாகவோ, பால், பழம் ஆகியனவாகவோ அன்பளிப்பு அளிப்பர். இவர்களை வாழ்த்தும் வகையில் ''இந்த காசு இடும் கைகளுக்கு கணத்தவரம் நீ கொடம்மா - அவர்களை வேணுமென்று காருமம்மா வெண்ணெயுண் டோன் தங்கையரே'' என்றபடி வாழ்த்துவர். பாரதக் கதையை சொல்லத்துவக்கும் நாளிலேயே இத்தனை நாட்கள் கதை நடத்துவது எனத்தீர்மானித்துக் கொண்டு விடுவதால் அளிக்கப்பட்ட கால அவகாசத்திற்குத் தகுந்த வாறு கதையை சுருக்கியோ நீட்டியோ கூறிவருவர். இக்கதை நிகழ்ச்சியில் கிருஷ்ணன் பிறப்பு, திரௌபதி கல்யாணம், கர்ண மோட்சம், அர்ச்சுனன் சுபத்ரா கல்யாணம் கிருஷ்ணன் தூது ஆகியவை விசேஷமான வைகளாகும். திரௌபதி கல்யாண கதையை ஒட்டி கோயிலில் மேளதாளத்துடன் சீர்வரிசை எடுத்து அம்பாள் திருமாங்கல்யம் சூட்டுதல் ஆகிய நிகழ்ச்சியை செய்வர். மேலும் ஊரில் ஒருசிலர் இன்னின்ன கதை நிகழ்ச்சியை தங்கள் செலவுப் பெறுப்பில் நடத்துவது எனவும் வழக்கம் கொண்டிருப்பர். ஆக காலம் மற்றும் பொருள் வசதி ஆகிய வற்றிற்கேற்ப எத்தனை நாள் கதை சொல்வது என தீர்மானிக்கப்படுகிறது.

# 18-ஈ. திருவிழா

பாரதக் கதையின் முடிவில் ஐந்து நாட்கள் திருவிழா நடத்தப் பெறுகிறது. திரௌபதியம்மன் கோவில் உள்ள அனைத்து இடங்களிலும் தீ மிதி திருவிழா என்பது நடத்தப் பெறுகிறது. இதனை ஒட்டி ஐந்து நாட்கள் விழாவாக, குறவஞ்சி, மாடுபிடி சண்டை, அர்ச்சுனன் தவசு, அரவான் களப்பலி, சக்கர ஆரக்கோட்டை பிடித்தல், கூந்தல் முடிதல் ஆகிய நிகழ்ச்சிகள் நிகழ்த்தப் பெறுகின்றன.

சில ஊர்களில் இவ்விழாக்களை கதை சொல்லும் போது எந்த எந்த கதைப் பகுதியில் எந்நாளில் இவ்விழா சார்ந்த கதை சொல்லப் பெறுகிறதோ அன்றைய தினமே இவ்விழாவையும் நடத்திவிடும் வழக்கம் உண்டு. மேலும் இவ்வைந்து நாள் விழா தவிர பகாசூரன் கதை - நச்சுப் பொய்கைவிழா, ஆகியனவும் நடத்துவது உண்டு. (நச்சுப்பொய் கையில் நீர் அருந்திய பாண்டவர்கள் விஷத்தின் காரணமாக மயக்கமுற்று மரணமடையும் நிலைக்கு ஆளாகியது. பின்னர் பூதத்திற்கும் தருமருக் கும் நடந்த வாக்குவாதம் - நால்வரும் உயிர் பெற்றது ஆகியவை ஆரணிய பருவம் - நச்சுப் பொய்கைச் சருக்கம் 69பாடல்கள் உள்ளன) நிகழ்ச்சிகளை - திருத்துறைப் பூண்டிக்கருகில் உள்ள ஒரு கிராமத்திலும் வேறுசில ஊர் களிலும் நடத்துகின்றனர்.

# 18-உ. குறவஞ்சி

விராட பருவத்து கதையின் படி. திரௌபதி குறத்தி யாக ஆயசெயலைக் குறிக்கும் விழா. கதை சொல்பவர் தம் குழுவினரில் ஒருவரையோ வேறு வெளியார்

ஏவரேனும் ஒருவரையோ துணையாகக் கொண்டு குறத்தி வேடமணிந்தபடி இதற்குரிய பாடல்களைப் பாடியவாறு ஊரில் உள்ள வீடுகள் தோறும் சென்று வருவார் அப்போது குறத்தியின் கூடையில் அரிசியிடுவர் இதனை ஊரின் அளவிற்கேற்ப இரண்டுமூன்று தினங்கள் கூட நடத்துவர். அரிசி மற்றும் பணவசூலையும் பொறுத்து இதன் நாள் நீட்டிப்பு அமையும்.

இக்குறவஞ்சி நிகழ்ச்சியை முழுஇரவுக்குரிய நாடகமாகவும் நடத்துவது உண்டு. இதற்கான பாடல்கள் வசனங்கள் யாவும் கதை சொல்பவரைப் பொறுத்து அமைக்கப் பெற்றிருக்கும் ஆக இந்நிகழ்ச்சியே தீமிதி விழாவின் தொடக்கமாகும்.

## 18-ஊ. மாடு பிடி சண்டை

இதுவும் விராட பருவத்து நிறை மீட்சிச் சருக்கத்தை அடிப்படையாகக் கொண்ட விழாவாகும். இதில் மாலை வேளையில் காவடிபோல் அமைக்கப் பெற்று இருபுறமும் உரி உடைய கம்பை தோளில் சுமந்தபடி உடலில் கருமை பூசிய ஒருவர் தாரை தப்பட்டை எனும் வாத்தியங்கள் (பறை) முழங்க வீதிகளில் வருவார். இவ்வுரியில் ஊர்ச் சிறுவர்கள் பழய உடைந்த மட்பாண்டங்களை வைப்பர் அதனை அவ்வேடமணிந்தவர் தரையில் அடித்து உடைத்தப்படி செல்வார். மற்றும் ஒருவர் தலையை முக்காடிட்டுக்கொண்டு கையில் ஒரு கவட்டைக் குச்சியும் தண்ணீர் சொம்பு ஒன்றும் எடுத்துக்கொண்டு செல்வார். வழியில் போவோர் வருவோர் மீது தண்ணீரை ஊற்றி கையில் உள்ள கவட்டைக் குச்சியை கழுத்தில் மாட்டி இழுப்பார். இவ்வாறு இழுபட்டவர் ஏதும் காசு கொடும்பார். பின்னர்

அவரை விடுத்து வேறொருவரை முன்போலச் செய்வார். ஆயினும் எவரும் இந்நிகழ்ச்சியில் கோபம் கொள்வது இல்லை. இவ்வாறு மாலையில் நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு கோயில்வந்து சேர்வர்.

## 18-எ. அருச்சுனன் தபசு

இது அர்ச்சுனன் சிவனை வேண்டி தவமிருந்து பாசு பதாஸ்திரத்தைப் பெற்ற நிகழ்ச்சியை குறிப்பது: வனவாசப் பகுதியில் வருவது. இந்நிகழ்ச்சியின்போது பிற்பகுதியில் அர்ச்சுனனாக வேடமணிந்து ஒருவர் கையில் வில் அம்பு ஆகியவற்றுடனும் வேறு ஒருவர் உடலெல்லாம் வேப்பிலையை சுற்றிக் கட்டிக்கொண்டு கையில் உலக்கை ஒன்றை ஆயுதமாகக் கொண்டும் மூன்றாமவர் ஒருவர் இடும்பி என்னும் பெண்ணுருவாக வேடமணிந்தும் ஊர்வலமாக தாரை, தப்பட்டை, பறை ஒலிமுழங்க வருவர். பின்னர் கோயிலுக்கருகில் ஒரு உயர்ந்த கம்பம், நாற்புறமும் கயிற்றால் இழுத்துக் கட்டப் பெற்றதாகவும் கம்பத்தின் உச்சிப் பகுதியில் உட்காருவதற்கு வசதியாக ஒரு பலகையும், ஏறுதற்கு ஏற்றபடி கயற்றினால் பிரியாக சுற்றப்பட்டதுமான அமைப்பில் நிறுத்தப்பட்டிருக்கும் இடத்திற்கு வந்து கூடுவர். இப்போது கதை சொல்லுபவர் அர்ச்சுனன் தபசுக்குரிய கதையைக் கூறுவார்.

### அர்ச்சுனன் தபசின் போது கூறப்படும் கதை
(நூல் வழி ஆதாரம் அற்றச் செவிவழிக் கதை)

அர்ச்சுனன் தவம் செய்ய தேர்ந்தெடுத்த இடத்திற்கு அருகில் பேரண்டன், பேரண்டச்சி என ஒரு அரக்கத் தம்பதியர் இருந்தனர். அதில் பேரண்டச்சி அர்ச்சுனன் மேல் மோகம் கொண்டு அவனை தன்மன விருப்பத்தை

பூர்த்தி செய்யும்படி வேண்டினாள் ஆனால் அர்ச்சுனன் மறுத்து விடுகிறான். உடனே பேரண்டச்சி தன் கணவனாகிய பேரண்டனிடம் அர்ச்சுனன் தன்னைப் பலவந்தப்படுத்தியதாக பொய் கூற கோபம் கொண்ட பேரண்டன் அர்ச்சுனனுடன் சண்டையிடத் தொடங்கினான் சண்டையில் பேரண்டன் மாண்டுவிட உண்மையைக் கூறி ஒப்பாரி வைத்து பேரண்டச்சி அழத் தொடங்கினாள். இதனைக் கேட்ட வானுலக சப்த கன்னியர்கள் வந்து இனியும் இதுபோன்ற அபவாதங்களை சத்திய புருஷர்கள் மீது கூற வேண்டாம் என அறிவுரை கூறி இறந்துவிட்ட பேரண்டனையும் உயிர்ப்பித்துக் கொடுத்தனர். இக் கதையை உணர்ச்சியுடன் கூட கூட்டத்தினருக்கு இசைநயம் கலந்து கதை கூறுபவர் கூறுவார்.

இதன் பிறகு அர்ச்சுனனாக வேடமனித்தவர் தம் மடியில் எலும்மிச்சம் பழம், மஞ்சள், அரளி இலைகள் ஆகியவைகளைப் போதுமான அளவு கட்டிக்கொண்டு, தயாரித்து நிறுத்தப் பெற்றிருக்கும் கம்பத்தின் உச்சிக்கு ஏறி அங்கு அமைக்கப்பெற்றிருக்கும் பலகையில் அமர்ந்து கொள்வார், பின்னர் கதை சொல்பவர் அர்ச்சுனன் தவம் செய்த கதையையும் சிவன் நேரில் தோன்றி பாசுபதாஸ்திரம் கொடுத்த கதையும் கூறுவார். பின்னர் அந்நடு கம்பத்தைச் சுற்றிக் கம்பம் தீப்பிடித்திடாதவாறு சிறிதளவு வைக்கோலையிட்டு தீயிடுவர். இதன் பின்னர் கம்பத்தின் உச்சியில் அமர்ந்திருக்கும் அர்ச்சுனன் வேடமணிந்தவர் ஏற்கனவே தம்முடன் கொண்டு சென்றிருந்த எலுமிச்சம் பழம், மஞ்சள், பூ ஆகியவைகளைக் கீழே கூடியிருக்கும் மக்களை நோக்கி வீசுவார். இதனை விழாக் காண வந்த மக்கள் அரிய பிரசாதமாகக் கருதி எடுத்துச் செல்வர் பின்னர் அம்மரத்தின் உச்சியினின்றும் கீழிரங்கி அர்ச்சுனர் வேடமணிந்தவர் வந்து விடுவார்.

இவ்வாறு இந்த அர்ச்சுனன் தபசு என்பது விழாவில் ஒரு முக்கியமான இடத்தைப் பெறுவதோடு பெருங் கூட்டத்தார்க்கு தீமிதிக்கான விளம்பரமாகவும் ஆகி விடுகிறது.

## 18-ஏ. அரவான் களப்பலி

கோயிலுக்கருகில், திறந்த வெளியில், தரையில், மண்ணால் மிகப் பெரிய அளவில் அரவான் படுத் திருப்பது போன்று ஒரு உருவத்தை அமைத்து, அதன் கழுத்துப் பகுதியில் ஒரு சிறு குழி செய்து அதில் ஒரு மட்பாண்டம் வைத்து அதில் மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்து தயாரிக்கப் பெற்ற சிவந்த நீரையிட்டுப் பின்னர் ஒரு வெண்மையான அல்லது மஞ்சள் நிறமான துணி யால் மூடிவிடுவர். இம் மண்ணுருவம் அரவானாகக் கருதப்படுவதால் கண், காது, மீசை ஆகியவை அதற் கேற்ற முறைப்படி அழகாக அமைக்கப் பெற்றிருக்கும். மாலையில் சுமார் ஏழு மணிக்கு கதை சொல்லுபவர் இவ்விழாக் காணவந்த மக்களுக்குத் தம் குழுவினரின் துணையுடன் அரவான் களப்பலிக் கதையைச் சுருக்க மாகக் கூறுவார்.

இங்கு கோயிலில் திரௌபதி வேடமணிந்து ஒருவர் மஞ்சள் நிற உடையில் இருக்க அவர் வந்து இவ்வர வானின் உருவுக்கருகில் அரவான் மாளப் போவதனை எண்ணி வேதனையுடன் அழும் நிகழ்ச்சி ஒன்றைச் செய்வார். பின்னர் கோயிலுக்கருகில் காளி வேடம் அணிந்த ஒருவர் முகம் சிவப்பு வண்ணம் தீட்டப் பெற்றும், உடலில் செந்நிற ஆடை அணிந்தும், கையில் கம்பிகளில் அமைக்கப் பெற்ற ஏழெட்டு தீப்பந்தங் களுடனும் மிகவும் பயங்கரமான தோற்றத்துடன் வந்து

கையில் இருக்கும் நீண்ட வாளால் அரவானின் கழுத்தை வெட்டுவதுபோல் நிகழ்த்துவார். இப்போது கழுத்துப் பகுதியில் உள்ள செந்நீரை மூடியுள்ள துணி நீக்கப் பெறுகிறது. கூடியுள்ள மக்கள் அரவானின் இரத்தமெனக்கருதி இச் செந்நீரைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொள்கின்றனர். இதன் மூலம் தாங்கள் வெற்றி யுடன் கூடிய வாழ்க்கையைப் பெறுவோம் என நம்பிக்கை கொள்கின்றனர்.

பின்னர் காளிதேவி வேடமணிந்தவர் அவ்விழாக் களம் விட்டுச் சென்றுவிட, முன்பே அவ்விடத்தில் இருந்த திரௌபதி வேடமணிந்தவர் தமது அருமை மகனான அரவான் இறந்து விட்ட துக்கத்தின் காரணமாக அழுது துடித்துப் (மாரடித்தல் ஒப்பாரி வைத்துப்பாடல்) புலம்பும் காட்சி நிகழ்த்தப் பெறுகிறது பின்னர் காளிதேவி திரௌபதிக்கு வரம் கொடுத்த செய்தியும் அவ்வரத்தின் படி அரவான் எட்டாம் நாட்போரில் கலந்து கொண்ட செய்தியும் பாரதக்கதை சொல்பவரால் கூறப்பெற்று அன்றய நிகழ்ச்சி முடிவுக்கு கொண்டு வரப்பெறுகிறது.

பெரும்பாலான ஊர்களில் இந்த அளவே இவ்வர வான் களப்பலி நிகழ்ச்சியாய் இருக்க சில ஊர்களில் மட்டுமே இந்நிகழ்ச்சி முழுஇரவு நேர நாடகமாக நடத்தப் பெறுகிறது.

## 18-ஐ. சக்கர ஆரக்கோட்டை பிடிக்கும் விழா :-

பாரத நூல்களில் இல்லாத ஒரு கற்பனைக் கதையை அடிப்படையாகக் கொண்டது இவ்விழா. இதன் கதையை முதலில் கவனிப்போம்:- தருமனின் தங்கையாகிய சங்கா மிர்தம் என்பவளை வீரபத்திரன் என்பவனுக்கு மணம்

செய்து கொடுத்து இவர்கள் வசிக்க ஒரு விபூதிக் கோட்டை யையும் கொடுத்தார்கள் பாண்டவர்கள். இக்கோட்யைக் காவல் புரிந்துவந்த ஒரு குதிரை வீரனுக்கும், துரியோதனன் படையைச் சேர்ந்த ஒரு வீரனுக்கும் சண்டை ஏற்பட்டு விட்டது. இதில் வெற்றி பெற்ற சக்கர ஆரக்கோட்டைத் தலைவனாகிய வீரபத்திரனின் குதிரை வீரன் துரியோதனின் குதிரை வீரனை அவமானப்படுத்தி அனுப்பியதோடு குதிரையையும் கால் வால் ஆகிய வைகளையும் வெட்டி அனுப்பி விட்டான். இதனை அறிந்த துரியோதனன் படையுடன் வந்து வீரபத் திரனுடன் போர் செய்யத் தொடங்கினான்.

இப்போரின் போது கோட்டையைக் பிடிக்க வேண்டி நான்கு திசைக் கோட்டைக் காவலர்களையும் எதிர்க் கிறான். (இவற்றில் வடக்கு வாசலின் காவல் பொறுப்பை காளி தேவி ஏற்றிருப்பது போல் கதையை அமைத்துக் கொண்டு காளியுடன் துரியோதனின் படைகள் போர் செய்வது போன்ற ஒரு சிறப்பான நிகழ்ச்சியை தஞ்சாவூர் கீழவாசல் திரௌபதியம்மன் கோயில் திருவிழாவில் நிகழ்த்தப் பெறுவது வேறு ஊர்களில் இல்லாத ஒரு தனிச் சிறப்புடையதாகும்) பின்னர் வீரபத்திரனின் மனைவியாகிய சங்காமிர்தம் என்பாள் தன் அண்ணன் மார்களின் அனுமதியில்லாமல் துரியோதனனுடன் போர் செய்ய வேண்டாம் எனத் தன் கணவனைத் தடுத்துவிடும் காரணத்தால் துரியோதனன் இக்கோட்டையை கைப் பற்றி விடுகிறான்.

இச்செய்தியைக் கேள்விப்பட்ட பாண்டவர்கள் கிருஷ்ணனின் துணையுடன் படை கொண்டுவந்து இவ் விபூதிக்கோட்டையை மீண்டும் கைப்பற்றி வீரபத்திர னிடம் ஒப்படைக்கின்றனர். இதுவே எல்லாக் கோயில் களிலும் இச்சக்கர ஆரக்கோட்டையின் போது கூறப்

பெறும் கதையாகும். மாவட்டத்திற்கு மாவட்டமும், கதை சொல்பவரின் குருபாரம் பரியம் ஆகியவை அடிப்படை யிலும் இக்கதையில் மாற்றம் ஏதும் இருக்கலாம் ஆக இக்கதைக்கான நூல் ஆதாரம் ஏதும் கிடையாது.

இவ்விதமான இந்நான்கு விழாக்கள் அன்னியில் கும்ப கோணம் அம்மன் கோவில் தெரு முத்தையாப் பிள்ளை மண்டபத்தில் நடத்தப்பெறும் திரௌபதியம்மன் கோயில் விழாவில் பகாசூரன் கதையையும் விழாவாக நடத்து கின்றனர்.

## 18-ஓ. பகாசூரன் விழா

குறிப்பிட்ட விழா நாளன்று ஊர் எல்லைப் புறத்தே அமைந்த ஒரு பெரிய மரத்தடியில் பகாசூரனைப் போல் வேடமணிந்த ஒருவரை இருக்கச் செய்துவிட்டு கோயி லிலிருந்து ஒரு இரட்டை மாட்டு வண்டியில் நிறைய சாப்பாடு தயார் செய்துகொண்டு அவ்வண்டியை வீமன் வேடமணிந்த ஒருவர் ஓட்டிச் செல்வதாக காட்சியை நடத்துகின்றனர். பின்னர் வண்டி ஊர் எல்லை மரத் தடியை அடைந்ததும் இங்கு வீமனுக்கும் பகாசூரனுக் கும் சண்டை நடப்பதான காட்சி நடத்தப்பெறுகிறது. இப்போரில் பகாசூரன் இறந்து விடுவதோடு அவ்வண்டி யில் கொண்டு வந்த உணவுப் பொருட்களை பீமன் வேடமணிந்தவர் சிறிதளவு சாப்பிட மீதமுள்ளதை விழாக் காணவந்தோர் பிரசாதமாகக் கொண்டு அவ் விடத்திலேயே சாப்பிட்டுவிட்டு ஊர் திரும்புகின்றனர்.

திரு. ந. முத்துசாமி அவர்கள் தமது 'அன்று பூட்டிய பூண்டி' எனும் நூலில் புரிசை எனும் ஊரில் நடத்தப்பெறும் பகாசூரன் விழா பற்றி விரிவாகக் கூறுகிறார்.

# 18-ஓ. கூந்தல் முடிதல்

பாரதக் கதை முற்றும் முடிவுக்கு வந்த நிலையில், போர் முடிந்து துரியோதனனும் மாண்ட பின்னர் திரௌபதி தன்முன் கூறிய வஞ்சின வார்த்தைகளின்படி அன்றவிழ்த்த கூந்தலை முடிக்கும் நிகழ்ச்சி இது.

இதன்படி, பாரதக் கதை கூறுபவர், பாஞ்சாலி கூந்தல் முடிக்கும் வரலாற்றைக்கூறிவர, பாஞ்சாலி வேடமனிந்த ஒருவர் முறைப்படி சீப்பு எண்ணெய் ஆகிய வைகளைக் கொண்டு கூந்தலை வாரி முடிப்பதாக அமையும் இக்காட்சியுடன் காலை நிகழ்ச்சி முடிவுக்கு வருகிறது.

## தீமிதி விழா:

திரௌபதி அம்மன் கோயில்கள் அமைந்த ஊர் களில் நடைபெறும் ஒரு பெரிய விழாவாக இதனைக் கூறலாம். தீயில் இறங்குவதாக அம்மனின் வழிபாடு டையோர் வேண்டிக் கொள்வர்.

கோயிலின் முன்புறத்தே அமைந்த திறந்தவெளியில் சுமார் ஆறுமுதல் எட்டடி வரையிலுமான அகலமுடைய தாகவும் சுமார் இருபதடி வரையிலுமான நீளமுடைய தானதும் இரண்டடி ஆழத்திற்குக் குறையாத ஒரு நீண்ட குழியை வெட்டி காலை முதலே இதில் பல வகையரன மரங்களையுடைய விறகுகளையிட்டு சுமார் நான்கு மணியளவில் தீயிட்டு எரியச் செய்து நன்கு நெருப்புத் துண்டங்கள் தனலோடு இருக்கும்படி சுத்தமாக வைத் திருப்பர். எரியாமல் நின்றுபோன கரிக்கட்டைகளை நீக்கிவிடுவர்.

அம்மனை அன்ன வாகனத்திலோ தனிப்பரிவட்டத்திலோ அலங்காரம் செய்து அருகில் உள்ள ஆற்றங்கரை அல்லது குளக்கரையிலிருந்து மேளதாளத்துடன் ஊர்வலமாக எடுத்து வருவர். தீயில் இறங்குவதாக வேண்டிக் கொண்ட ஆண் பெண் இருபாலரும் நீராடி மஞ்சள் நிற உடையணிந்து அரளிச் செடியின் கிளை ஒன்றை கையில் எடுத்துக் கொண்டு அம்மனைத் தொடர்ந்து ஊர்வலமாக வருவர். பால்குடம், காவடியும் கூட எடுப்பது உண்டு. அம்மனும் மற்றும் தீயில் இறங்குவோரும் கோயிலின் முன் புறத்தை அடைந்தபின் ஒவ்வொருவராக வரிசையாக தீயில் ஒருமுகமனத்துடன் இறங்கிச் செல்லும் காட்சி மெய் சிலிர்க்கச் செய்யும் ஒன்றாகும். இத்தீமிதி நிகழ்ச்சியும் ஒரு திங்கட்கிழமையன்றய தினம் தான் நடத்தப் பெறும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். விடையாற்றியின் போது அம்மன் புறப்பாடு மிகவும் சிறப்பாக நடத்தப் பெறும். இவ்வாறு அவ்வாண்டின் திரௌபதியம்மன் கோவிலின் திருவிழா முடிவுக்கு வருகிறது.

## 18-ஔ. விழாவில் சமூகப் பங்கேற்பு

கோயில் அமைந்த ஊர் கிராமமாக இருந்தாலும் நகரமாக இருந்தாலும் இவ்விழா நடத்தும் குழுவினர் பலரும் பலதொழில் செய்வோராகவும் பல இனத்தவராகவும் இருப்பதோடு விழாவின் காரணமாக சகோதர மனப்பான்மையுடன் நாம் அனைவரும் அம்பாளின் பிள்ளைகள் என்ற வகையில் ஒன்றினைகின்றனர். விழா நடக்கும் நாளில் தாங்கள் பங்கு பெறுவதோடு வெளியூர்களில் உள்ள தங்கள் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோரையும் வரவழைத்து விருந்தினராகக் கொண்டு உபசரிக்கின்றனர்.

மேலும் இவ்விழாக்கள் சிறுவர்கள் முதல் பெரிய வர்கள் வரை ஆண் பெண் பேதமின்றி கலந்துகொள்ள ஏற்ற விழாக்களாக உள்ளன. தவிர ஆண்டுக் கொருமுறை விழாக்குழுவினர் கூடும்போது அவ்வாண்டிற்கிடையே கிரமத்தில் ஏற்பட்ட நல்லதும் கெட்டதுமான பல நிகழ்ச்சி களைப் பற்றிப்பேசி தமக்குள் ஏதும் மனக்கசப்புகள் ஏற்பட்டிருப்பின் நீக்கிக் கொண்ட பின்னரே காப்புக் கட்டுகின்றனர்.

பொருட்செலவைப் பொறுத்தவரை ஆண்டுதோறும் இன்னின்ன செலவுகளை இன்னின்னாரின் குடும்பத்தவர் வழக்கமாகச் செய்வது எனும் முறை இருந்தபோதும் பொதுமக்களிடத்தும், வியாபாரிகளிடத்தும் நன்கொடை கள் பெற்றும் - சிலவூர்களில் தம்பதி வரி, குடும்ப வரி-போன்ற வரிகளில் வரி வசூல் செய்தும்-தேவையான தொகையைச் சேகரித்துக் கொள்கின்றனர். அந்தந்த ஆண்டு கிடைக்கும் தொகைக் கேற்ப விரிவாகவோ சுருக்கமாகவோ விழாவை நடத்துவது வழக்கம். ஆகவே இவ்விழாவில் முக்கிய பங்குவகிப்பது சமூக ஒற்றுமையே யன்றி பொருட்தேவை அல்ல என்பதை உறுதியாகக் கூறலாம்.

# 19. அரவானும் அலிகளும்

பிறவியில் ஆணாகவும் அல்லாது பெண்ணாகவும் அல்லாது அலியாய் ஆனோர்கள் வழிபடு தெய்வமாக இவ்வரவான்விளங்குகிறான். இது பற்றிய இருவேறு வகையான கதைகளைக் காண்போம்.

1. சிதம்பரத்தை அடுத்த கொத்தட்டை எனும் ஊரில் 'அன்றறுத்தான் மண்டபம்' என்று ஒன்று உள்ளது இங்கு ஆண்டுக்கொருமுறை அலிகள் பல்வேறு ஊர்களிலிருந்தும் வந்து கூடுகின்றனர் களப்பலியாக

போவதற்குமுன் அரவானுக்கு கண்ணனின் உடன்பிறவாத் தங்கை யொருத்தியை மணமுடித்து வைத்தனர் எனவும் இரவு மணம் செய்து கொண்ட அவள் இரவே கணவன் இறந்தமையால் காலையில் விதவையாகினாள் ஆதலால் தங்களைக் கண்ணனின் தங்கையாகக் கருதிக்கொள்ளும் இவ்வலிகள் அவ்வரவானை இரவில் மணம் கொண்டாற் போல் விழாச் செய்து, காலை இந்த அன்றறுத்தான் மண்டபத்திற்கு வந்து தரலியை அறுத்து விட்டு கூட்டம் கூட்டமாகக் கூடியமர்ந்து ஒப்பாரி வைத்து அழுவர். இவ்விழாவினைக் காண வந்தோர் இவ்வொப்பாரியின் நயம் வியந்து பொருள் அளிப்பர் ஆகவே அரவான் திருமணம் செய்து கொண்டான் எனவும் செய்தி கிடைக்கிறது.

2. பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள பிள்ளையார் குப்பம் என்ற ஊரில், அலிகள் ஆண்டுக் கொருமுறை கூடி விழா நடத்துக்கின்றனர். கோயிலுக்கு கூத்தாண்டவர் கோயில் என்பது பெயர். விழாவிற்கென கூடும் அலிகள் முதல் நாள் இக்கோயில் பூசாரியின் கையால் தாலியை வாங்கிக் கட்டிக்கொள்கின்றனர். மறுநாள் காலையில் தாலியை அறுத்துவிட்டு ஒப்பாரி வைத்து அழுகின்றனர்.

இவர்கள் கூறும் கதை களப்பலியாக இருந்த அரவான், கிருஷ்ணரிடம், சாவதற்கு முன் தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என தன் விருப்பத்தைத் தெரிவிக்கிறான். மறுநாள் சாகப் போகிறவனுக்கு முதல் நாள் எவரேனும் பெண் கொடுப்பரோ என கவலைகொண்ட கிருஷ்ணன், தானே ஒரு பெண்ணாக உருமாறி அரவானைத் திருமணமும் செய்து கொண்டார் எனவும், இரவு அரவான் இறந்துவிட்டமையால் காலையில் விதவையாகிய பெண்ணுரு நீங்கி தன்னுருக் கொண்டான் எனவும் கூறுவர்.

தங்களைக் கண்ணனின் வழிவந்தோராகக் கருதும் இவ்வலிகள் திருமணம் நடந்த அன்று புதுமணப் பெண் முதலிரவு அறையில் பால் பழத்தோடு கூட நுழைவது போல் தம்மை நன்கு அழகுபடுத்திக்கொண்டு அரவான் உருவை அலங்கரித்து வைக்கப் பெற்றிருக்கும் தேருக் கருகில் சென்று ஆடிப்பாடி மகிழ்வர். காலையில் தத் தம் தாலியை அறுத்துவிட்டு கூடியமர்ந்து ஒப்பாரி வைத்து அழுதுவிட்டுப் பின்னர் தலைமுழுகி விட்டு மாலையில் தத்தம் ஊர்களுக்குத் திரும்புவர். பல்வேறு மாநிலங்களிலிருந்தும்கூட இவ்வலிகள் இவ்விடத்திற்கு வருவது வழக்கம். இவ்வாறு பலவகையில் பிற்காலத்தே தோன்றிய சில நம்பிக்கையின் மூலம் அரவான் வழி பாடும் நிலவி வருகிறது எனலாம்.



# சொல்லடைவு


| | பக்க எண் |
|---|---|
| அக்கிரமம் | 95 |
| அக்கியானம் | 123 |
| அகளங்கம் | 3 |
| அங்கம் | 22 |
| அங்கி | 11 |
| அங்குசம் | 8 |
| அங்குசன் | 31 |
| அசல் மாதா | 115 |
| அட்சரம் | 118 |
| அடிக்கடி | 76 |
| அடைக்கலம் | 22 |
| அடிமை | 49 |
| அண்டபிண்டம் | 7 |
| அண்டர் | 34 |
| அண்டினோர் | 30 |
| அண்ணல் | 8 |
| அத்தி | 1 |
| அதட்டி | 29 |
| அதம் | 29 |
| அதம்பண்ணல் | 21 |
| அதிசீக்கிரம் | 17 |
| அதிபதி | 15 |
| அந்தகன் | 123 |
| அநித்தியம் | 106 |
| அநுக்கிரகம் | 35 |
| அபகாரியம் | 89 |
| அபசாரம் | 114 |
| அபஜெயம் | 30 |
| அபஜெயம் | 53 |
| அபூதி | 78 |
| அம்புயாட்சன் | 22 |
| அம்பலம் | 90 |
| அம்பு | 32 |
| அம்புயம் | 39 |
| அம்புவி | 42 |
| அமிர்த பட்சி | 13 |
| அரசக்கோ | 18 |
| அரசபதவி | 22 |
| அரம்பையர் | 14 |
| அரவக்கொடி | 22 |
| அரி | 5 |
| அரிவை | 22 |
| அருந்தனல் | 65 |
| அரும்பாவி | 78 |
| அருள் சத்தி | 102 |
| அலைகடல் | 44 |
| அவனி | 56 |
| அவமான தோஷம் | 60 |
| அவமானம் | 22 |
| அழித்தெழுத | 118 |
| அளகாபாரம் | 60 |
| அற்புதம் | 9 |
| அன்னங்கள் | 13 |
| அனுக்கிரகம் | 68 |
| அனுதினம் | 15 |
| அஸ்திரத்தூண் | 32 |

| | பக்க எண் |
|---|---|
| அஸ்திரம் | 35 |
| அஷ்டதிசை | 125 |
| ஆகமம் | 117 |
| ஆகூ | 8 |
| ஆசாபாசம் | 101 |
| ஆசாரமணி முகப்பு | 16 |
| ஆடகப்பொன் | 54 |
| ஆடகம் | 11 |
| ஆண்டை | 49 |
| ஆத்தி | 112 |
| ஆதிமூலம் | 34 |
| ஆதிவஸ்து | 41 |
| ஆபத்து வேளை | 57 |
| ஆயர்பாடி | 14 |
| ஆயன் | 5 |
| ஆயுதம் | 36 |
| ஆரம் | 22 |
| ஆரண்யம் | 49 |
| ஆரணி | 1 |
| ஆலகாலம் | 20 |
| ஆலகாலன் | 22 |
| ஆலகான் | 83 |
| ஆழி | 7 |
| ஆழி | 57 |
| ஆழிஆசனம் | 11 |
| ஆனை | 31 |
| ஆனைசேனை | 127 |
| இங்கிதன் | 2 |
| இங்கிதம் | 106 |
| இச்சணம் | 35 |

| | பக்க எண் |
|---|---|
| இடி | 63 |
| இடும்பை | 13 |
| இடைச்சி | 63 |
| இதம் | 15 |
| இரவி | 33 |
| இஷ்டமான | 17 |
| ஈ ஒட்ட இடம் | 5 |
| ஈராறு | 125 |
| ஈரெட்டு | 126 |
| ஈரேழு | 126 |
| உக்கிரம் | 122 |
| உச்சிக் குடுமி | 9 |
| உச்சிதம் | 42 |
| உசிதம் | 30 |
| உசிதம் | 49 |
| உடைமைக்காரன் | 130 |
| உத்தமன் | 27 |
| உத்தாரம் | 100 |
| உரகணை | 47 |
| உரகம் | 83 |
| உரல் | 64 |
| உரி | 7 |
| உரிமை | 64 |
| உன்னிதன் | 2 |
| எக்கியம் | 6 |
| எதிரி | 20 |
| எமலோகம் | 120 |
| எமன் | 34 |
| எல்லை பலி | 6 |
| எள்ளில் எண்ணெய் போல | 56 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| எள்ளும் தண்ணீர் | 94 | கப்பம் | 24 |
| ஏக தத்துவம் | 91 | கபம் | 45 |
| ஏழிரு புவனம் | 26 | கபாலம் | 130 |
| ஒட்டாரம் | 84 | கமலப்பதம் | 45 |
| ஒப்பிதம் | 37 | கயிலாயம் | 17 |
| ஒய்யாரம் | 11 | கர்த்தன் | 57 |
| ஒட்டியாணம் | 13 | கரிசனம் | 119 |
| ககனம் | 12 | கருமுகில் | 47 |
| கங்காளி | 1 | கருவறுத்தல் | 31 |
| கங்கையர் | 60 | கரு விழி | 119 |
| கச்சி | 17 | கல்கி அவதாரன் | 17 |
| கசடன் | 66 | கல்யாணி | 1 |
| கஞ்சன் | 127 | கலிக்கிடிகம்டர் | 39 |
| கட்டாரி | 46 | கலிகாலம் | 99 |
| கடயம் | 12 | கலைகள் | 24 |
| கடிமலர் | 14 | கவிஞன் | 2 |
| கடுக்கன் | 10 | கள்ளி | 115 |
| கண்ட சரப்பளி | 10 | களபம் | 3 |
| கண்ணல்மொழி | 37 | களரி | 10 |
| கத்தி | 40 | கற்பகம் | 121 |
| கத்திமுனை | 19 | கனகமணி | 12 |
| கதம்பம் | 33 | கனகமாலை | 13 |
| கதாயுதம் | 28 | கஸ்தூரி ரெங்கன் | 17 |
| கதித்து | 30 | காக்கை | 93 |
| கதிர் மதி | 14 | காகுத்தன் | 33 |
| கதிரொளி | 127 | காண்டாவனம் | 31 |
| கதிரோன் | 30 | காண்டீபம் | 33 |
| கந்த களபம் | 55 | காமன் | 62 |
| கந்தம் | 8 | காய்கனி | 49 |
| கபடம் | 7 | கார்ஆனை | 58 |

| | பக்க எண் |
|---|---|
| கார்குழல் | 21 |
| கார்முகில் | 45 |
| காரணி | 1 |
| காலனார் | 120 |
| காளிங்க மடு | 88 |
| கியானம் கிரிகை-1 | 34 |
| கிரீடம் | 15 |
| கிரீடி | 31 |
| கிருபாகரி | 1 |
| கிருபாலி | 130 |
| கிருபை | 29 |
| கிலேசம் | 114 |
| கிழங்கு | 49 |
| கிழவன் | 11 |
| கிளி | 55 |
| குஞ்சரம் | 11 |
| குஞ்சம் | 97 |
| குடலை | 9 |
| குடை | 7 |
| குண்டலம் | 33 |
| கும்பங்கள் | 25 |
| குயிலினம் | 13 |
| குரலோசை | 114 |
| குருக்கள்மார் | 127 |
| குருதி | 129 |
| குலவைரி | 39 |
| குவலயம் | 44 |
| குவலயமாள்வார் | 128 |
| குவளை | 114 |
| குழல் | 63 |

| | பக்க எண் |
|---|---|
| கூந்தல் | 124 |
| கெடி | 129 |
| கெடு | 112 |
| கெம்பீரன் | 11 |
| கெருடன் | 13 |
| கேவலம் | 19 |
| கைப்பிடி | 122 |
| கை போட்டுத் தருதல் | 59 |
| கொண்டல் | 7 |
| கொந்தவிழ் | 66 |
| கொந்தள ஓலை | 12 |
| கொலு | 11 |
| கொற்றவன் | 12 |
| கொற்றவை | 36 |
| கொன்றை | 9 |
| கோகுலம் | 64 |
| கோணகிரி | 7 |
| கோதிலா | 58 |
| கோதை | 36 |
| கோபஸ்திரீ | 14 |
| கோமளம் | 15 |
| கோமான் | 39 |
| கோல் | 10 |
| கோலாகலன் | 11 |
| கோழி | 8 |
| சக்கரக்குடை | 15 |
| சகலபேர் | 25 |
| சகலலோகம் | 65 |
| சகிதம் | 29 |
| சங்கதி | 68 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| சங்கீதம் | 15 | சாதகம் | 28 |
| சங்கு | 7 | சாபம் | 114 |
| சச்சுதன் | 40 | சாமரை | 18 |
| சண்டன் | 34 | சாமீபம் | 104 |
| சத்தியவான் | 23 | சாய்ந்தாடும் மயில் | 53 |
| சத்குரு | 14 | சாயுச்ச பதவி | 77 |
| சதிர் | 56 | சாலோகம் | 104 |
| சதுர்முகன் | 75 | சாஸ்திரம் | 45 |
| சதுரங்கம் | 127 | சிகரம் | 127 |
| சந்தனக் குடை | 8 | சிகாமணி | 33 |
| சந்திர ஆரம் | 95 | சிங்கள தேசம் | 125 |
| சபதம் | 20 | சிசுவதை | 65 |
| சம்பிரமம் | 8 | சித்தம் | 29 |
| சம்மதம் | 38 | சித்தர் | 3 |
| சம்மாரம் | 42 | சிந்தை | 22 |
| சமர் | 66 | சிம்மாசனம் | 15 |
| சமாதானம் | 18 | சிரசு | 62 |
| சமுதாடு | 48 | சிரம் | 8 |
| சமூகம் | 11 | சிலம்பு | 12 |
| சயனம் | 6 | சிவப்பு | 53 |
| சரங்கள் | 7 | சிலை | 7 |
| சரச சிங்கார வேலவன் | 47 | சீதை | 7 |
| சரணாகதி | 110 | சீமை | 5 |
| சரஸீருஹ | 56 | சீர்பாதம் | 21 |
| சரிகை | 54 | சீலன் | 99 |
| சரிதை | 2 | சுகம் | 13 |
| சல்லடம் | 20 | சுதர்மன் | 26 |
| சலுதி | 43 | சுதன் | 37 |
| சவரணை | 50 | சுந்தர கந்தன் | 80 |
| சன்னதி | 44 | சுந்தரி | 1 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| சுருக்குடன் | 6 | ஞான பூரணி | 1 |
| சுருதி | 104 | தக தகவென்று | 38 |
| சுழித் தெழுதி | 118 | தங்கப்பணிகள் | 53 |
| சூத்திரதாரி | 46 | தசரதன் | 13 |
| சூரன் | 8 | தண்டை | 96 |
| சூரியகுலம் | 85 | தத்தையர் | 54 |
| சூலம் | 120 | தந்தி | 5 |
| செகம் | 12 | தப்பிதம் | 3 |
| செக மாய்கை | 77 | தபசு | 61 |
| செங்கருடன் | 4 | தயாபரி | 3 |
| செங்கோல் | 121 | தயிர் | 7 |
| செந்தணல் | 56 | தரணி | 3 |
| செந்தாமரை | 12 | தலைஓடு | 94 |
| செந்தூர திலகம் | 39 | தலைப்பாகை | 10 |
| செயபேரிகை | 15 | தளங்கள் | 35 |
| செயம் | 18 | தற்பரம் | 105 |
| செழுமணி | 81 | தனுசு | 32 |
| சென்னி | 26 | தாட்சண்யம் | 12 |
| சேதி | 5 | தாட்டீகமாக | 191 |
| சேனாசமுத்திரம் | 127 | தாடகை | 30 |
| சேனை | 21 | தாதர் | 4 |
| சொக்கட்டான் | 4 | தாதிமார் | 57 |
| சொகுசு | 11 | தாமதம் | 35 |
| சொற்புலமை | 121 | தாயகம் | 72 |
| சோதிப் பர ஆகாச வெளி | 105 | தாரணி | 4 |
| சோபனங்கள் | 25 | தாவடம் | 54 |
| சோமன் | 3 | திகிரி | 118 |
| சோலை | 14 | திங்கள் | 12 |
| சௌந்தர்யன் | 33 | திரிசூலி | 1 |
| ஞான சித்தி | 102 | திரிபுரம் | 12 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| திருநாமம் | 15 | தேராளி | 124 |
| திருப்பதி | 7 | தேவகி | 3 |
| திருப்பூட்டல் | 83 | தேவரீர் | 21 |
| திருமகள் | 3 | தொட்டெழுதி | 118 |
| திருமேனி | 27 | தொண்டன் | 78 |
| திருவோடு | 62 | தொந்தி | 3 |
| திரேகம் | 63 | தொல்புவி | 66 |
| திலதம் | 9 | தோசை | 9 |
| தீர்க்கம் | 48 | தோடு | 12 |
| துங்கன் | 2 | தோஷம் | 83 |
| துட்டர் | 26 | நகம் | 21 |
| துட்டு | 11 | நச்சரவு | 57 |
| துண்டம் | 78 | நத்தி | 102 |
| துதி | 15 | நர்த்தனம் | 8 |
| துந்துபி | 8 | நவமணி | 12 |
| துப்பட்டி | 10 | நளினம் | 12 |
| துப்புரவு | 5 | நற்றமிழ் | 4 |
| துரந்திரன் | 2 | நஷ்டம் | 22 |
| துராக் கிருதன் | 4 | நாகம் | 7 |
| துரியா துரிய நீதம் | 77 | நாகரீகம் | 13 |
| துரைமகன் | 98 | நாகாபரணம் | 7 |
| துரோகி | 73 | நாசம் | 116 |
| துவாரகை | 16 | நாட்டியங்கள் | 25 |
| துன்னுதல் | 49 | நாடகசாலை | 11 |
| துளபத்திரம் | 17 | நாணற்பூ | 11 |
| துளப மாலை | 107 | நாரியர் | 117 |
| தூராக | 126 | நிகிதம் | 30 |
| தெரிசனம் | 1 | நித்தியம் | 16 |
| தெரிவை | 117 | நிதி | 15 |
| தேச சஞ்சாரம் | 62 | நிமித்தம் | 44 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| நிமிஷம் | 47 | பதறி | 224 |
| நியாயவான் | 23 | பதிவிரதை | 52 |
| நிர்ணயம் | 22 | பந்துஸ்தனம் | 12 |
| நிருமையாய் | 19 | பரதேசி | 62 |
| நிலவரம் | 18 | பரப்பிர்மம் | 114 |
| நிஜார் | 11 | பரம ரகசியம் | 117 |
| நீதம் | 23 | பரிசு | 7 |
| நீலி | 115 | பரிவாரம் | 128 |
| நுதல் | 32 | பல்லக்கு | 53 |
| நூதன வார்த்தை | 65 | பழமொழி | 24 |
| நூற்றுவர் | 30 | பழுது | 20 |
| நைவேத்தியம் | 9 | பளபளவென்ன | 39 |
| நேர்த்தியாய் | 46 | பற்குணன் | 32 |
| பகவான் | 6 | பக்ஷம் | 98 |
| பங்கயம் | 1 | பாசம் | 9 |
| பசலை | 114 | பாசவினை | 106 |
| பசும்பொன் | 54 | பாசுபதாஸ்திரம் | 32 |
| பஞ்சகல்யாணி | 55 | பாட்டன் | 125 |
| பஞ்சமாபாதகம் | 110 | பாண்டியன் | 1 |
| பஞ்சு | 60 | பாணமுனை | 35 |
| பட்சம் | 4 | பாதிமதி | 89 |
| பட்டம் | 19 | பார்த்திபன் | 3 |
| பட்டாபிஷேகஷ்ன் | 128 | பாலாழி | 82 |
| பட்டாடை | 10 | பாவக்கடல் | 77 |
| பட்டை நாமம் | 10 | பாவி | 20 |
| படுகளம் | 125 | பாவையர் | 15 |
| பணிவிடைக்காரர் | 15 | பாளையம் | 20 |
| பத்ரகாளி | 29 | பாற்கடல் | 47 |
| பத்தினி | 53 | பாஷை பந்திரம் | 5 |
| பதம் | 2 | பிச்சை | 62 |

| | பக்க எண் |
|---|---|
| பிஞ்ஞுகன் | 113 |
| பிர்மஹத்தி | 62 |
| பிராணன் | 68 |
| பிரபல்யம் | 31 |
| பிரபலம் | 74 |
| பீதாம்பரம் | 3 |
| புங்கவன் | 2 |
| புண்டரீகன் | 49 |
| புந்தி | 6 |
| புரட்டன் | 24 |
| புரவி | 40 |
| புரோகிதன் | 46 |
| புல்லாங்குழல் | 13 |
| புனல் | 89 |
| புஷ்பம் | 9 |
| புஷ்ப பாணம் | 63 |
| பூசுரர் | 4 |
| பூதநாதன் | 113 |
| பூதலம் | 23 |
| பூந்தளிர் | 128 |
| பூபதி | 10 |
| பூமிபாரம் | 119 |
| பூர்வக்யானம் | 117 |
| பூஜாபலன் | 72 |
| பூஜை | 98 |
| பெருமாள் | 7 |
| பேதகம் | 25 |
| பொங்கமுடன் | |
| பொங்கரவு | 40 |
| பொட்டு | 56 |

| | பக்க எண் |
|---|---|
| பொடிப்பொடியாக | 36 |
| பொய்யன் | 23 |
| பொரி | 9 |
| பொற்றடி | 11 |
| பைங்கிளி | 5 |
| பைந்தொடி | 114 |
| பையரவு | 22 |
| பைராகி | 1 |
| மகர குண்டலம் | 12 |
| மகானுபாவன் | 70 |
| மகிமை | 2 |
| மகுடதாரி | 15 |
| மகுடம் | 26 |
| மகுட்வர்த்தனா | 16 |
| மகேஸ்வரி | 2 |
| மச்சம் | 34 |
| மடிப்பு | 36 |
| மண்டபம் | 11 |
| மண்டலம் | 13 |
| மண்டலீகர் | 110 |
| மணிமகுடம் | 12 |
| மதகரி | 25 |
| மதலை | 22 |
| மதி | 15 |
| மந்திர வாள் | 67 |
| மயிர் | 5 |
| மரகதக்கொடி | 2 |
| மலர்மெத்தை | 96 |
| மனு நீதி | 121 |
| மனோபூசை | 72 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| மாங்கனி | 3 | மேனி | 13 |
| மாதுசிரோன்மணி | 87 | மைத்துனன் | 57 |
| மாந்தளிர் | 228 | மோகினி | 12 |
| மாய்கை | 53 | மோசம் | 108 |
| மாரீசன் | 32 | மோட்சம் | 77 |
| மானபங்கம் | 58 | மோடி | 97 |
| மிஞ்சுபுகழ் | 124 | மோதகம் | 9 |
| மின்மினி | 2 | மோதிரம் | 72 |
| மீனாட்சி | 1 | யக்யம் | 53 |
| முக்கண்ணன் | 2 | யுகாதிபதி | 127 |
| முத்துமோகன மாலை | 26 | யுத்தாயுத்தம் | 18 |
| முதலை | 88 | யோசனை | 59 |
| முப்புரம் | 30 | ரட்சித்தருளல் | 17 |
| மூப்புரிநூல் | 3 | ரணகளம் | 18 |
| மும்மதம் | 26 | ரணபேரிகை | 18 |
| மும்மாரி | 121 | ரத்தினக்கிரி | 28 |
| முரசுக்கொடி | 16 | ரதகஜ துரக பதாதிகள் | 123 |
| முராரி | 25 | ரம்பைகள் | 13 |
| முருக்கு | 9 | ரவிக்கை | 54 |
| முல்லை | 2 | ரவிகுலம் | 85 |
| முனிவர் | 3 | ராகம் | 13 |
| முஸ்தீபு | 59 | ராச்சியபாரம் | 21 |
| மெச்சுதல் | 23 | ராசராசர் | 128 |
| மெச்சும் | 126 | ராஜசபை | 24 |
| மெட்டி | 53 | ரெத்தினக் குடை | 15 |
| மெய்ப்பொருள் | 105 | ரெக்ஷியும் | 40 |
| மேதினி | 12 | லக்கினம் | 121 |
| மேளவாத்தியம் | 40 | வங்கையாய் | 58 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| வஞ்சகம் | 4 | விண்ணவர் | 128 |
| வஞ்சனை | 71 | வித்தகன் | 1 |
| வஞ்சி | 12 | வித்தியாதரர் | 4 |
| வடை | 9 | விதரணன் | 46 |
| வண்டணி நிறம் | 30 | விதிவசம் | 108 |
| வண்டன் | 13 | விந்தை | 12 |
| வண்ணமகன் | 124 | விபரம் | 122 |
| வதனரூபன் | 26 | விமலன் | 3 |
| வந்த விதி | 61 | வியா கூலம் | 70 |
| வம்பு | 56 | விரித்த மயிர் | 122 |
| வர்க்கம் | 32 | விருது | 6 |
| வரிசை | 8 | வில் | 31 |
| வருஷம் | 5 | விவரங்கள் | 64 |
| வல்லபை | 2 | விஷ்ணு | 16 |
| வல்லமை | 49 | வீரன் | 6 |
| வல்லயம் | 46 | வீரியம் | 29 |
| வள்ளல் | 64 | வெண்கவரி | 53 |
| வளையல் | 53 | வெண்ணீர் | 9 |
| வனசீலன் | 15 | வெண்ணெய் | 64 |
| வாகனம் | 57 | வெண்மதி | 98 |
| வாகைமரம் | 129 | வெண்மலர் | 8 |
| வாங்கு | 40 | வெள்ளி யம் கிரி | 113 |
| வாசல் | 8 | வெற்பு | 9 |
| வாசவர் | 4 | வெற்றிச் சங்கம் | 126 |
| வாடாமலர் | 54 | வேதகீதம் | 8 |
| வாரணம் | 1 | வேதியர் | 3 |
| வாரிசை | 39 | வேந்தன் | 1 |
| வாலி | 12 | வேலவர் | 10 |
| வாலைப் பிராயம் | 94 | வேள்மதன் | 56 |
| வாலைய வயது | 79 | வேறோடு | 125 |
| விகடசங்கீத லோலன் | 16 | ஸ்தனம் | 54 |
| விகண்டு | 52 | ஜனங்கள் | 23 |
| விகல்பம் | 96 | ஜானகி | 32 |
| விசனம் | 77 | ஜீவாத்மா | 34 |
| விசித்திரம் | 108 | ஜெகதலம் | 38 |
| விடை | 114 | | |

# 21. பயன் பெற்ற நூல்களின் பட்டியல்

**மகா பாரதம் :**

வில்லி புத்தூராழ்வார் இயற்றியது. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களின் மாணாக்கருள் ஒருவராகிய நா. கதிரைவேற் பிள்ளை அவர்களால் பரிசோதிக்கப்பெற்ற பிரதிக் கிணங்க சென்னை வித்யாரத் நாகர அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. 1930

**வில்லிபுத்தூராழ்வார் பாரதம் :**

திருவல்லிக்கேணி சே. கிருஷ்ணமாச்சாரியார் பதிப்பு வை. மு. நரஸிம்மன் வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கம்பெனி திருவல்லிக் கேணி - சென்னை-5,

T M S S - Tamil No. 1821. Page 271

**Srimad Bhagavatam**

Translated from Sanskrit By.
N. Raghunathan / Vigneshwara Publishing House.
Madras - Banglore - May 1976.

**ஸ்ரீ மகாபாரதம் :**

தொகுத்தவர் : கிருபானந்தவாரி. வெளியிட்டோர் : திருப்புகழமிர்தம், காரியாலயம் 89, சிங்கண்ண செட்டித் தெரு, சிந்தாரிப்பேட்டை சென்னை 2. 1970.
பக்கம் 303 (உத்தியோகபருவம்)

**Three Tamil OPERAS.**

Edited By. Kee. Vaa. Jagannathan, B. O. L.
Saraswathi Mahal (Publication) Series No. 16-1950

ராம் பிரிண்டர்ஸ், மானம்புச்சாவடி, தஞ்சாவூர்.